திரித்துவம்

25 புதிரான வினாக்களுக்கான விடைகள்

எழுதியவர்
மைக்கேல் பெட்ரின், Ph.D.,

தமிழில் மொழிபெயர்ப்பு
ரோசலின் காட்சன், சென்னை

வெளியீடு
சுவி. **Dr. S. தாயப்பன்**

நன்கொடை ரூ.10/–

திரித்துவம் – அக்டோபர், 2017 – 2,000

பதிப்பாசிரியரின் பிற நூல்கள்

		On Circulation	Rs.
1.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தமிழில்) (கன்னடம், மலையாளம், தெலுங்கு, இந்தி, ஒரிசா)	8,00,000	10/-
2.	**My Cry & Joyful Life (English)**	75,000	10/-
3.	சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்	3,20,000	10/-
4.	பாவத்தின் சம்பளம் நரகம் (தமிழ், கன்னடம், ஆங்கிலம்)	1,60,000	10/-
5.	இயேசு கிறிஸ்து உங்களோடு பேசுகிறார்	50,000	10/-
6.	என் ஊழியக்காரனே!?	20,000	10/-
7.	இந்தியாவுக்கு இயேசு தேவை, ஏன்?	40,000	10/-
8.	சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே!	40,000	10/-
9.	நீங்களே எனக்கு சாட்சிகள்	20,000	10/-
10.	உண்மையான கடவுள் யார்?	25,000	10/-
11.	அற்புத சுகமளிக்கும் வைதீஸ்வரர் இயேசு	20,000	10/-
12.	இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாகப் பரவவில்லை?	15,000	10/-
13.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு (பாகம் 1, 2)	15,000	10/-
14.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் (பாகம் 1, 2, 3)	20,000	10/-
15.	தானியேலின் தீர்க்கதரிசனம்	3,000	10/-
16.	கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு (தமிழ், கன்னடம்)	10,000	10/-
17.	திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி - கிறிஸ்டோபர்	15,000	10/-
18.	இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு – சுந்தர் ஏசுவடியான்	10,000	10/-
19.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 1)	5,000	10/-
20.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 2)	5,000	10/-
21.	பரலோகம் செல்ல எளிதான வழி	5,000	10/-
22.	அரிய வேதம் அறிய வேண்டிய வேதம்	10,000	10/-
23.	இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து (பாகம் 1, 2)	10,000	10/-
24.	விவிலியமும் விஞ்ஞானமும்	10,000	10/-
25.	இந்துக்களின் கேள்வியும் பதிலும் (பாகம் 1, 2)	10,000	10/-
26.	ஜெகோவா விட்னஸின் உபதேசமும் பைபிளின் பதிலும் கேள்வியும் (பாகம் 1, 2, 3)	5,000	10/-
27.	ஜெகோவா சாட்சிக்கு சத்தியத்தை அறிவிப்பது எப்படி (பாகம் 1,2)	5,000	10/-
28.	சிலை வணக்கம் சின்னாபின்னப்படுத்தியதே (தமிழ், ஆங்.)	5,000	10/-
29.	கிறிஸ்தவர்களை எதிர்ப்பதின் விளைவு (தமிழ், ஆங்கிலம்)	5,000	10/-
30.	தெய்வீக சுகம் உண்டா?- எபி சுந்தர்ராஜ்	10,000	10/-
31.	கிறிஸ்துவின் இரண்டாம் வருகை – சிஸ்டர் மரியா	10,000	10/-
32.	தமசோமா ஜோதிர்கமய (ஒரு பிராமணரின் சாட்சி)	5,000	10/-
33.	வேதமா? விஞ்ஞானமா? – **Rev.** பால்ராஜ்துரை	5,000	10/-
34.	மனிதனே நீ யார்? – **Rev.** பால்ராஜ்துரை	5,000	10/-
35.	சீரழிய சினிமா பாருங்கள் – **Rev.** பால்ராஜ்துரை	5,000	10/-
36.	தெய்வத்தை தேடுவோம் வாருங்கள் – **Rev.** பால்ராஜ்துரை	5,000	10/-
37.	இந்து மதம், இந்திய மதமா? – உறையூர் வளவன்	5,000	10/-
38.	ஆரோக்கிய வாழ்வுக்கு ஒரு தெய்வீக அழைப்பு	5,000	10/-
39.	கிறிஸ்தவர்களின் பொதுவான 100 சந்தேகங்களுக்குப் பதில்	5,000	10/-
40.	கலக்கலான கைப்பிரதிகள் - டாக்டர் உறையூர் வளவன்	5,000	10/-
41.	பரலோகம் செல்ல 500 ஸ்தோத்திர பலிகள் - சிஸ்டர் மரியா	3,000	10/-
42.	என் கண்கள் கண்டவை - டாக்டர் கிளிப்போர்டு குமார்	3,000	10/-
43.	உங்கள் செவிகள் கேட்க - டாக்டர் கிளிப்போர்டு குமார்	3,000	10/-
43.	மதமாற்றம் ஒரு பார்வை - **M.** டேவிட் டேனியல்	3,000	10/-
44.	இயேசுவே மெய்யான தேவன் - நசீலா பீவி (தமிழ், ஆங்கிலம்)	3,000	10/-
45.	சவாலை சமாளிப்பது எப்படி? - செலின் சாமுவேல் பால்ராஜ்	3,000	10/-
46.	ஒரே வழி இயேசுவின் உன்னதப் படைப்புகள் - **Rev.**ஜேக்கப் மனோகரன்	3,000	10/-
47.	சொர்க்கம் சொந்தமாகும் – டாக்டர் ஆனந்த் ஜோஷி		10/-
48.	யார் இந்த மனிதர் இயேசு?		10/-
49.	இராம ஜென்ம பூமி - டாக்டர் உறையூர் வளவன் (தமிழ்,ஆங்.)	5,000	5/-
50.	மதமாற்றமல்ல, மனமாற்றமே தேவை - **R.** ஸ்டான்லி	5,000	5/-

51.	மனமாற்றத்தை பெருக்குவது எப்படி? - **R.** ஸ்டான்லி	5,000	5/-
52.	வாழ்க்கையைவளப்படுததும் வார்த்தைகள்	5,000	5/-
53.	நாலு வேதங்களின் நாயகா இயேசு	5,000	5/-
54.	ஓர் அவசர அறைகூவல்	5,000	5/-
55.	கல்வாரி ஜெபக் குழுவும் இராணுவ சகோதரர்களும் (தமிழ், கன்னடம்)	5,000	5/-
56.	திரித்துவம் - பாஸ்டர் சாலமோன் ராஜா	5,000	5/-
57.	இஸ்லாமியர்களின் கேள்விகளுக்குப் பதில் - சாலமோன் ராஜா	5,000	5/-
58.	இந்திய ஊழிய உயர்வுக்கு ஒரு புதிய பார்வை	5,000	5/-
59.	ஆனந்த புதுவாழ்வு கண்டேன்	35,000	5/-
60.	திரும்பிப் பார்க்கிறேன் - டாக்டர் புஷ்பராஜ்	3,000	5/-
61.	ஒரு சரஸ்வதியின் கதை - டாக்டர் உறையூர் வளவன்	3,000	5/-
62.	திருமறை தரிசனங்கள் - டாக்டர் உறையூர் வளவன்	3,000	5/-
63.	திருமறை துணுக்குகள் - டாக்டர் உறையூர் வளவன்	3,000	5/-
64.	கள்ள உபதேசம் உருவாகக் காரணம் - திருப்பூர் சாலமோன்	3,000	5/-
65.	இந்தியாவில் சாதனை படைத்த யூதர்கள்	3,000	5/-
66.	இஸ்ரேல் பாலஸ்தீன பிரச்சனைகள்	3,000	5/-
67.	இஸ்ரேல் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட தேசம்	3,000	5/-
68.	பாவம் பலவிதம் - **Rev.** ராபர்ட் டேனியல்	3,000	5/-
69.	யெகோவா தேவன் - **Rev.** ராபர்ட் டேனியல்	3,000	5/-
70.	இப்படி செய்தால் நீங்கள் பாக்கியவான்கள் - **Rev.** ராபர்ட் டேனியல்	3,000	5/-
71.	666 பயோசிப் எச்சரிக்கை! - சிஸ்டர் மரியா	6,000	5/-
72.	இல்லவே இல்லாத இந்து மதம் - பீட்டர் அலெக்சாண்டர்	3,000	5/-
73.	கர்வாப்சி - பீட்டர் அலெக்சாண்டர் (தமிழ், ஆங்கிலம்)	3,000	5/-
74.	மந்தை பெருக மகத்தான மாற்றங்கள்	5,000	5/-
75.	உயிர் கொடுத்து உயர்த்தும் உன்னத தேவன்		5/-
76.	மதமாற்ற தடைச்சட்டம் - பீட்டர் அலெக்சாண்டர்		5/-
77.	சிலுவையில் சிந்திய7 சிவப்பு முத்துக்கள் -உறையூர் வளவன்		5/-
78.	வேத இரகசியங்கள்		5/-
79.	சொர்க்கமும் நரகமும் உங்கள் கையில் (வாலிபர்களுக்கு)		5/-
80.	இறுதிப் பயணம்		5/-
81.	இது உங்கள் உயிர் காக்கும் முயற்சி - சாந்திதேவி	10,000	2.50
82.	மோட்ச வாழ்வுக்கு வழி என்ன- சாந்திதேவி	5,000	2.50
83.	இன்றைய பெற்றோரின் பாவம் நாளை பிள்ளைகளுக்குச் சாபம் - செலின் சாமுவேல்	3,000	2.50
84.	திருமறையும் ஜாதிகளும் - டாக்டர் உறையூர் வளவன்	3,000	2.50
85.	எப்படி ஜெபிக்கணும்? - டாக்டர் கிளிஃபோர்டு குமார்	3,000	2.50
86.	ஞானஸ்நானமும், பரிசுத்தவ ஆவியும் அபிஷேகமும் - **Rev.** ராபர்ட் டேனியல்	3,000	2.50
87.	உன் தேவனை சந்திக்க நீ ஆயத்தமா? - **R.** ஸ்டான்லி (தமிழ், ஆங்கிலம், இந்தி, கன்னடம்)		2.50
88.	ஸ்ரீராமஜெயம்		2.50
89.	மருத்துவத்தை வென்ற சாட்சிகள் - பால்ராஜ்துரை		2.50
90.	இந்துமத சித்தாந்தங்களும் திருமறையும் - உறையூர் வளவன்		2.50
91.	மனித நேயம் காக்கும் கிறிஸ்தவம்		2.50
92.	ஈடு இணையில்லாத ஈவு - உறையூர் வளவன்		2.50
93.	இயேசு இணையற்றவரா? - ஆர்.ஸ்டான்லி		2.50
94.	இரண்டு கேள்விகள் - **Dr.** சாம் ஏசுதாஸ்	3,000	2.50
95.	மாட்டுக்கறி தடை - உறையூர் வளவன்		2.50
96.	**DVD** ஆனந்த புதுவாழ்வு **(Telefilm)**		100
97.	**DVD** அமாவாசை **(Telefilm)**		100
98.	**VCD** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (தமிழ், கன்னடம், ஹிந்தி, மலையாளம்)	6,50,000	10/-
99.	**VCD** எழுந்து காட்டுவோம் (தமிழ்)	20,000	10/-
100.	**VCD** முக்திக்கு வழி கிறிஸ்தவமே (தமிழ்)	15,000	10/-
101.	**VCD** கதாகாலட்சேபம் (தமிழ்	20,000	10/-
102.	**VCD** தேசம் சந்திக்கப்படணுமே கர்த்தாவே (தமிழ்)	10,000	10/-

103.**CLARIFIED**
104.**MAGNIFIED**
105.**TRINITY**
106.**POLYGAMY**

ANSWERS TO 25 INTRIGUING QUESTIONS OF BIBLE BY Rev. MICHAL PERRIW, Ph.D. **(EACH Rs.10/-)**

இந்த நூல் மற்றும் விசிடி கிடைக்கும் முகவரி

எஸ்.தாயப்பன்
12, ஜி.டி.நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ -1,
சேலையூர் பேபாஸ்ட், சென்னை - 600 073.
தொலைபேசி: 044-22234256. மின்னஞ்சல்: **sakthiprabha@yahoo.com**

நூலை அனுப்ப சில விதிகள்:

ஒவ்வொரு நூலுக்கும், விசிடிக்கும் நன்கொடை ரூ.10/- + தபால் செலவு ரூ.1. **M.O., D.D.** அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை **M.O** பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் வெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி அனுப்புங்கள். உங்கள் தொலைபேசி, செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். செக் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. **MO, DD** பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும். விசிடி அனுப்ப தபால் செலவு மட்டும்: கொரியரில் பதிவு பார்சலில் அனுப்ப (தமிழ்நாட்டிற்குள்) 1 முதல் 15 விசிடி வரை அனுப்ப ரூ.50/-. 16 முதல் 25 விசிடி அனுப்ப ரூ.60/-

100 விசிடிக்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் கே.பி.என். பார்சல் சர்வீஸ் மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

வங்கியில் பணம் கட்டி புத்தகம் பெற...

கீழ்க்கண்ட வங்கிக் கணக்கில் பணம் செலுத்தி விட்டு எங்களுக்கு தகவல் அளித்தால், நீங்கள் வேண்டும் புத்தகங்கள் / **CD** அனுப்பி வைக்கப்படும். வங்கிக் கணக்கு விபரம்:

எஸ்.தாயப்பன் (S. THAYAPPAN)
சிட்டி யூனியன் பேங்க், சிட்லபாக்கம், சென்னை - 600 064
A/c எண்: 295001001980044. IFS Code: CIUB 0000295

பிறகு கண்டிப்பாக தகவல் அளிக்க வேண்டிய தொலைபேசி எண்:

T. கார்த்திகேயன், 8680859894, 044 - 2223 4526, 044 - 4355 2899

நேரில் வர...

நேரில் நூல்களை பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் கிழக்கு தாம்பரம் கிறிஸ்டியன் காலேஜ் பஸ் ஸ்டாப்பிலிருந்து வேளச்சேரி மார்க்கமாக கிளம்பும் அனைத்து **M** சீரிஸ் மற்றும் வெள்ளை போர்டு பஸ்களில் ஏறி கேம்ப் ரோடுக்கு அடுத்த பஸ் ஸ்டாப்பான மஹாலட்சுமி நகரில் இறங்கவும். ஷேர் ஆட்டோ என்றால் ரூ.10 மட்டுமே. இடதுபுறம் உள்ள சிட்லபாக்கம் மெயின் ரோட்டில் 1/2 கிலோ மீட்டர் உள்ளே வரவும். வலதுபுறம் **K.K.** மெடிக்கல் ஷாப்பை அடுத்துள்ள வலது புற ஜி.டி. நாயுடு தெருவில்,இடது புறத்தில் இரண்டாவது வீடு.

முகவுரை

தேவனைப் பற்றிய கருத்தும் கருப்பொருளும் மிக விஸ்தாரமானது, அவற்றை விவரிக்க நித்தியமும் போதாது ! தேவன் அண்டசராசரத்திலும் பெரியவரும், வானங்களில் உயர்ந்தவருமாக இருக்கிறார். சிருஷ்டிக்கப்படாத இந்த தேவனுடைய சிறு பகுதியைக் கூட பகுத்தறிந்து விளங்கிக் கொள்ளுவது பாவ சிருஷ்டிகளுக்கு சாத்தியமற்றது.

தேவன் சிருஷ்டித்த ஏராளமான காரியங்கள் இன்னும் நமக்கு இரகசியமாகவே காணப்படுகின்றன. இயற்கையின் செயல்பாடுகளும் நியமங்களும், அதிலுள்ள ஜீவராசிகளும் இன்னும் நம் கற்பனைக்கு எட்டாதவையாக உள்ளன. சிருஷ்டிக்கப்பட்ட காரியங்களே இன்னும் நமக்கு இரகசியமாக இருக்குமானால், சிருஷ்டித்த தேவன் எத்தனை எல்லையற்ற இரகசியத்தைக் கொண்டிருப்பார்? எனவேதான் தேவன், “**மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, … நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்**” (உபாகமம் 29:29) என்று விளம்பியிருக்கிறார்.

எழுதப்பட்ட தேவனுடைய வசனமாகிய வேதாகமும், மாம்சமாக வந்த வார்த்தையானவராகிய இயேசுவும்தான் தேவனுடைய இரகசியத்தை அறிந்து கொள்வதற்கு நமக்கிருக்கும் இரு முக்கிய ஆதாரங்கள். தேவனைப் பற்றிய இந்தப் பாடத்தில், அவருடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடி, குறைந்தது அடிப்படைக் காரியங்களையாவது சரியாகக் கற்றுக் கொள்ள முயற்சி செய்வோம்.

என்னுடைய 20 ஆண்டு கால ஊழியத்தில் உண்மையுள்ள அநேகர் தேவனைப் பற்றி அதிகமான கேள்விகளைக் கேட்டிருக் கிறார்கள். “**திரித்துவம், 25 புதிரான வினாக்களுக்கான விடைகள்**” என்ற இந்த புத்தகத்தில் என் நினைவில் நிற்கும் 25 மிகச்சிறந்த கேள்விகளைத் தெரிவு செய்து பதிலளித்திருக்கிறேன். இதை வாசிப்பதில் உங்களுக்கு சந்தோஷமும், ஆசீர்வாதமும், வளமும் பெருகும் என நம்புகிறேன் !

– மைக்கேல் பெட்ரின்

பதிப்புரை

பரிசுத்த வேதாகமத்திற்கு ஈடு இணை இந்த உலகத்தில் எதுவுமே இல்லை. மற்ற வேதங்கள் அனைத்தும் தெய்வத்தைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் தெய்வமே தன்னைக் குறித்து எழுதின ஒரே வேதப் புத்தகம் பரிசுத்த வேதாகமம். பைபிளை ஒருவன் படிக்கும் வரை அவன் முழுமை ஆவதில்லை என மகாத்மா காந்தி கூறியிருக்கிறார். கிறிஸ்தவர்கள் அல்லாத அநேகம் தேசத் தலைவர்கள், தத்துவ விஞ்ஞானிகள், அறிவு ஜீவிகள் பைபிளை போற்றுகின்றனர். படித்து பயன்படுத்துகின்றனர். ஆனால் கிறிஸ்தவர்களில் அநேகர் ஒரு தடவை கூட முழுமையாக பைபிளை படிக்காதிருக்கிறார்கள் என்பது ஒரு பரிதாபத்துக்கு உரியது.

இது கடைசிக்காலம். பைபிளில் ஏற்கனவே தீர்க்கதரிசனமாகக் கூறியிருப்பது போன்று இப்போது கிறிஸ்தவத்தை எதிர்ப்பவர்கள் இன்று அதிகம் பெருகி வருகிறார்கள். வேதாகம சத்தியத்தில் சற்று பலவீனமாக இருப்பவர்களிடம் சில சிக்கலான கேள்விகளைக் கேட்டு, அவர்கள் சரியான பதில் சொல்ல திணறுவதை அப்படியே வீடியோ எடுத்து பேஸ்புக், வாட்ஸ் அப்பில் சிலர் வெளியிடுன்றனர். யார் என்ன கேள்விகள் கேட்டாலும் அதற்கு சரியயன பதில் பைபிளில் இருக்கின்றது. குறை நம்மிடம்தானே ஒழிய, பைபிளில் இல்லை.

தமிழர்கள் வந்தாரையும் வாழ வைப்பவர்கள். எங்கு செல்கின்றார்களோ அதையும், அங்குள்ளவர்களையும் வாழ வைப்பாரகள். பாஸ்டர் என்.ஆர். டேவிட் பெங்களூரில் செட்டிலாகி அங்கு ஊழியம் செய்து வருகிறார்கள். அவ்வப்போது தமிழகம் வந்து பல ஊர்களில் செய்தி கொடுத்தும் வருகிறார்கள். அவர் ஒரு ஜெப வீரர். ஆண்டவர் அவருக்கு கொடுத்த தரிசனம் ‘Pray for Karnataka’. அதற்காகவே கல்வாரி ஜெபக்குழு என்று ஒன்றை ஆரம்பித்து கர்னாடகாவிலுள்ள 30 மாவட்டங்களுக்காகவும் ஜெபித்து வருகின்றனர். வருடத்திற்கு 2 அல்லது 3 மாவட்டங்களை

தேர்ந்தெடுத்து, அந்த மாவட்டத்திலுள்ள ஒரு முக்கிய நகரத்திலுள்ள எல்லா திருச்சபைகளையும் ஒன்றிணைத்து அந்த மாவட்டத்திற்காக, அங்கு மூன்று நாட்கள் உபவாச ஜெபக் கூட்டம் நடத்தி வருகிறார். அப்படி இதுவரை 14 மாவட்டங்களில் நடத்தி முடித்திருக்கிறார். அந்த மூன்று நாட்களிலும் சாட்சியையும், செய்தியையும் அளிக்க என்னை அழைப்பார். அப்படி கோலார் மாவட்டத்திற்காக ஏற்பாடு செய்திருந்த ஒரு உபவாசக் கூட்டத்தில் உலகம் முழுக்க பல்வேறு நாடுகளில் ஊழியம் செய்யும் Rev. Dr. மைக்கேல் பெட்ரின் அவர்களை சந்திக்கும் வாய்ப்பு பெற்றேன். அப்போது அவர் எழுதிய 'CLARIFIED', MAGNIFIED', 'POLIGAMY', 'TRINITY' என்கிற நான்கு புத்தகங்கள் கிடைத்தன. அவைகளை படித்தவுடன் ஆச்சரியப்பட்டுப் போனேன். ஒவ்வொரு புத்தகத்திலும் பைபிள் குறித்து கேட்கப்படும் எடக்குமடக்கான, சிக்கலான 25 கேள்விகளுக்கு மிக அருமையான, தெளிவான, பதில்களை எழுதியிருந்தார். இப்புத்தகங்களை ஒவ்வொரு போதகரும், ஊழியக்காரர்களும், திருச்சபை மக்களும் கண்டிப்பாகப் படிக்க வேண்டும் என்கிற தாகத்தில் அவரின் அனுமதியோடு அப்புத்தகங்களை ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிட தேவன் கிருபை பாராட்டினார். இந்தப் புத்தகத்தை மொழிபெயர்த்த அருமை சகோதரி ரோசலின் காட்சன்னுக்கு என் நன்றி, பாராட்டுக்கள் உரியது. படியுங்கள். படித்து மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். சத்திய வேதத்தில் பலப்படுவோம். எக் கேள்விகளுக்கும் பதிலளிப்போம். நம் தேசம் கர்த்தருக்கு சொந்தமாக ஜெபிப்போம்.

அன்புடன்

உங்கள் சகோதரன்,

எஸ்.தாயப்பன்

பொருளடக்கம்

1. இயேசு தேவனானால், ஏன் அவர் ஒருமுறை கூட "நானே தேவன்" என்று சொல்லவில்லை?

2. இயேசு "தேவனா?" அல்லது "தேவகுமாரனா?" வேதம் இரண்டு விதமாகவும் குறிப்பிடுகிறது!

3. இயேசு தம்மை "மனுஷகுமாரன்" என்று சொல்லிக் கொண்டதன் மூலம் தாம் தெய்வம் என்பதை மறுக்கவில்லையா?

4. யோவான் 3:16–இல் இயேசு தேவனுடைய ஒரேபேறான குமாரன் எனப்படுகிறார். எனவே, இயேசு பேறானவரா அல்லது கடந்து போன நித்தியத்தில் பிதாவினால் சிருஷ்டிக்கப்பட்டவரா?

5. பிதா தேவனாக இருக்கிறார், குமாரனும் தேவனாக இருக்கிறார், பரிசுத்த ஆவியும் தேவனாக இருக்கிறார். எனவே, எப்படி மூன்று தேவன் அல்லாமல் ஒரே தேவனாக இருக்க முடியும்?

6. ஏன், "என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" (யோவான் 14:28 பார்க்கவும்) என்று கூறினார் இயேசு? திருத்துவத்தில் படிநிலை வரிசை உண்டா?

7. தேவனே தேவனைக் கைவிடுவது எவ்வாறு?– (மத்தேயு 27:46). அதில் ஒரு மனம் எங்கே இருக்கிறது?

8. இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பியவர் யார்? வேதாகமம் இந்த விஷயத்தில் முன்னுக்குப் பின் முரணாக இருப்பது போலத் தோன்றுகிறதே!

9. திரித்துவம் என்ற கருத்து புதிய ஏற்பாட்டில் மட்டும் காணப்படுவது ஏன், பழைய ஏற்பாட்டில் கண்கூடாக புலப்படாதது ஏன்?

10. தேவத்துவத்தின் ஒவ்வொரு நபரும் முழுமையாக தேவனாக இருக்கிறார்களா அல்லது மூன்று நபர்களும் ஒன்று சேரும்போதுதான் தேவன் முழுமையடைகிறாரா?

11. இயேசு சத்தியமாகவும் முழுமையாகவும் தேவனாக இருப்பின் தம்முடைய இரண்டாம் வருகையின் நாளையும் நேரத்தையும் பற்றி தமக்கே தெரியாது எனச் சொல்லியது ஏன்?

12. பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் என்றோ தேவன் என்றோ குறிப்பிட்டுச் சொல்லும் ஒரு வசனம் கூட வேதத்தில் இல்லை. எனவே, பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு தேவத்துவத்தில் இடம்பெற முடியும்?

13. வேதம் பரிசுத்த ஆவியை "தேவனுடைய வல்லமை" என்று சொல்லவில்லையா? "தேவனுடைய வல்லமை" ஓர் "நபராக" இருக்க முடியுமா?

14. பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிட வேதம் "அது" அல்லது "அதனுடைய" என்னும் பொதுப்பாலை உபயோகிக்கிறது. ஆகவே பரிசுத்த ஆவி ஒரு நபரல்ல என்பதற்கு அது ஒரு சான்றாகிவிடாதா?

15. வெளிப்படுத்தின விசேஷத்தில் "தேவனுடைய ஏழு ஆவிகள்" என்பதன் பொருள் என்ன?

16. மன்னிக்க முடியாத, பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம் மற்றும் தூஷணம் எவை?

17. ஏறக்குறைய எல்லா நிருபங்களின் துவக்கத்தில் உள்ள அப்போஸ்தல வாழ்த்துதல்களிலும் பிதா மற்றும் குமாரனிடமிருந்து வாழ்த்துதல் கொடுக்கப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவரின் பெயர் அங்கு காணப்படாதது ஏன்?

18. எல்லாவற்றிற்கும் ஓர் துவக்கம் இருக்க வேண்டும் என்பதால், தேவனை சிருஷ்டித்தவர் யார்?

19. சிருஷ்டிக்கப்படாத மூன்று நபர்கள் எவ்வாறு நித்தியத்திலிருந்து ஒன்றாக பிழைத்திருக்க முடியும்?

20. தேவனுக்கு சரீரமும், வடிவமும், அமைப்பும் உண்டா?

21. நாம் கொண்டிருப்பது போன்ற பாலினம் தேவனுக்கு உண்டா? அவர் ஆணா, பெண்ணா?

22. யோவான் 1:1 –இன் அர்த்தம் என்ன? எவ்வாறு "வார்த்தை" ஒரே சமயத்தில் "தேவனோடு" இருக்கவும், "தேவனாக" இருக்கவும் முடியும்?

23. தேவன் "அழியாமையுள்ளவர்" – (1 தீமோத்தேயு 6:16) அதாவது தேவன் ஒருபோதும் மரிக்க முடியாது என்று வேதம் எடுத்துக் காண்பிக்கிறது. சிலுவையில் அழியாமையுள்ள தேவன் மரித்ததுண்டா?

24. பிதா தமக்கும் தேவனாயிருக்கிறார் என்று இயேசு கூறினார். "நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்" – (யோவான் 20:17) என்றார். தேவன் எவ்வாறு தமக்கு மேலாக ஒரு தேவனைக் கொண்டிருக்க முடியும்?

25. "திரித்துவம்" என்பது வேதத்தில் காணப்படாத போதும் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அதனை விசுவாசிப்பது ஏன்?

திரித்துவம்

25 புதிரான வினாக்களுக்கான விடைகள்

1. இயேசு தேவனானால், ஏன் அவர் ஒருமுறை கூட ‘‘நானே தேவன்’’ என்று சொல்லவில்லை?

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இயேசுவே தேவன் என்று முக்கியத்துவப்படுத்தி அறிவிக்கின்றன. வரப்போகும் மேசியாவைக் குறித்து தீர்க்கதரிசியாகிய ஏசாயா இவ்வாறு எழுதினார்: ‘‘**நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்**’’. – ஏசாயா 9:6.

பெத்லகேம் முன்னணையில் 2000 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தவர் **“வல்லமையுள்ள தேவன்”** எனப்படுகிறார். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசியினால் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்ட அவருடைய நாமத்தின் அர்த்தத்தை அவர் பிறந்தபோது புதிய ஏற்பாடு பதிவு செய்கிறது. தீர்க்கதரிசியின் மூலமாய் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவன்: ‘‘**இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தமாம்.**’’ – மத்தேயு 1:22, 23. இயேசு மனுவுருவானபோது **“நம்மோடிருக்கும் தேவனானார்.”**

சரி, ஏன் இயேசு **“நானே தேவன்”** என வெளிப்படையாக அறிவிக்கவில்லை? இந்த கேள்வியை விளங்கிக் கொள்ள, இதன் பின்னணியைப் பார்ப்பது அவசியம். இஸ்ரவேலின் தலைவர்கள் மற்றும் பொது ஜனங்களின் ஆவிக்குரிய நிலை மிகவும் பின்தங்கியிருந்தது. இயேசுவும் கூட தம்மை மேசியாவாகிய கிறிஸ்து என்று தெளிவாகப் புரிந்து கொண்ட தம் சீஷரிடம் இந்த சத்தியத்தை அந்த

சமயத்தில் யாரிடமும் சொல்ல வேண்டாமென்று கூறினார். இயேசு சொல்வதைக் கேளுங்கள்: ''**அப்பொழுது, தாம் கிறிஸ்துவாகிய இயேசு என்று ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு தம்முடைய சீஷர்களுக்கு கட்டளையிட்டார்.**'' – மத்தேயு 16:20.

இத்தகைய வினோதமான கட்டளையை ஏன் அவர் பிறப்பித்தார்? அவர் ஒருபோதும் அவர்களிடம் சொல்லவில்லை என்றல்ல, சொல்லப்பட்டும் விசுவாசிக்க மறுத்தார்கள் என்பதே உண்மை. ஒருமுறை யூத அதிபதிகளை இயேசு சந்தித்த நிகழ்வைப் பாருங்கள். அப்பொழுது யூதர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு: ''**எதுவரைக்கும் எங்கள் ஆத்துமாவுக்குச் சந்தேகம் உண்டாக்குகிறீர், நீர் கிறிஸ்து வானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும் என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அதை உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் விசுவாசிக்கவில்லை; என் பிதாவின் நாமத்தினாலே நான் செய்கிற கிரியைகளே என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறது.**'' – யோவான் 10:24, 25.

கிறிஸ்துவைப் பற்றிய அவர்களுடைய கருத்து முற்றிலும் வித்தியாசமானதாக இருந்தது. அவர்கள் எதிர்பார்த்திருந்தது, ரோமருடைய ஒடுக்கத்திலிருந்து தங்களை விடுவிக்கும் அரசியல் ரீதியான ஒரு மேசியாவை. எனவேதான் எங்கும் சென்று இவர் கிறிஸ்துவல்ல என்று எல்லோரிடமும் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார்கள். இது மேலும் தம் ஊழியத்திற்குத் தடையாக இருக்குமென்பதால்தான், இயேசு தம் சீஷரிடம் தாமே கிறிஸ்து என்பதை யாரிடமும் சொல்லாதிருக்க எச்சரித்தார்.

மற்றுமொரு சமயத்தில், தாம் சுகமாக்கின ஒரு குஷ்டரோகியிடம் இயேசு அந்த அற்புதத்தைப் பற்றி யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று கூறுகிறார். ஆனால் அவனோ அதற்கு மாறாகச் சென்று பிரசித்தம் செய்து விட, அது அந்த சமயத்தில் அவருடைய ஊழியத்திற்கு தடையாகிப் போனது.

ஆயினும் நீ போய், ஆசாரியனுக்கு உன்னை காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம் மோசே கட்டளையிட்டிருக்கிறவைகளை அவர்களுக்கு சாட்சியாகச் செலுத்து என்று கண்டிப்பாய் சொல்லி, உடனே அவனை அனுப்பிவிட்டார். அவனோ புறப்பட்டுப் போய்: ''**இந்தச் சங்கதி எங்கும் விளங்கும்படியாகப் பிரசித்தம் பண்ணத்**

தொடங்கினான். அதினால் அவர் வெளியரங்கமாய் பட்டணத்தில் பிரவேசிக்கக்கூடாமல், வெளியே வனாந்தரமான இடங்களில் தங்கியிருந்தார்; எத்திசையிலுமிருந்து ஜனங்கள் அவரிடத்திற்கு வந்தார்கள்.'' – மாற்கு 1:44, 45.

இயேசுவின் சீஷர் வெளிப்படையாகவும் தைரியமாகவும் அவரே கிறிஸ்து என்று உலகத்திற்கு அறிவிக்கவிருக்கும் ஒரு நேரமும் இருந்தது. இயேசுவின் கட்டளைப்படி அந்த நேரம் அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்பாக வருவதாகும். மறுரூப மலையின் அனுபவத்திற்குப் பின்னர், ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் அவர்கள் அங்கு கண்ட தம் மகிமையைப் பற்றி வெளியில் சொல்ல வேண்டாமென்று சொல்லியிருந்தார். இதை மாற்கு பின்வருமாறு பதிவு செய்கிறார்: அவர்கள் மலையிலிருந்து இறங்குகிறபோது, அவர் அவர்களை நோக்கி: ''**மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும், நீங்கள் கண்டவைகளை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்று கட்டளையிட்டார்.**'' – மாற்கு 9:9.

அவர் காலத்து யூதர்கள் அவர்தாம் கிறிஸ்து என்பதையே ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், கிறிஸ்துவே தேவன் என்பதை எவ்வாறு விளங்கிக் கொள்ளுவார்கள்? இப்படியிருக்க, கிறிஸ்து எப்போதாவது வெளிப்படையாக "நானே தேவன்'' என்று சொல்லியிருந்தாலும், அதுவே எல்லா வாசல்களையும் துரிதமாக அடைத்து, அவருடைய ஊழியத்தை பெருமளவில் பாதித்திருக்கக் கூடும். ஆனால் இந்தத் தவறைச் செய்துவிடாதிருக்கும் ஞானம் கிறிஸ்துவுக்கு இருந்தது.

இயேசு ஒருபோதும் தாம் தேவன் என்பதை வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும், அவருடைய கிரியைகளும், அநேக இடங்களில் அவர் சொன்ன உயரிய கூற்றுகளும் அவர் தம்மை சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு இணையாகக் காண்பித்தார் என்பதை அவர்களுக்குத் தெளிவாக உணர்த்தியிருந்திருக்க வேண்டும். பல சமயங்களில் இயேசுவின் சத்துருக்கள் அவர் சொல்ல வந்ததை மிகத் துரிதமாக விளங்கிக் கொண்டார்கள். யோவான் 10 ஆம் அதிகாரத்தில், இயேசுவுக்கும் மதத்தலைவர்களுக்கும் இடையில் மிக சுவாரசியமான ஒரு உரையாடல் நடக்கிறது. அந்தப் பத்தியை வாசிப்போம். இயேசு பின்வருமாறு சொன்னார்:

‘‘நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார். அப்பொழுது யூதர்கள் மறுபடியும் அவர்மேல் கல்லெறியும்படி, கல்லுகளை எடுத்துக் கொண்டார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் என் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன், அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள் என்றார். யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன்மேல் கல்லெறிகிறதில்லை; நீ மனுஷனாயிருக்க, உன்னை தேவன் என்று சொல்லி இவ்விதமாக தேவதூஷணஞ் சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம் என்றார்கள்.’’ – யோவான் 10:3033.

இங்கு இயேசு தங்களிடம் மறைமுகமாக சொன்னதை அவர்கள் விளங்கிக் கொண்டார்கள். அவர் தம்மை தேவனென்று சொல்லிக் கொள்ளுகிறார் என்பது அவர்களுக்கு தெரிந்ததால்தான் அவரை கல்லெறிந்து கொலை செய்ய கற்களை எடுக்கிறார்கள். மற்றுமொரு சமயத்தில் இயேசு மீண்டும் தமக்கும் பிதாவுக்கும் உள்ள உறவைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

இயேசு அவர்களை நோக்கி: ‘‘**என் பிதா இதுவரைக்கும் கிரியை செய்துவருகிறார். நானும் கிரியை செய்து வருகிறேன் என்றார். அவர் ஓய்வு நாள் கட்டளையை மீறினதுமல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ் சொல்லி தம்மை தேவனுக்கு சமமாக்கினபடியினாலே, யூதர்கள் அவரை கொலை செய்யும்படி அதிகமாய் வகை தேடினார்கள்.**’’ – யோவான் 5:17, 18.

இயேசு தம்மை “**தேவனுக்கு சமமாக்கினார்**” என்பதை அவர்கள் விளங்கிக் கொண்டார்கள். ஆனால் அவருடைய நேரம் வராததால் அவர்களால் அவரைக் கொலை செய்ய முடியவில்லை. மற்றுமொரு சமயத்தில் இயேசு ஒரு திமிர்வாதக்காரனை சுகமாக்கியபோது, அவனுக்கு பாவமன்னிப்பைக் கூறினார். ‘‘**மனுஷனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார். அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும் யோசனைபண்ணி, தேவதூஷணம் சொல்லுகிற இவன் யார்? தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார் என்றார்கள்.**’’ – லூக்கா 5:20, 21.

அவர்கள் தங்களுக்குள் விவாதித்து கொண்டிருப்பதை அறிந்த இயேசு தமக்கு பாவங்களை மன்னிக்க அதிகாரம் இருப்பதாகக்

கூறுகிறார். ''**பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டுமென்று சொல்லி...**'' – லூக்கா 5:24. ஆனால் அந்த தலைவர்களால் இயேசுவைக் கைது செய்யவோ, கல்லெறியவோ அல்லது கொலை செய்யவோ இயலவில்லை, ஏனெனில் வேதம் பின்வருமாறு அறிவிக்கிறது: ''**அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவரைப் பிடிக்கவில்லை.**'' – யோவான் 8:20. இறுதியில் வேளை வந்தபோது, இதே இடத்தில்தான் அவர்கள் இயேசுவை மரண தண்டனைக்கு ஆளாக்கினார்கள்.

அப்பொழுது, பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: ''**நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான். அதற்கு இயேசு: நீர் சொன்னபடிதான்; அன்றியும் மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு: இவன் தேவதூஷணம் சொன்னான்; இனி சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? இதோ இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே. உங்களுக்கு என்னமாய் தோன்றுகிறதென்று கேட்டான். அதற்கு அவர்கள்: மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றார்கள்.**'' – மத்தேயு 26:63–66.

தாம் மரிப்பதற்கான வேளை வந்துவிட்டதை இயேசு அறிந்திருந்தார். அதனால் பிரதான ஆசாரியரும், யூத சனகெரிப் சங்கத்தினரும் ஆணையிட்டுச் சொல்லுமாறு கேட்டபோது தாம் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்பதை வெளிப்படையாக அறிவித்தார். அதற்கு மேலும் ஒரு படி சென்ற கிறிஸ்து, '**அன்றியும் மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று**' என்றும் சொன்னார். இது பழைய ஏற்பாட்டின் சித்தரிப்பாக இருக்கிறது. இங்கு கிறிஸ்து உண்மையில் தானியேலின் தரிசனத்தை மேற்கோளிட்டுக் காண்பிக்கிறார்.

''**இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்**

களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார்.'' – தானியேல் 7:13.

இயேசு தம்மை தெய்வம் என்று தெளிவாகக் குறிப்பிடுவதை அவர்கள் அறிந்து கொண்டார்கள். அவர்தான் அதைச் சொன்னார். ஆகவே தேவதூஷணம் சொன்னார் என்று அவரைக் குற்றப்படுத்தினார்கள். அப்போதும் கூட இயேசு தாம் சொன்னதை திருத்திக் கொள்ளவில்லை, அவர்கள் தவறாக புரிந்து கொண்டார்கள் என்றோ அல்லது அப்படி ஒருபோதும் நினைக்கவில்லை என்றோ கூடச் சொல்லவில்லை. தாம் சொன்னதில் உறுதியாக நின்று, தம் தெய்வீகத்தை அறிக்கையிட்டதனால் மரணத்திற்கு ஆளானார்.

அவர் உயிர்த்தெழுந்த பின்னர் அவருடைய சீஷர்கள் முழுமை யாக பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டபோது மெய்யாகவே இயேசு யார் என்பதை விளங்கிக் கொண்டார்கள். அதோடு அவர்கள் நசரேயனாகிய இயேசுவே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவும், தேவனுடைய தற்சொரூபமும் ஆனவர் என்று யூத சமுதாயத்தினருக்கும், முழு உலகத்திற்கும் தைரியமாக அறிவித்தார்கள்.

சந்தேகப்படும் தோமாவிலிருந்து இது தொடங்குகிறது, அவர் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்னர்தான் அவர் யார் என்பதை மிகச் சரியாக விளங்கிக் கொண்டார். தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: ''**என் ஆண்டவரே! என் தேவனே! என்றான். அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக் கிறவர்கள் பாக்கிய வான்கள் என்றார்.**'' – யோவான் 20:28, 29. இயேசுவே தேவன் என்ற தோமாவின் இந்த கம்பீரமான அறிக்கையை இயேசு திருத்தவில்லை. உண்மையில், அவர் அறிக்கையிட்டதை இயேசு ஏற்றுக் கொண்டு, தோமாவை மட்டுமல்ல, தம்மைப் பற்றிய இந்த சத்தியத்தை விசுவாசிக்கும் எல்லோரையும் ஆசீர்வதித்தார்.

அப்போஸ்தலர்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக இயேசுவே தேவன் என்ற இந்த சத்தியத்தை தங்கள் சுவிசேஷங்களையும், நிருபங்களையும் வாசிப்பவர்களுக்காக எழுதி வைத்தனர். அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவைப் பற்றி பின்வருமாறு எழுதினார்: ''**பிதாக்கள் அவர்களுடையவர்களே; மாம்சத்தின்படி**

கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே, இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக் கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன். ஆமென்.'' – ரோமர் 9:5. பவுல் கிறிஸ்துவை **"என்றென்றைக்கும் தேவனால் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்"** என்று அழைத்தார். தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, இயேசுவின் திருஅவதாரத்தைக் குறித்து எழுதினார்:

''தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக் கொள்ளுகிற படியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்.'' – 1 தீமோத்தேயு 3:16. இயேசுவே மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனாக இருக்கிறார் என்பதை அப்போஸ்தலர் விசுவாசித்தார். அப்போஸ்தலனாகிய பவுல் தீத்துவுக்கு இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்து எழுதும்போது, அவருடைய தெய்வீகத்தைப் பற்றி எழுதினார்: **''நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்கு போதிக்கிறது.''** – தீத்து 2:13.

இயேசுவே மேசியா என்பதை மட்டுமல்ல, அவரே 'மகா தேவனும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து' என்பதையும் விசுவாசித்தார் பவுல். அப்போஸ்தலனாகிய யோவான் தம் சுவிசேஷத்தின் துவக்கத்திலிருந்தே இயேசுவே தேவன் என்றும் மற்றும் அவரே ஆதியில் பிதாவோடு இருந்தவர் என்றும் கற்பித்தார். அவர் எழுதியது பின்வருமாறு: **''ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி... நமக்குள்ளே வாசம்பண்ணினார்.''** – யோவான் 1:1, 14.

இயேசு தாம் தேவன் என்பதை காண்பித்ததற்கான மற்றுமொரு ஆதாரம் அநேக முறை ஜனங்களின் ஆராதனையை ஏற்றுக் கொண்டதுதான். பிறவிக் குருடனை சுகமாக்கி, அவனிடம் தம் தெய்வீகத்தை வெளிப்படுத்தியபோது, அவன் அறிக்கையிட்டு அவரை ஆராதித்தான். உடனே அவன்: **''ஆண்டவரே, விசுவாசிக் கிறேன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டான்.''** – யோவான் 9:38. அவன் தம்மை பணிந்து கொள்ளுவதை அவர் தடுக்கவில்லை, ஏனெனில் தம் பிதாவாகிய தேவனைப் போல

அவரும் ஆராதனைக்குப் பாத்திரராயிருக்கிறார். இயேசு பரமேறிச் செல்லுவதற்கு முன்னர் அவருடைய சீஷர்கள் அனைவரும் அவரைப் பணிந்து கொண்டதைப் பார்க்கிறோம்.

‘‘**அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் அவரைப் பணிந்துகொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பி வந்து...**’’ – லூக்கா 24:51, 52.

தேவன் ஒருவர் மட்டுமே ஆராதனைக்குரியவர் என்பதை நாம் வேதத்திலிருந்து அறிகிறோம். வெளிப்படுத்தின விசேஷத்தில் அப்போஸ்தலனாகிய யோவான் ஒரு தூதனுக்கு முன்பாக அவரை ஆராதிக்கும் முகமாக விழுந்து பணிந்து கொண்டபோது, அந்தத் தூதன் தேவனை மட்டும் தொழுது கொள் என்று அறிவுறுத்தினார்.

‘‘**அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன். அவன் என்னை நோக்கி: இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் இயேசுவைக்குறித்துச் சாட்சியிட்ட சகோதர ரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுது கொள்.**’’ – வெளிப்படுத்தின விசேஷம் 19:10.

இவ்வுலகத்திலிருந்தபோது அநேக முறை ஆராதனையை ஏற்றுக் கொண்ட இயேசு ஒருபோதும் அதற்காக ஜனங்களை கடிந்து கொள்ளவோ, தடுக்கவோ இல்லை. ஏனெனில் மாம்சத்தில் வந்த தேவனாகிய அவர் ஆராதனைக்கு பாத்திரராக இருக்கிறார்!

உண்மையில், இயேசு மனித ரூபமெடுத்தபோது, மாம்சத்தில் இருக்கும் தேவனைத் தொழுது கொள்ளுதல் கூடாது என்று நினைத்துக் கொள்ளாமலிருக்க, அவரைத் தொழுது கொள்ளுமாறு பரலோகத்தின் தூதருக்கு பிதாவானவர் அறிவுறுத்தினார் என்று எபிரேயர் நிருபம் வெளிப்படுத்துகிறது. மேலும், தமது முதற் பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது: ‘‘**தேவதூதர் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக் கடவர்கள் என்றார்.**’’ – எபிரேயர் 1:6. எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக, பிரம பிதாவே இயேசுவை தேவன் என்று அழைக்கிறார்!

குமாரனை நோக்கி: ‘‘**தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.**’’ – எபிரேயர் 1:8.

இயேசு எங்கும் சென்று தம்மைத் தாமே கிறிஸ்து என்று அறிவித்துக் கொள்ளாததற்கும், ‘நானே தேவன்’ என்று ஜனங்களிடம் வெளிப்படையாக அறிவிக்காததற்கும் இதுவே மிகச் சரியான காரணம். ஆனால் பிதா இந்த சத்தியத்திற்கு சாட்சி கொடுத்தார், பரிசுத்த ஆவியினால் பிரகாசிக்கப்பட்ட அப்போஸ்தலரும் இந்த சத்தியத்திற்கு சாட்சி பகர்ந்தார்கள், இயேசுவும் தேவனுக்கே உரிய பண்புகளை வெளிப்படுத்தி இந்த சத்தியத்திற்கு சாட்சியாகத் திகழ்ந்தார்!

2. இயேசு “தேவனா?” அல்லது “தேவகுமாரனா?” வேதம் இரண்டு விதமாகவும் குறிப்பிடுகிறதே!

வேதம் இயேசுவை அநேக முறை தேவன் என்றும் தேவகுமாரன் என்றும் குறிப்பிடுகிறது. உதாரணமாக, இயேசு தேவன் என குறிப்பிடப்படும் சில வேதவசனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் இயேசு **“தேவன் நம்மோடு”** என அழைக்கப்படுகிறார்.

அவன்: ‘‘**இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தமாம்.**’’ – மத்தேயு 1:23. இயேசு கிறிஸ்துவின் திருஅவதாரத்தைப் பற்றி குறிப்பிடும் அப்போஸ்தலனாகிய பவுல் அவரை மனுஷ மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன் என்று குறிப்பிடுகிறார். ‘‘**தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்.**’’ – 1 தீமோத்தேயு 3:16.

இயேசுவை தேவகுமாரன் எனக் குறிப்பிடும் பல பத்திகளும் வேதத்தில் உண்டு. நம்முடைய கவனத்திற்கென்று ஒருசில வசனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. வேதத்தின் பிரசித்தி பெற்ற ஓர் வசனத்தில் இயேசு தம்மைத் தாமே தேவகுமாரன் என்று குறிப்பிடுகிறதைக் காண்கிறோம். ‘‘**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத்**

தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.'' – யோவான் 3:16).

இயேசு தேவகுமாரன் என்று எல்லோரையும் ஒப்புக் கொள்ளச் செய்யும் நோக்கத்தை முதன்மையாகக் கொண்டு அப்போஸ் தலனாகிய யோவான் தம் சுவிசேஷத்தை எழுதினார். **''இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தி னாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டி ருக்கிறது.''** – யோவான் 20:31.

இப்போது கேள்விக்கு வருவோம். இயேசு தேவனா, அல்லது இயேசு தேவகுமாரனா? வேதம் அவரை இவ்விரு பெயர்களிலும் அழைப்பதினால் இரண்டுமே சரியானவைதான். இதைக் குறித்து வேதம் நமக்கு கற்றுக் கொடுப்பதை சரியாக விளங்கிக் கொண்டால், எவ்வித முரண்பாடும் இல்லையென்பதை அறிந்து கொள்ளலாம்.

பிதாவாகிய தேவனைப் போல இயேசுவும் முழுமையாக தேவனாக இருக்கிறார். ஆகவே, வேதத்தின் பல பத்திகளில் அவர் தேவன் என குறிப்பிடப்படுகிறார். தேவகுமாரன் என்னும் பெயர் இயேசு தம் பிதாவுடன் கொண்டிருக்கும் தொடர்பைக் காண்பிக்கும் தொடர்புப் பதமாக இருக்கிறது. இதை ஒரு உதாரணத்தின் மூலம் உங்களுக்கு விளக்குகிறேன். என்னுடைய குடும்பப் பெயர் பெட்ரின் என்பதாகும். அநேகர் என்னை திரு. பெட்ரின் என்று அழைக்கிறார்கள். ஆனால் என் தந்தையுடன் தொடர்புபடுத்தும்போது திரு.பெட்ரின் அவர்களின் மகன் எனப்படுகிறேன். ஆகவே, நான் திரு. பெட்ரின் என்றிருக்கிறேனா அல்லது திரு.பெட்ரினின் மகன் என்றிருக்கிறேனா? இரண்டுமே உண்மைதான். என்னை மட்டும் கருத்தில் கொள்ளும்போது நான் திரு. பெட்ரின் எனப்படுகிறேன், என் தந்தையுடன் தொடர்புபடுத்திச் சொல்லும்போது திரு.பெட்ரினின் மகன் எனப்படுகிறேன். இதேவிதமாக, இயேசுவும் இயல்பில் தேவனாக இருப்பதால் தேவன் எனவும், தம் பிதாவுடன் தொடர்புபடுத்தும்போது தேவகுமாரன் எனவும் அழைக்கப்படுகிறார்.

நம்முடைய நவீன சிந்தனைப்படி பிதா மற்றும் குமாரன் என்னும் பதங்கள் துவக்கத்தைக் குறிக்கின்றன. ஆனால் கிழக்கத்திய

சிந்தனைப்படி அவர்களின் சாயலையும் ஒப்புமையையும் குறிப்பிட அநேக பதங்களை உபயோகித்தனர். இயேசு எழுத்து வடிவில் பிறப்புக் கூறுகளை வைத்து மனிதர்களாகிய நாம் விளங்கிக் கொள்ளுவது போல தேவகுமாரனல்ல. இயேசு தேவகுமாரனென்று அழைக்கப்படுவதற்கான காரணம் அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய சுபாவத்தையும் குணாதிசயத்தையும் கொண்டிருக்கிறார் என்பதாகும். யோவான் பின்வருமாறு எழுதினார்: ''**பிதாவின் குமாரனாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும், சத்தியத்தோடும் அன்போடுங்கூட உங்களோடிருப்பதாக...**'' – 2 யோவான் 1:3. தேவன் சத்தியமாகவும் அன்பாகவும் இருப்பது போல இயேசுவும் சத்தியமாகவும் அன்பாகவும் இருக்கிறார். அவர் தேவனுடைய குணாதிசயத்தை பிரதிபலிப்பதால் தேவகுமாரன் எனப்படுகிறார்.

வேதத்தில் கூட அநேக முறை "குமாரன்" என்னும் உருவகப் பதத்தின் அர்த்தம் உபயோகிக்கப்பட்டுள்ளது. சுபாவத்தில் துன்மார்க்கராயிருக்கும் துன்மார்க்கரைப் பற்றிக் குறிப்பிடுகையில் சங்கீதக்காரன் அவர்களை "நியாயக்கேட்டின் மகன்" என்று சொல்லுகிறார்: ''**சத்துரு அவனை நெருக்குவதில்லை; நியாயக் கேட்டின் மகன் அவனை ஒடுக்குவதில்லை.**'' – சங்கீதம் 89:22. இதனால் நியாயக்கேட்டிற்கு மகன் உண்டு என்று அர்த்தமல்ல. இங்கு "நியாயக்கேட்டின் மகன்" என்பது துன்மார்க்க சுபாவமும் பண்புகளும் கொண்டவனைக் குறிக்கிறது. யோவான் எழுதின சுவிசேஷத்தில் இயேசு யூதாசை "கேட்டின் மகன்" என்றார். யோவான் இயேசுவின் ஜெபத்தை பின்வருமாறு பதிவு செய்கிறார்:

''**நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்கு தந்தவர்களைக் காத்துக்கொண்டு வந்தேன்; வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை.**'' – (யோவான் 17:12). யூதாஸ் கேடு என்பவரின் மகன் என்று அர்த்தமல்ல. அவனுடைய தகப்பன் பெயர் கேடு அல்ல, சீமோன். அவன் "கேட்டின் மகன்" எனப்பட காரணம் அவன் ஆக்கினைக்குட்பட்ட, அழிவுக்கு நியமிக்கப்பட்ட ஒருவனின் பிரதிபலிப்பாக இருந்தான் என்பதேயாகும்.

மேலும், இயேசு ''மனுஷன்'' என்றும் ''மனுஷகுமாரன்'' என்றும் வேதத்தில் குறிப்பிடப்படுகிறார். இயேசுவை ''மனுஷன்'' எனக் குறிப்பிடும் ஒருசில வசனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. **''இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைத் தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்.''** – அப்போஸ்தலர் 2:22. **''தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே.''** – 1 தீமோத்தேயு 2:5. இயேசுவை **''மனுஷ குமாரன்''** என்று குறிப்பிடும் ஒரு சில வேத வசனங்கள் பின்வருமாறு: **''அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும் போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்.''** – மத்தேயு 25:31.

''அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக் கொப்பானவரையும் கண்டேன்.'' – வெளிப்படுத்தின விசேஷம் 1:13.

ஒரே நேரத்தில் இயேசு ''மனுஷன்'' என்றும் ''மனுஷகுமாரன்'' என்றும் குறிப்பிடப்படுவதைப் பற்றி யாருக்காவது குழப்பமாக இருக்கிறதா? நிச்சயமாக இருக்காது ! அவர் மனுஷ ரூபமெடுத்ததால் மெய்யாகவே மனுஷனாக இருந்தார். ஆதாமின் சந்ததியில் வந்ததால் ''மனுஷகுமாரன்'' என்றும் அழைக்கப்படுகிறார். ஆதாம் என்பதற்கு எபிரேய பாஷையில் மனுஷன் என்று அர்த்தம். இயேசு மனித குடும்பத்தில் அங்கம் வகிப்பதால் மனுஷகுமாரன் என்றும் அழைக்கப்படுகிறார். மேலும், ''மனுஷகுமாரன்'' என்பது மேசியா என்னும் பெயரின் மேன்மைப்படுத்தப்பட்ட பதமாக இருக்கிறது. இதைப் பற்றி கேள்வி எண் 3 –ல் மேலும் விளக்கமாகக் காண்போம்.

3. இயேசு தம்மை “மனுஷகுமாரன்” என்று சொல்லிக் கொண்டதன் மூலம் தாம் தெய்வம் என்பதை மறுக்கவில்லையா?

இயேசு தம்மைப் பற்றி குறிப்பிடும்போது “மனுஷகுமாரன்” என்று சொல்லுவது அவருக்கு மிகவும் பிடித்தமான பதமாக இருந்தது. இயேசு தம்மை பற்றிக் குறிப்பிட அந்த பதத்தை 78 முறை உபயோகித்ததாக சுவிசேஷ புத்தகங்கள் பதிவு செய்கின்றன. தம்மை மனுஷகுமாரன் என்று சொல்லிக் கொள்வதன் மூலம் இயேசு தாம் தேவனும், தேவகுமாரனுமாக இருப்பதை மறுக்கவில்லை. யூத சங்கத்தில் அவரை விசாரிக்கையில் பிரதான ஆசாரியன் அவருடைய அடையாளத்தை பற்றி கேட்டபோது, இயேசு தேவகுமாரன் மற்றும் மனுஷகுமாரன் என்னும் இந்த இரு பெயர்களையும் இணைத்துவிட்டார். அந்தப் பத்தியை வாசிப்போம்:

அப்பொழுது, பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: ‘‘**நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்கு சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டு கேட்கிறேன் என்றான். அதற்கு இயேசு: நீர் சொன்னபடிதான்; அன்றியும் மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்.**’’ – மத்தேயு 26:63, 64.

அவர் தாம் தேவகுமாரனாகிய கிறிஸ்து என்பதை ஒப்புக் கொண்டார். அதனால்தான் பிரதான ஆசாரியனிடம், “**நீர் சொன்னபடிதான்**”, **அதாவது “நீர் சொன்னது சரிதான்**” என்றார். அதேசமயம் தாம் மனுஷகுமாரன் என்றும் சொன்னார். ஆகவே, அவர் தம்மை மனுஷகுமாரன் என்று சொல்லிக் கொண்டதனால் தாம் தேவகுமாரன் என்பதையோ, தேவன் என்பதையோ மறுக்கவில்லை. மேலேயுள்ள வேதப்பகுதியில் காணப்படுவது போல அந்த இரு பெயர்களையும் இணைத்துவிட்டார்.

மனுஷகுமாரன் என்னும் பெயருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட அர்த்தங்கள் உண்டு. தேவகுமாரன் என்னும் பெயர் அவருடைய தெய்வீகத்தைக் குறிப்பது போல மனுஷகுமாரன் என்னும் பெயர் அவருடைய மனுஷீகத்தன்மையைக் குறிக்கிறது. அதுவே

“மனுஷகுமாரன்” என்னும் பதத்தின் பொதுவான மற்றும் இயல்பான அர்த்தமாக இருக்கிறது.

கிறிஸ்து தெய்வீகம் மற்றும் மனுஷீகம் என்னும் இரு சுபாவங்களையும் ஒன்றாகக் கொண்டிருந்தார். அவருடைய மனுஷ சுபாவம் தெய்வீக சுபாவத்தின் இடத்தை எடுத்துக் கொள்ளவில்லை, தெய்வீக சுபாவமும் மனுஷ சுபாவத்தின் இடத்தை எடுத்துக் கொள்ளவில்லை. அவையிரண்டும் ஒரே நேரத்தில் அவருக்குள் வாசம் பண்ணின. ஆகவே அவர் தம்மை தெய்வம் என்று சொல்லிக் கொண்டதால் தம் மனுஷ சுபாவத்தையோ, மனுஷன் என்று சொல்லிக் கொண்டதால் தெய்வீக சுபாவத்தையோ மறுக்கவில்லை என்பது தெளிவாகிறது.

மேலும் மனுஷகுமாரன் என்னும் பெயர் தீர்க்கதரிசன முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. இயேசு தம்மை “மனுஷகுமாரன்” என்று சொல்லிக் கொண்டதால் மனித இனத்துடன் தம்மை அடையாளம் கண்டுகொண்டது மட்டுமல்ல, தம்மை மேசியா என்றும் பறைசாற்றினார். தானியேலின் தீர்க்கதரிசன புத்தகத்தில் மனுஷகுமாரன் என்னும் வெளிப்பாடு மேசியா என்பதற்கு பதிலாக உபயோகிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

‘‘**இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்கு கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும் அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்.**’’ – (தானியேல் 7:13, 14).

ஆகவே மனுஷகுமாரன் பரலோகத்திலிருந்து வந்தவர். மனுஷகுமாரனே “**நீண்ட ஆயுசுள்ளவருடன்**”, அதாவது, பிதாவாகிய தேவனுடன் இருந்தவர். அவரே “**கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும்**” பெற்றுக் கொண்டவர். வேதத்தின் மற்றும் சில பகுதிகளிலிருந்து உலகத்தின் முடிவில் மேசியாவே கர்த்தத்துவமும்

மகிமையும் ராஜரீகமும் பெற்றுக் கொள்ளப்போகிறவர் என்பதை அறிவோம். கிறிஸ்துவே மனுஷகுமாரன் பரலோகத்திலிருந்து வந்தவர் என்பதை வலியுறுத்தினார். நிக்கொதேமுவிடம் அவர் பேசும்போது இவ்வாறு குறிப்பிட்டார்:

''**பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிற வருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை.**'' – யோவான் 3:13. ஆகவே, ''மனுஷகுமாரன்'' என்னும் பெயர் பரலோகத்திலிருந்து வந்த தேவகுமாரனாகிய மேசியாவுக்கான பிரத்தியேகமான பெயராக உள்ளது.

எசேக்கியேலும் கூட ''மனுபுத்திரன்'' என்று அழைக்கப் பட்டாரே? என்று சிலர் கேட்கலாம். எனவே அவரும் மேசி யாவா, அவரும் பரலோகத்திலிருந்து வந்தவரா? ஆம், தீர்க்க தரிசியாகிய எசேக்கியேல் சுமார் 75 முறை மனுபுத்திரன் என்று அழைக்கப்படுகிறார். ஆனால் நன்றாக கவனித்தால் தீர்க்க தரிசியாகிய எசேக்கியேல் அந்த 75 குறிப்புகளிலும் ''மனுபுத்திரன்'' என்றுதான் அழைக்கப்படுகிறாரேயொழிய ''மனுஷகுமாரன்'' என்று சொல்லப்படவில்லை. ஆனால் இயேசு எல்லா இடங்களிலும் ''மனுஷகுமாரன்'' என்று பிரத்தியேகமாக அழைக்கப்படுகிறார். பின்வரும் வசனங்களில் தீர்க்கதரிசியாகிய எசேக்கியேலின் பெயருக்கும், மேசியாவாகிய இயேசுவின் பெயருக்கும் இருக்கும் வித்தியாசத்தைக் கவனியுங்கள். எசேக்கி யேலைப் பற்றி:

''**அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, உன் காலூன்றி நில்; உன்னுடனே பேசுவேன் என்றார்.**'' – எசேக்கியேல் 2:1. ''**மனுபுத்திரனே, இஸ்ரவேல் தேசத்தைக்குறித்துக் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்...**'' – எசேக்கியேல் 7:2. இயேசு கிறிஸ்துவைப் பற்றி: ''**மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷ குமாரனுடைய வருகையும் இருக்கும்.**'' – மத்தேயு 24:27.

அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: ''**மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது.**'' – யோவான் 12:23. பெரும்பாலான சமயங்களில் இயேசு தம்மை ''மனுஷகுமாரன்'' என்று அழைத்தபோது, அந்த பெயரின் தீர்க்கதரிசன முக்கியத் துவத்தை அறிந்தவர்களுக்கு தம்மை மேசியா என்று அறிவித்தார்!

4. யோவான் 3:16 ல் இயேசு தேவனுடைய ஒரே பேறான குமாரன் எனப்படுகிறார். எனவே, இயேசு பேறானவரா அல்லது கடந்து போன நித்தியத்தில் பிதாவினால் சிருஷ்டிக் கப்பட்டவரா?

யோவான் 3:16–இல் கொடுக்கப்பட்டுள்ள அந்த வசனத்தை முதலில் வாசிப்போம். ''**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.**'' – யோவான் 3:16.

இது வேதாகமத்தில் சுவிசேஷத்தின் முழுமையான சாராம் சத்தைக் கொண்ட சுவிசேஷ வசனமாக விளங்குகிறது. இரட்சிப் பைப் பெற்றுக் கொள்ளுவது எப்படி எனச் சொல்லும் வசனமாக இருக்கிறது. இயேசு யார் என்றும், அவர் நமக்காக செய்தது என்னவென்றும் விசுவாசிப்பதன் மூலம் இரட்சிப்பை பெற்றுக் கொள்ளலாம்.

இயேசு யார்? இயேசு தேவனுடைய ஒரே பேறான குமாரன். ''ஒரே பேறான'' என்னும் பதம் ''மோனோஜீன்ஸ் (monogenes) தனிப்பொது உயிர்மூலம்'' என்னும் பொருள்படும் கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது. இந்தச் சொல் ஆங்கிலத்தில் வித்தியாசமாக ''ஒரே'', ''ஒரேயொரு'' மற்றும் ''ஒரேபேறான'' என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது.

''பேறான'' என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லுக்கான அர்த்தம் ''உருவாக்க அல்லது சந்ததியை உண்டாக்க'' என்பதா கும். இது ஆங்கிலத்தில் **''பேறான''** என்னும் பதத்தின் பொரு ளாக இருப்பதால், சிலர் இயேசு சிருஷ்டிக்கப்பட்டவர் என்று தீர்மானித்து விடுகிறார்கள். கடந்து போன நித்தியத்தில் பிதாவானவர் இயேசுவை பெற்றெடுத்தார் அல்லது சிருஷ்டித்தார் என்று சொல்லுகிறார்கள். ஆனால் **''பேறான''** என்பது கிரேக்கச் சொல்லின் ஆங்கில மொழிப்பெயர்ப்பாக இருக்கிறது. ஆகவே அந்த கிரேக்கச் சொல்லின் மூல அர்த்தத்தைப் பார்க்க வேண்டும். அது **''தனிப்பொது உயிர்மூலம்''** என்பதாகும். ஆங்கில அர்த்தத்தை அவ்வார்த்தையில் புகுத்துதல் கூடாது.

கடந்து போன நித்தியத்தில் பிதாவானவர் இயேசுவை சிருஷ்டித்திருந்தால் இயேசு தேவனாக இருக்க முடியாது. தேவனை ஒருபோதும் சிருஷ்டிக்க முடியாது. தீர்க்கதரிசியாகிய ஏசாயாவின் மூலம் தேவன் சொல்லுவதை கவனியுங்கள். ''**எனக்கு முன் ஏற்பட்ட தேவன் இல்லை, எனக்குப்பின் இருப்பதும் இல்லை.**'' – ஏசாயா 43:10. ஆகவே இந்த வசனம் இயேசு சிருஷ்டிக்கப்பட்டார் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தில் உண்டாக்கப்பட்டார் என்னும் எண்ணத்தை தள்ளுபடி செய்து விடுகிறது.

''தனிப்பொது உயிர்மூலம் (monogenes)'' என்பதன் அர்த்தம் என்ன? புதிய ஏற்பாட்டின் கிரேக்கஆங்கில அகராதியின்படி (BAGD மூன்றாம் பதிப்பு), monogenes (மோனோஜீன்ஸ்) என்பதற்கு இரு முதன்மை வரையறைகள் உண்டு. முதல் வரையறை ''ஒரு குறிப்பிட்ட உறவிற்குள் இருக்கும் ஒரேயொரு தனி வகையாக இருப்பதைப் பற்றியது'' என்பதாகும். இரண்டாம் வரையறை ''ஒரேயொரு தனி வகையாக அல்லது வகுப்பாக, தனித் தன்மையுடன் இருப்பதைப் பற்றியது'' என்பதாகும். இயேசு தனித் தன்மையுள்ளவராக இருப்பதால் இரண்டாம் வரையறை இயேசுவுக்கு மிகவும் பொருந்து வதாக இருக்கிறது.

அப்போஸ்தலனாகிய யோவான் தம் சுவிசேஷத்திலும் நிருபத்திலும் ''பேறான'' என்னும் சொல்லை ஒருசில முறை உபயோகித்திருக்கிறார். யோவான் இயேசுவைப் பற்றி எழுதும்போது ஒரு காரியத்தை எடுத்துக் காண்பிப்பதில் முக்கியமாக அக்கறை கொண்டிருந்தார். அது என்ன? அவர் பின்வருமாறு எழுதினார்:

''**இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தி னாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப் பட்டிருக்கிறது.**'' – யோவான் 20:31.

இயேசு தனித்தன்மையுள்ள தேவனுடைய குமாரனும், தேவனு டைய தெய்வீக சுபாவத்தைக் கொண்டவருமானவர் என்பதை மேற்கோளிட்டு காண்பிக்க மோனோஜீன்ஸ் என்ற சொல்லின் அர்த்தமான ஒரே பேறான என்ற பதத்தை உபயோகித்தார் யோவான்.

அப்போஸ்தலனாகிய பவுல் ஈசாக்கை ஆபிரகாமின் குமாரனாக குறிப்பிட மோனோஜீன்ஸ் என்ற சொல்லின் அர்த்தமான ஒரே பேறான என்ற பதத்தை உபயோகித்தார். ஈசாக்கை ஆபிரகாமின் “ஒரே பேறான குமாரன்” என்று அழைத்தார். அவர் எழுதியது: **‘‘மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்ட போது, ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்.... தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்.’’** – எபிரேயர் 11:17.

ஈசாக்கு ஆபிரகாமின் ஒரே குமாரன் அல்ல என்று ஆதியாகமத் திலிருந்து அறிந்து கொள்ளுகிறோம். அவன் ஆபிரகாமின் மூத்த குமாரனும் அல்ல. ஆனால் பவுல் ஏன் “ஒரே பேறான குமாரன்” என்னும் வாக்கியத்தை உபயோகிக்கிறார்? அப்போஸ்தலர் ஈசாக்கின் தனித்தன்மையை மேற்கோளிட்டு காண்பிக்க விரும்பினார். அவன் உடன்படிக்கையின் குமாரனாகவும், வாக்குத்தத்தத்தின் குமாரனாகவும் இருப்பதால், அப்போஸ்தலர் அவனை ஆபிரகாமின் ஒரே பேறான குமாரன் என அழைக்கிறார்.

‘‘அப்பொழுது தேவன்: உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக; என் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்.’’ – ஆதியாகமம் 17:19.

பேறான என்னும் சொல் புதிய ஏற்பாட்டில் உருவகமாகவும் உபயோகிக்கப்பட்டுள்ளது. பவுல் ஒநேசிமுவை தான் பெற்றெடுத்த பிள்ளையாக குறிப்பிடுகிறார். **‘‘கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற என் மகனாகிய ஒநேசிமுக்காக உம்மை மன்றாடுகிறேன்.’’** – பிலமோன் 1:10. மீண்டும் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையின் விசுவாசிகளை பெற்றெடுத்ததாகக் குறிப்பிடுகிறார்.

‘‘கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தில் நான் உங்களைப் பெற்றேன்.’’ – 1 கொரிந்தியர் 4:15. ஆகவே பேறான அல்லது ஒரே பேறான என்பவை எப்போதுமே “உருவாக்க அல்லது சந்ததியை உண்டாக்க” என்று அர்த்த மாவதில்லை.

இயேசுவைப் பொருத்தவரை பேறான என்ற பதம் முதன்முதலில் சங்கீதம் 2–இல் உபயோகிக்கப்பட்டுள்ளது. இந்த சங்கீதம் இயேசு

உலகத்துக்கு வந்தபோது நடந்த விசாரணையுடன் தொடங்குகிறது. யூத சனகெரிப் சங்கம் அவருக்கு மரண தண்டனை விதிக்க, ரோம அரசாங்கம் அவருடைய மரண தண்டனைக்கான ஆணைக்கு ஒப்புதல் அளித்தது. ராஜாவாகிய தாவீது தாம் கண்டதை சொல்லக் கேட்போம்:

‘‘ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக்காரியத்தைச் சிந்திப்பானேன்? கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி: அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு எறிந்து போடுவோம் என்கிறார்கள்.’’ – சங்கீதம் 2:13.

‘‘கர்த்தர்’’ என்பது பிதாவாகிய தேவனையும், ‘‘அவரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்’’ என்பது அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னும் மேசியாவையும் குறிக்கிறது. சகல ஜனங்களும் அவருடைய தேவகுமாரனுடைய இரத்தத்திற்காக கதறிக் கொண்டிருக்கிறார்கள். மேசியாவின் வாழ்க்கையை முடிக்க விரும்பினார்கள். ஆனால் அவருடைய ஜீவனை யாராலும் எடுக்க முடியாது என்பதுதான் உண்மை. இயேசு தெளிவாக பின்வருமாறு அறிவித்தார்:

‘‘நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார்.’’ – யோவான் 10:17, 18.

ஜனங்கள் நினைத்தார்கள் தாங்கள் மேசியாவை கொலை செய்தோம் என்று, ஆனால் மேசியாவாகிய இயேசு தம் ஜீவனைத் தாமாகவே கையளித்து, மனுக்குலம் முழுவதிற்குமான பரிகாரத்தை செலுத்தி, இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்றினார். தேவனுடைய தெய்வீகத் திட்டத்தில் மேசியா தம் ஜீவனை ஒப்புக் கொடுத்த பின்னர் அதனை மீண்டும் எடுத்துக் கொள்ளுவார் என்றிருந்தது.

இந்த தெய்வீக சத்தியத்தை சங்கீதக்காரன் அதே சங்கீதத்தின் பிற்பகுதியில் கேட்கிறார்.

''தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன்; கர்த்தர் என்னை நோக்கி: நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்.'' – சங்கீதம் 2:7.

"இன்று" என்னும் பதம் காலத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியைக் குறிக்கிறது. பிதா தம் குமாரனாகிய இயேசுவை பெற்றெடுத்தபோது எந்த நாள் "இன்றாக" இருந்தது? சங்கீதம் 2–இன் இந்தப் பகுதியை விளக்கும் அப்போஸ்தலனாகிய பவுல் இந்தப் பத்தியின் சரியான அர்த்தத்தைக் கொடுக்க காண்போம்.

''நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன் என்று இரண்டாம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறபடியே, இயேசுவை எழுப்பினதினாலே தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார் என்று நாங்களும் உங்களுக்கு சுவிசேஷமாய் அறிவிக்கிறோம். இனி அவர் அழிவுக்குட்படாதபடிக்கு அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்பதைக்குறித்து: தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு கட்டளையிடு வேன் என்று திருவுளம்பற்றினார்.'' – அப்போஸ்தலர் 13:3234.

அப்போஸ்தலனாகிய பவுல் சங்கீதம் 2–இன் இப்பகுதியை இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததற்கு குறிப்பாகக் கொள்ளுகிறார். வாக்குத்தத்தம் நம்முடைய பிதாக்களுக்கு கொடுக்கப்பட்டதாகவும், அந்த வாக்குத்தத்தம் இயேசுவின் உயிர்த்தெழுதலில் நிறைவேறியதாகவும் சொல்லுகிறார். சங்கீதம் இரண்டின் தீர்மானம் நிறைவேறுவதை இருமுறை உயிர்த்தெழுதலுடன் தொடர்புபடுத்துகிறார்: "இயேசுவை எழுப்பினதினாலே" (வ. 33), **"அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்" (வ. 34). ஆகவே, "நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்"** – சங்கீதம் 2:7 என்ற ஆணை இயேசுவின் உயிர்த்தெழுதலில் நிறைவேறியது என்று கூறுகிறார் அப்போஸ்தலர்.

சிலுவையில் இயேசு பூமியின் மீதுள்ள ஒவ்வொருவருக்காகவும் பரிகாரம் செலுத்தினார். பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை

நித்திய மரணத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார். (ரோமர் 6:23 பார்க்கவும்.) **"இரண்டாம் மரணத்தில்"** (வெளிப்படுத்தின விசேஷம் 20:14) மரிக்கிற ஒருவருக்கு உயிர்த்தெழுதல் இல்லை. நியாயத்தீர்ப்பின் நாளில் அக்கினிக் கடலில் இரண்டாம் மரணத் திற்குள் கடந்து செல்பவர்கள் என்றென்றைக்குமாக அழிந்து, ஒருபோதும் உயிருடன் எழாதிருப்பார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு பாவ மனுக்குலத்தின் சார்பில் இரண்டாம் மரணத்தின் வழியாகக் கடந்து சென்றார். அப்போஸ்தலர் பின்வருமாறு எழுதினார்: ''**என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவ தூதரிலும் சற்று சிறிய வராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப் பட்டதைக் காண்கிறோம்.**'' – (எபிரேயர் 2:9).

சிலுவையில் இயேசு மரணத்தை, இரண்டாம் மரணத்தை, நித்திய மரணத்தை, ருசிபார்த்துக் கொண்டிருக்கையில் வாழ்க்கை யிலிருந்து விடைபெற்றுக் கொண்டார் என்றுதான் அர்த்தமாகிறது. நிரந்தரமாக தம் பிதாவாகிய தேவனிடமிருந்து பிரிக்கப்படுவதைப் போல உணர்ந்தார், ஏனெனில் அதைத்தான் பாவமானது செய்கிறது. கொடிய இருளின் அத்தருணத்தில் பின்வருமாறு கதறியபோது அவரால் கல்லறையின் சுவர்களைத் தாண்டி பார்க்க முடியவில்லை.

''**ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.**'' – (மத்தேயு 27:46). அது நித்திய பிரிவின் கதறலாக இருந்தது, ஏனெனில் பாவமானது ஒரு ஆத்துமாவை நித்தியமாக தேவனிடமிருந்து பிரித்து விடுகிறது. ஆனால் இரட்சிப்பின் தெய்வீகத் திட்டத்தில் கிறிஸ்து பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை அனுபவித்தாலும் தம் ஜீவனை மீண்டும் எடுத்துக் கொள்ளுவார் என்றிருக்கிறது. பிதா அவருக்கு மீண்டும் ஜீவன் கொடுப்பார். பிதா தம் குமாரனை மரித்தோரிலிருந்து மீண்டும் பெற்றெடுப்பார்.

வெளிப்படுத்தின விசேஷத்திலும் இயேசுவின் பேறான நிலை மரித்தோரிலிருந்து அவர் உயிர்த்தெழுந்ததுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. அதைப் பற்றி யோவான் பின்வருமாறு எழுதினார்: ''**உண்மையுள்ள**

சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசுகிறிஸ்துவினாலும்...'' – வெளிப்படுத்தின விசேஷம் 1:5.

இதிலிருந்து மேசியாவாகிய கிறிஸ்துவைப் பொருத்தவரை 'பேறான' என்பதற்கான சரியான அர்த்தத்தை நாம் தெளிவாகக் கண்டு கொண்டோம். அதற்கு அவருடைய தோற்றத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை. தேவனாயிருக்கிற கிறிஸ்துவுக்கு துவக்கமும் இல்லை, முடிவும் இல்லை. அவர் நித்தியமானவரும் அழியாமையுள்ளவருமாய் இருக்கிறார். ஆனால் இந்த தேவன் மனுஷ ரூபமெடுத்தபோது பெத்லகேமில் துவக்கமும் கல்வாரியும் முடிவும் பெற்றிருந்தார். சிலுவையில் இயேசுவின் மனுஷ ரூபம் மரித்ததேயல்லாமல் தெய்வீகம் மரிக்கவில்லை. ஏனென்றால் தெய்வீகம் ஒருக்காலும் மரிக்க முடியாது.

இயேசு, **"நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்"** (யோவான் 14:19) என்று சொன்னார். பிதாவானவர் இயேசுவை கல்லறையிலிருந்து உயிரோடு எழுப்பியது போல, இயேசுவை விசுவாசிக்கும் யாவரும் என்றென்றைக்கும் ஜீவிக்கும்படிக்கு உயிர்த்தெழுவார்கள். இயேசு மரித்தோரிலிருந்து மீண்டும் பெற்றெடுக்கப்பட்டது போல நாமும் மரணத்திலிருந்து பெற்றெடுக்க ப்படுவோம். அப்போஸ்தலனாகிய பேதுரு இவ்வாறு எழுதுகிறார்:

''**அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின் படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.**'' – 1 பேதுரு 1:4. இங்கும் "பேறான" என்பது உயிர்த்தெழுதலுடன் தொடர்புபடுத்தப் பட்டிருப்பதை காண்கிறோம். இயேசுவின் உயிர்த்தெழுதல் தனித்தன்மையுள்ளதும் விசேஷித்ததுமாக இருப்பதால், அவர் "ஒரே" பேறான குமாரன் எனப்படுகிறார். அவரே **"உயிர்த் தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார்"** (யோவான் 11:25). அவர் உயிர்த் தெழுந்ததினால் நாமும் உயிர்த்தெழுவோம்!

5. பிதா தேவனாக இருக்கிறார், குமாரனும் தேவனாக இருக்கிறார், பரிசுத்த ஆவியும் தேவனாக இருக்கிறார். எனவே, எப்படி மூன்று தேவன் அல்லாமல் ஒரே தேவனாக இருக்க முடியும்?

தேவன் ஒருவரே என்பதில் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் மிகத் தெளிவாக இருக்கின்றன. பழைய ஏற்பாடு பின்வருமாறு அறிவிக்கிறது: ''**இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.**'' – உபாகமம் 6:4. புதிய ஏற்பாடு இந்தச் சத்தியத்தை அங்கீகரிக்கிறது. எனவேதான் அப்போஸ்தலனாகிய பவுல் பின்வருமாறு எழுதினார்: ''**தேவன் ஒருவரே.**'' – 1 தீமோத்தேயு 2:5.

ஆனால் வேதம் பல இடங்களில் ''**பிதா தேவனாயிருக்கிறார்**'' – எபேசியர் 1:2 என்றும், ''**குமாரன் தேவனாயிருக்கிறார்**'' – மத்தேயு 1:23 என்றும், ''**பரிசுத்த ஆவி தேவனாயிருக்கிறார்**'' – அப்போஸ்தலர் 5:3, 4 என்றும் குறிப்பிடுகிறது. ஆகவே, தேவன் ஒருவரா அல்லது மூவரா? என்னும் கண்கூடான கேள்வி எழுகிறது. மூவர் எப்படி ஒருவராக முடியும்?

இது எப்படி ஆகும் என்று கணிக்க சிலர் கணித அணுகு முறையை உபயோகிக்க முயற்சி செய்கிறார்கள். “1+1+1=1'' ஆவது எவ்வாறு? என்று கேட்கிறார்கள். ஆனால் மூன்று 1 களை வைத்து ஒரேயொரு 1 ஐப் பெற முடியும் என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். 1 X 1 X 1 = 1 அல்லவா? எந்த கணித சமன்பாட்டை இங்கு உபயோகிக்கிறோம்? உண்மை என்ன வென்றால், தேவன் கணிதத்திற்கும் அப்பாற்பட்டவர் என்பதே. இந்தக் கணித சமன்பாட்டை விளங்கிக் கொள்ள உதவும் உதாரணங்களை வேதத்தில்தான் தேட வேண்டும்.

தேவன் தம்மை பிரதிபலிக்க மனுஷனை உண்டாக்கினார் என்று கூறுகிறது வேதாகமம். நாம் தேவனை பிரதிபலிப்பதால் மனித குடும்பத்திலும் ஒருமனம் என்ற கருத்து காணப்பட வேண்டும். வேதம் பின்வருமாறு அறிவிக்கிறது: ''**தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே**

சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார்.'' – ஆதியாகமம் 1:27.

இங்கு தேவன் ஆணையும் பெண்ணையும் தம் சாயலில் உண்டாக்கினார் என்று பார்க்கிறோம். அதன் பிறகு அவர்களிருவரையும் திருமணம் என்னும் உடன்படிக்கையில் இணைக்கிறார். தேவனே இவ்வாறு அறிவிக்கிறார்: ''**அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.**'' – ஆதியாகமம் 2:24.

ஆதாமையும் ஏவாளையும் ஏதேன் தோட்டத்தில் இணைத்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து திருமணத்தில் காணப்பட்டும் ஒருமையை மேலும் விளக்குகிறார். அந்தப் புனிதமான பதிவு பின்வருமாறு:

''**அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்.**'' – (மத்தேயு 19:46).

திருமண உடன்படிக்கையில் இருவர் ஒரே மாம்சமாகிறார்கள், அவர்கள் இனி இருவரல்ல. தேவத்துவத்தின் உடன்படிக்கையிலும் அவ்வாறே மூன்று நபர்களும் ஒரே தேவனாக இருக்கிறார்கள், மூன்று தேவர்கள் அல்ல! ஒருமனம் என்பது இங்கு ஒருமை என்று அர்த்தமாகிறது.

தேவனுடைய ஒருமனத்தை எடுத்துக் கூறும் மற்றுமொரு உதாரணம் ஆதியாகம புத்தகத்தில் காணப்படுகிறது. பெரு வெள்ளத்துக்குப் பின்னர் மனுஷர் மீண்டும் பூமியில் பெருகத் தொடங்கியபோது, தேவனுடைய கற்பனைக்கு விரோதமாக ஓரிடத்தில் கூடினார்கள். அப்போது தேவன் சொன்னது இதுதான்: அப்பொழுது கர்த்தர்: ''**இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்; அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது.**'' – (ஆதியாகமம் 11:6).

“ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்” என்பதற்கு அங்கு ஒருவர் மட்டும் இருந்தார் என்று அர்த்தமல்ல. எல்லோரும் ஒரே நபரைப் போல ஒன்றுபட்டிருந்தார்கள் என்பதுதான் அதன் அர்த்தம்! அதேவிதமாக ஒருவரே தேவன் அல்லது தேவன் ஒருவரே என்பதற்கு தேவத்துவத்தில் ஒரேயொரு நபர் மட்டுமே உண்டு என்று அர்த்தமல்ல.

ஒரு குடும்பத்திலும் அநேக அங்கத்தினர் இருக்கலாம், ஆனால் அது குடும்பம் என்றுதான் அழைக்கப்படுகிறது. சபையிலும் அநேக அங்கத்தினர் இருக்கலாம், ஆனால் அதுவும் ஒரே சரீரம் என்றுதான் அழைக்கப்படுகிறது. அப்போஸ்தலர் பின்வருமாறு எழுதினார்: ‘‘**எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்.**’’ – **(1 கொரிந்தியர் 12:12).**

மேலேயுள்ள வசனத்தில், பூமியிலுள்ள சபையில் “அநேக” என்பது “ஒன்று” எனப் பொருள்படும்போது, பரலோகத்தில் மூன்று ஒன்றாக இருக்கக் கூடும் என்பதை விளங்கிக் கொள்ளுவது ஏன் கடினமாக இருக்கிறது? “ஒரே” குடும்பம் அல்லது “ஒரே” சரீரம் என்பது அந்த அமைப்பிலுள்ள அநேக அங்கத்தினரைக் குறிக்கிறது. அதுபோல தேவத்துவத்திலும் மூன்று அங்கத்தினர் இருந்தாலும் ஒரே தேவன் என்றுதான் சொல்லப்படுகிறதேயொழிய மூன்று தேவன் எனப்படுவது அல்ல! “ஒரே” என்பது எண்ணிக்கையை அல்ல, ஒருமையைக் குறிப்பதாக உள்ளது. அது மூவரை ஒன்றாக்கும்படி அவர்களில் இருக்கும் ஒருமையாகும். அவர்கள் இயல்பிலும், குணாதிசயத்திலும், நோக்கத்திலும், சகலத்திலும் ஒன்றாக இருக்கின்றனர்! அதுவே தேவனுடைய ஒருமனம்.

ஆகவே மூன்று தேவர்கள் இருப்பதாக சொல்லுவது வேதத்தின் அடிப்படையில் தவறாகும். அதன்படி தேவத்துவத்தின் மூன்று நபர்களும் ஒன்றாக இருப்பதாக ஆகாது. ஆனால் அவர்கள் முற்றிலும், முழுமையாக மற்றும் நித்தியத்தில் ஒன்றாக இருப்பதால், அவர்கள் மூன்றில் ஒன்றாக இருக்கும் தேவனே!

6. ஏன், "என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" (யோவான் 14:28 பார்க்கவும்) என்று கூறினார் இயேசு? திரித்துவத்தில் படிநிலை வரிசை உண்டா?

திரித்துவத்தின் மூன்று நபர்களும் சமமாக இருக்கிறார்கள் என்பதை வேதம் வெளிப்படுத்தினாலும், ஒருவரையொருவர் பொருத்து முதல் நிலை மற்றும் துணைநிலை என்னும் வரிசை அவர்களுக்குள் காணப்படுகிறது. **"தேவன் அன்பாக இருக்கிறார்" என்பதால் அது விருப்பத்துடனான சமர்ப்பணமாக இருக்கிறது.**''– 1 யோவான் 14:28.

அது மேன்மை மற்றும் தாழ்மை பற்றிய படிநிலை வரிசையாக அல்லாமல், உயர்முதல் நிலை மற்றும் துணைநிலையாக இருக்கிறது. அது தொடர்பு சார்ந்த மற்றும் செயல்பாட்டு அளவிலான படிநிலை வரிசையாக இருக்கிறது. வேதத்தில் இயேசு **"தேவனுக்குச் சமமானவராக"** (பிலிப்பியர் 2:6) வழங்கப்படுகிறார். அதே சமயம் ஒருவர் மற்றவரை விட உயர்ந்தவராகவும் இருக்கிறார் என்றும் வேதம் கூறுகிறது. இயேசு, ''**என் பிதா என்னிலும் பெரியவரா யிருக்கிறார்.**'' – (யோவான் 14:28) என்று கூறினார். ஒருவர் "பிதா" என்றும், மற்றவர் "குமாரன்" என்றும் அழைக்கப் படுவது தொடர்பு சார்ந்த படிநிலை வரிசையை வெளிப்படுத்துகிறது. இந்த கண்ணோட்டத்தில், குமாரன் பிதாவுடைய சித்தத்துக்கும் வார்த்தைக்கும் மனமுவந்து சமர்ப்பித்து கீழ்ப்படிவதால், பிதா இயேசுவைக் காட்டிலும் பெரியவராக இருக்கிறார். தேவத்துவத் திற்குள் இருக்கும் இந்த செயல்பாடு சார்ந்த படிநிலை வரிசையில் பிதாவுக்கும் குமாரனுக்கும் இருக்கும் பங்கை அப்போஸ்தலனாகிய பவுல் பின்வருமாறு தெளிவாக்குகிறார்.

''**பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்.**'' – 1 கொரிந்தியர் 8:6.

பிதாவாலே சகலமும் உண்டாயிருக்கிறது என்று சொன்ன அப்போஸ்தலர் இயேசுவின் மூலமாக சகலமும் உண்டாயிருக்கிறது

என்கிறார். சகலமும் பிதாவிடமிருந்து குமாரன் மூலமாக வந்தது. சிருஷ்டிப்பானாலும், மீட்பானாலும் பிதாவிடமிருந்துதான் வருகின்றன, ஆனால் அவை அவருடைய குமாரன் மூலமாக வருகின்றன என்பது தெளிவு. சிருஷ்டிப்பைப் பற்றி அப்போஸ்தலர் பின்வருமாறு எழுதுகிறார்: ''**இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லா வற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே...**'' (எபேசியர் 3:9)

தேவத்துவத்தின் மற்றுமொரு அங்கமாகிய பரிசுத்த ஆவியான வருக்கு சிருஷ்டிப்பில் இருக்கும் பங்கு என்ன? இயேசுவின் வார்த்தையையும் பிதாவின் சித்தத்தையும் செயல்படுத்துவதே பரிசுத்த ஆவியானவரின் பங்காகும். சிருஷ்டிப்பின் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்கிறதைக் காண்கிறோம் **"தேவ ஆவியானவர்... அசைவாடிக்கொண்டிருந்தார்."** – ஆதியாகமம் 1:2. சங்கீதக்காரனும் பின்வருமாறு எழுதுகிறார்:

''**நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ் டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்.**'' – சங்கீதம் 104:30. பிரசித்தி பெற்ற வசனமாகிய யோவான் 3:16 மீட்பைப் பற்றிய இதே சத்தியத்தை வெளிப்படுத்துகிறது. ''**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை... தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.**''– யோவான் 3:16. பரிசுத்த ஆவியின் சிருஷ்டிக்கும் கிரியையே இயேசுவை உலகத்திற்கு கொண்டு வந்தது என்பதை சுவிசேஷங்களிலிருந்து (மத்தேயு 1:20) அறிகிறோம். பரிசுத்த ஆவியானவர் பிதா மற்றும் குமாரனின் சித்தத்தையும் வார்த்தையையும் நிறைவேற்றுகிறார்.

பிதாவின் சித்தமே அண்டசராசரத்திலும் செய்யப்படுகிறது. கர்த்தருடைய ஜெபத்தில், இயேசு பின்வருமாறு ஜெபிக்கக் கற்பித்தார்:

''**பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே – உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக.**'' – மத்தேயு 6:9. பிதாவானவர் செய்து முடிக்கிற தனிப்பட்ட பொறுப்புகள் உண்டு, குமாரன் நிறைவேற்றுகிற தனிப்பட்ட பொறுப்புகள் உண்டு, பரிசுத்த ஆவியானவர் செயல் படுத்துகிற தனிப்பட்ட பொறுப்புகளும் உண்டு. யாக்கோபும்

யோவானும் தேவ ராஜ்யத்தில் தங்களுக்கு விசேஷித்த இடங்களை கேட்டுக் கொண்டபோது, இயேசு இவ்வாறு பதிலளித்தார்:

‘‘**என் வலது பாரிசத்திலும் இடது பாரிசத்திலும் உட்கார்ந் திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார்.**’’ – மத்தேயு 20:23. ஆம், தேவத்துவத்தில் பிதாவே தீர்மானங்களை எடுப்பவராக இருக்கிறார் என்பது இந்த வேதப்பகுதியில் தெளிவாகத் தெரிகிறது.

தேவகுமாரன் பிதாவுக்கு துணைநிலையில் இருப்பது போல, தேவனுக்கு சமமானவரான பரிசுத்த ஆவியானவரின் செயல்படும் பொறுப்பு பிதா மற்றும் குமாரனுக்கு துணைநிலையில் இருக்கிறது. பிதாவே எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஆதிகாரணர். குமாரன் அவை வந்தடையும் வழியாக இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் இதை வெளிப்படுத்துகிறவராக இருக்கிறார். பரிசுத்த ஆவியின் செயல்படும் பங்கினாலேயே எல்லா ஆசீர்வாதங்களும் வெளிப் படுகின்றன.

பிதாவானவர் தம் சித்தத்தை குமாரனுக்கு வெளிப்படுத்துகிறார், குமாரன் பிதாவின் சித்தம் செயல்படுத்தப்படுமாறு அதை பரிசுத்த ஆவியானவருக்கு தெரிவிக்கிறார். தேவத்துவத்தில் பிதாவானவர் தேவனுடைய சிந்தை போலவும், குமாரன் தேவனுடைய வாய் போலவும், பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய கரங்கள் போலவும் இருக்கிறார்கள். நிர்வாக பாஷையில் பிதாவை இயக்குநர் என்றும், குமாரனை கட்டளையிடுபவர் என்றும், பரிசுத்த ஆவியானவரை செயல்படுத்துபவர் என்றும் கொள்ளலாம்.

பிதாவையும் குமாரனையும் குறித்துப் பேசும்போது இயேசு இவ்வாறு குறிப்பிடுகிறார்: ‘‘**நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன்.**’’ – யோவான் 8:28. பரிசுத்த ஆவியானவரையும் தம்மையும் குறித்துப் பேசும்போது இயேசு பின்வருமாறு சொன்னார்: ‘‘**சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.**’’ – யோவான் 16:13.

''**சகல ஆசீர்வாதங்களும் பிதாவிடமிருந்து** (யாக்கோபு 1:17) **குமாரன் மூலமாக பரிசுத்த ஆவியானவரால் வருகின்றன.**'' ஆகவே சகல துதியும் ஆவியின் மூலமாக, குமாரனால் பிதாவுக்குப் போகிறது. அதனால்தான் நாம் இயேசுவின் நாமத்தில் பிதாவிடம் ஜெபிக்கிறோம். கர்த்தர், ''**நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்.**'' – யோவான் 14:13 என்று சொன்னார்.

யார் நாம் ஜெபிக்க உதவி செய்கிறவர்? பரிசுத்த ஆவியானவரே என்று தேவவசனம் கூறுகிறது. அப்போஸ்தலர் பின்வருமாறு எழுதினார்: ''**அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டிய தின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.**'' – (ரோமர் 8:26).

நாம் எவ்வாறு பிதாவாகிய தேவனை சென்றடைகிறோம் என்பதை பற்றிய அற்புதமான ஒரு வசனத்தை அப்போஸ்தலனாகிய பவுல் எழுதி வைத்தார்: ''**அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் [இயேசு] மூலமாய் பெற்றிருக்கிறோம்.**'' – (எபேசியர் 2:18).

ஆம், சகலவற்றிலும், சிருஷ்டிக்கிறதாய் இருப்பினும் மீட்டல் அல்லது காத்தலாக இருப்பினும் அனைத்துமே பிதாவிடமிருந்து குமாரன் மூலமாக பரிசுத்த ஆவியானவரால் வருகின்றன. நாம் பரலோகத்துடன் கொண்டிருக்கும் தொடர்பு பரிசுத்த ஆவி யானவரால் குமாரன் மூலமாக பிதாவுடன் இருக்கிறது.

ஆம், தேவன் ஒருவரே, மூவரும் ஒன்றே என்று வேதம் வெளிப்படுத்துகிறது. அவர்கள் ஒரே தெய்வீக சுபாவத்தையும் பண்புகளையும் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மூவரும் தேவத்துவத்தில் தனிப்பட்ட காரியங்களை நிறைவேற்றி அண்ட சராசரமும் சுமுகமாக இயங்கச் செய்கிறார்கள். இந்த தொடர்பு சார்ந்த கண்ணோட்டத்தில்தான் இயேசு, "**பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்**" என்று அறிவித்தார்.

7. தேவனே தேவனைக் கைவிடுவது எவ்வாறு? (மத்தேயு 27:46). அதில் ஒருமனம் எங்கே இருக்கிறது?

வீழ்ந்து போன மனுக்குலத்தை இரட்சிக்க திரித்துவம் ஒன்று சேர்ந்து கிரியை செய்தது. அவர்களின் ஒருமனப்பாடு சகலத்திலும், சிலுவையிலும் கூட, தெளிவாகத் தெரிகிறது. பிதா தம் குமாரனை அனுப்பினார் (யோவான் 3:16), குமாரன் வந்தார் (எபிரேயர் 10:7), கன்னியின் வயிற்றில் இயேசு பிறந்ததை சாத்தியமாக்கியவர் பரிசுத்த ஆவியானவர் (மத்தேயு 1:20).

இவ்வுலகத்தில் இயேசுவின் வாழ்க்கை மற்றும் ஊழியம் முழுவதிலும் பிதாவும் பரிசுத்த ஆவியானவரும் அவரோடு இணைந்து செயலாற்றுவதைக் காண்கிறோம் (லூக்கா 4:18). இயேசு, ''**என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியே இருக்கவிடவில்லை என்றார்.**'' – (யோவான் 8:29).

இயேசு இந்த உலகத்திற்கு வருவதற்கான முக்கியமான நோக்கம் நம்முடைய பாவங்களுக்காக மரிப்பதுதான். இயேசு, ''**உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி**'' (யோவான் 1:29) – ஆக வந்தார்.

அவர் தேவ ஆட்டுக்குட்டி. தேவன் இந்த ஆட்டுக்குட்டியை மனுக்குலத்திற்கு கொடுத்தார், மற்றும் மனுக்குலத்தை இரட்சிக்கவும் ஆசீர்வதிக்கவும் தேவன் தம் ஆட்டுக்குட்டியை பலியாகக் கொடுத்தார். இந்த தெய்வீக பலியில் பிதாவின் செயல்பாட்டைப் பற்றி ஏசாயா எழுதினார்:

''**கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரை பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது...**'' (ஏசாயா 53:10).

சிலுவையில் இயேசுவை மட்டுமல்ல, பிதாவும் பரிசுத்த ஆவியானவரும் சிலுவையின் மூலமாக கிரியை செய்வதையும் காண்கிறோம். பிதாவானவர் சிலுவையில் செய்ததை பவுல் பின்வருமாறு எழுதினார்:

‘‘**தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களை தமக்கு ஒப்புரவாக்கி...**’’ – 2 கொரிந்தியர் 5:19.

மற்றும் சிலுவையில் பரிசுத்த ஆவியின் கிரியையைப் பற்றி அப்போஸ்தலர் பின்வருமாறு எழுதி வைத்தார்:

‘‘நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியை செத்தக் கிரியை களற சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!’’ – எபிரேயர் 9:14.

ஆகவே சிலுவையில் கூட ஒரே தேவன் பரிபூரண இசைவுடனும் நிறைவான ஒற்றுமையுடனும் செயலாற்றுவதைக் காண்கிறோம்! இப்போது இயேசு சிலுவையில் தொங்கியபோது கூறிய அந்த இரகசியம் நிறைந்த கூற்றைப் பற்றிப் பார்ப்போம்: ‘‘**ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு: ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.**’’ – மத்தேயு 27:46.

தேவனால் இப்படி கைவிடப்படுவது இரட்சிப்பின் திட்டத்தில் இருந்தது. பாவம் தேவனுக்கும் மனுஷனுக்கும் பிரிவை உண்டாக்குகிறது என்று வேதம் நமக்கு வெளிப்படுத்துகிறது. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசி பின்வருமாறு எழுதினார்:

‘‘உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்கு செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.’’ – ஏசாயா 59:2.

சிலுவையில் உலகத்தின் பாவங்கள் இயேசுவின் மீது சுமத்தப்பட்டன. அப்போஸ்தலனாகிய பேதுரு இவ்வாறு எழுதுகிறார்: ‘‘**அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையின் மேல் சுமந்தார்.**’’ – 1 பேதுரு 2:24. சிலுவையில் உலகத்தின் பாவங்களை இயேசு தம்மீது ஏற்றுக் கொண்டதால், தற்காலிகமாக இந்த பிரிவு ஏற்பட வேண்டியதாயிற்று.

பாவ மனுகுலத்திற்காக கிரயம் செலுத்தும் பிரதிநிதியாக இயேசு வந்தார். உலகத்தின் பாவங்களை இயேசு தம்மீது ஏற்றுக் கொண்டதால், அவர் முற்றிலும் பாவமற்றவராக இருந்தாலும், பாவியைப் போல தோன்றினார். அண்டசராசரத்தின் நியாயாதி பதியாகிய தேவன் நல்லவரும் நீதியுள்ளவருமாக இருப்பதால் பாடுபடும் தெய்வத்திடமும் பட்சபாதம் காண்பிக்கவில்லை. அவர் பரிசுத்தமானவரும் பாவமற்றவருமாக இருந்தபோதிலும் நமக்காகப் பாவமாகி, பாவ மனுக்குலத்திற்காக தண்டனையை அனுபவிக்க வேண்டியதாயிற்று. அப்போஸ்தலர் இதைப் பற்றி பின்வருமாறு எழுதுகிறார்:

''**நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.**'' – 2 கொரிந்தியர் **5:21.** தேவன் எவ்வாறு மனுஷரை மீட்பார் என்பது முதற்கொண்டு இயேசுவின் கதறல் வரை கூட நீண்ட காலத்திற்கு முன்பாகவே பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டுள்ளன. ''**என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?**'' – சங்கீதம் **22:1.**

நீங்களும் நானும் சிலுவையில் தேவனுடன் ஒப்புரவாக வேண்டும் என்பதற்காகவே கிறிஸ்து சிலுவையில் கைவிடப்பட்டார்! நீங்களும் நானும் சிலுவையில் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்காகவே கிறிஸ்து சிலுவையில் புறக்கணிக்கப்பட்டார்! உங்களையும் என்னையும் சிலுவையில் தேவன் அரவணைத்துக் கொள்ளுவதற் காகவே கிறிஸ்து சிலுவையில் அசட்டை பண்ணப்பட்டார்!

''**பிரியமானவருக்குள் தாம் நமக்கு தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார். அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.**'' – எபேசியர் 1:57.

சிலுவையில் தேவன் பரிசுத்த தேவனை கைவிட்டது பாவ மனுஷனை அரவணைத்துக் கொள்வதற்காகவே! "**பிரியமானவரில் நம்மை ஏற்புடையவர்களாக்கின**" அதே காரியத்தினால் அவர் கைவிடப்பட்டார்.

8. இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பியவர் யார்? வேதாகமம் இந்த விஷயத்தில் முன்னுக்குப் பின் முரணாக இருப்பது போலத் தோன்றுகிறதே!

பெந்தகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்வதை கேட்போம்: ''**தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது.**'' – அப்போஸ்தலர் 2:24. எனவே, இதற்கான பதில் இயேசுவை எழுப்பியவர் தேவனே. "திரித்துவத்தில் உள்ள மூன்று நபர்களில் இயேசுவை எழுப்பியவர் யார்?" என்ற கண்கூடான கேள்வி எழுகிறது.

இயேசுவை எழுப்பின கிரியையை பிதாவாகிய தேவனும், குமாரனும், பரிசுத்த ஆவியுமாகிய திரித்துவத்தின் மூன்று நபர்களும் செய்ததாக வேதம் கூறுகிறது! இந்த காரியத்தைப் பற்றி வேதத்தின் பல பத்திகளில் குறிப்பிடப்பட்டிருப்பதை பார்த்து விளங்கிக் கொள்வோம்.

பிதாவாகிய தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பியதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியா சபைக்கு எழுதினார்: ''**மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, இயேசு கிறிஸ்துவி னாலும், அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின பிதாவாகிய தேவனாலும்...**'' – கலாத்தியர் 1:1.

யோவான் சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்து தம் உயிர்த்தெழுதலில் தாமும் ஈடுபட்டிருந்ததை குறித்து மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

''**நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார்.**'' – யோவான் 10:17, 18.

மேலும் அவர் மார்த்தாளிடம் பின்வருமாறு சொன்னார்: ''**நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்.**'' – யோவான் 11:25. அப்போஸ்தலனாகிய பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பரிசுத்த ஆவியானவர் இயேசுவை மரணத்திலிருந்து எழுப்பினார் என்று சொல்லியிருப்பதை வாசிக்கிறோம். ''**அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக் கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.**'' – ரோமர் 8:11.

இவையனைத்திலும் முரண்பாடு ஒன்றுமில்லை, மாறாக இவை இரட்சிப்பின் திட்டத்தில் தேவத்துவத்தின் மூன்று நபர்களும் ஒரே தேவனாக ஒன்று சேர்ந்து செயல்படுவதற்கான ஆதாரமாக உள்ளன. மேலும் இது, திரித்துவத்தின் ஒரு நபர் கிரியை செய்யும்போது மற்ற இரு நபர்களும் எப்போதும் மிக நெருக்கமாக அதில் ஈடுபடுகிறார்கள் என்பதை தெளிவாக எடுத்துக் காட்டும் உதாரணமாகவும் இருக்கிறது. தேவத்துவம் செய்கிற எந்த ஒரு காரியமும் மூன்று நபர்களாலும் செய்யப்படுகின்றது. அவர்கள் ஒருபோதும் ஒருவரை ஒருவர் விட்டு தனித்து செயல்படுவதில்லை. ஆம், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் பிதாவாகிய தேவன் முக்கிய நபராக இருந்தார் என்று அநேக வேதப்பகுதிகள் மிகத்தெளிவாக எடுத்துக் காண்பிக்கின்றன. அதே சமயம் குமாரனும் பரிசுத்த ஆவியானவரும் உயிர்த்தெழுதலில் பங்குள்ளவர்களாக இருந்தார்கள்.

இயேசு கிறிஸ்துவின் திருஅவதாரத்தைக் குறித்தும், பிதாவாகிய தேவன்தாமே தம் குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பினார் என்று வேதம் எடுத்தியம்புகிறது (யோவான் 3:16 பார்க்கவும்). இந்த செயலில் தேவத்துவத்தின் மற்ற இரு நபர்களும் ஈடுபட்டிருந்தார்களா? நிச்சயமாக ஈடுபட்டிருந்தார்கள்! பிதாவினால் வற்புறுத்தப்படாமல் தேவகுமாரன் மனுக்குல குடும்பத்தில் பங்கேற்க தாமாகவே மனமுவந்து இறங்கி வந்தார் என்று வேதம் வெளிப்படுத்துகிறது (எபிரேயர் 10:59 பார்க்கவும்). திரித்துவத்தின் மூன்றாம் நபரான பரிசுத்த ஆவியானவர் இயேசு இவ்வுலகத்தில் பிறப்பதற்காக தம் சிருஷ்டிக்கும் வல்லமையை மரியாளின்

கர்ப்பத்தில் செயல்படுத்தினார் என்பதை சுவிசேஷப் புத்தகங்கள் பூரணமாக விளக்குகின்றன (மத்தேயு 1:20 பார்க்கவும்).

சிலுவையில் இயேசு செய்த தியாகத்தை பார்க்கும்போதும் அவர்கள் மூவருமே ஈடுபட்டிருப்பதை காணலாம். பிதாவானவர் நம் பாவங்களுக்காக இயேசுவை ஒப்புக் கொடுத்தார் என்று வேதம் அறிவிக்கிறது (ஏசாயா 53:10; ரோமர் 8:32 பார்க்கவும்). இயேசு தம் ஜீவனை கொடுத்தது தாமாகவே மனமுவந்து செய்த செயல் என்பதையும் வேதம் வெளிப்படுத்துகிறது (யோவான் 10:17, 18). மேலும் ஆவியானவரின் வல்லமையினாலேயே கல்வாரியில் இயேசு பரிபூரணமான ஒரு பலியானார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் (எபிரேயர் 9:14).

ஆகவே, இயேசுவை மரணத்திலிருந்து எழுப்பியவர் யார் என்பதில் எந்தவொரு முரண்பாடும் இல்லை! அது திரித்துவம் ஒன்றான தேவனாகச் செய்த கிரியையாயிருக்கிறது.

9. திரித்துவம் என்ற கருத்து புதிய ஏற்பாட்டில் மட்டும் காணப் படுவது ஏன், பழைய ஏற்பாட்டில் கண்கூடாக புலப்படாதது ஏன்?

திரித்துவத்தை பற்றிய உபதேசம் தெளிவாக குறிப்பிடப்பட்டிருப்பது புதிய ஏற்பாடுதான் என்றாலும், பழைய ஏற்பாட்டிலும் கண்கூடாகவே காணப்படுகிறது. ஆதியாகமம் முதல் மல்கியா வரை, குறிப்பாக எபிரேய ஆக்கத்தில், பன்மை பெயர்ச்சொற்கள், பன்மை பிரதி பெயர்ச்சொற்கள், பன்மை வினைச்சொற்கள், பன்மை வினையுரிச்சொற்கள், மற்றும் பன்மை உரிச்சொற்கள் ஆகியவை வழக்கமாக தேவனைக் குறிக்கும் விதத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளன.

ஏலோஹிம் என்ற சொல் தேவனைக் குறிக்கும்படி ஆயிரக் கணக்கான முறைகள் உபயோகிக்கப்பட்டுள்ளது. அடோனை என்னும் சொல் கர்த்தரைக் குறிக்கும் விதத்தில் நூற்றுக்கணக்கான முறைகள் உபயோகிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு சொற்களும் எபிரேயத்தில் பன்மை பெயர்ச்சொற்களாகும்.

உயர் அதிகாரத்தில் இருப்பவர்களை மரியாதையுடன் குறிப்பிட பன்மையை உபயோகிப்பதுண்டு என்று சில விமர்சகர்கள் சொல்லு கிறார்கள். அப்படியானால், ஜனங்கள் ராஜாக்களை அல்லது உயர் அதிகாரிகளை அழைக்கும்போது எபிரேய உரைகள் பன்மையாகக் குறிப்பிடாதது ஏன்? ஆனால் தேவனைக் குறிப்பிட எபிரேய உரை பன்மையை அடிக்கடி உபயோகிக்கும்போது, அந்தக் காரியத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிட உபயோகிக்கிறதே அல்லாமல் மரியாதையைக் குறிப்பதாக உபயோகிப்பதில்லை!

பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் தேவன் தம்மைத்தாமே "நாம்" மற்றும் "நம்முடைய" என்று குறிப்பிடுகிறார். உதாரணமாக,

''**பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக என்றார்.**'' – ஆதியாகமம் 1:26. ''**இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்.**'' – ஆதியாகமம் 3:22. ''**நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையை தாறுமாறாக்குவோம் என்றார்.**'' – ஆதியாகமம் 11:7. ''**பின்பு யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன்.**'' – ஏசாயா 6:8.

மீண்டும் ஆதியாகமம் 1:26 பார்க்கவும். ''**பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்கு வோமாக என்றார்.**'' – ஆதியாகமம் 1:26. தேவனைக் குறிக்க இந்த பத்தியில் ஒருமையும் பன்மையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பத்தியைப் பற்றி விளக்கமாகக் காண்போம்: "**பின்பு தேவன் (ஒருமை): நமது (பன்மை) சாயலாகவும் நமது (பன்மை) ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக [பன்மை] என்றார்.**" – ஆதியாகமம் 1:26. தேவத்துவத்தின் ஒற்றுமை இந்த பத்தியிலும் மற்ற அநேக பத்திகளிலும் தெளிவாகக் காணப் படுகிறது. தேவன் ஒருவரே, ஆனால் இந்த ஒரே தேவனில் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் காணப்படுகிறார்கள்.

மற்றும் சில விமர்சகர்கள் ஆதியாகமம் 1:26இல் உபயோகிக்கப் பட்டுள்ள "நாம்" அல்லது "நம்முடைய" என்பவை தேவத்துவத்தினுள்

உள்ள நபர்களை அல்ல, தேவன் தேவதூதரிடம் பேசுவதால் பன்மை உபயோகிக்கப்பட்டுள்ளது என்று விவாதிக்கிறார்கள். தேவதூதரும் மற்ற சிருஷ்டிகளும் சிருஷ்டிப்பில் இல்லையென்பதால் இது உண்மையாகாது! இங்கு தேவத்துவத்தினுள் இருக்கும் நபர்களே ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளுகிறார்கள், பிதாவாகிய தேவன் தம் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக சகலத்தையும் சிருஷ்டித்தார் என்று தெளிவாகக் கூறுகிறது புதிய ஏற்பாடு.

''இயேசு கிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே...'' – எபேசியர் 3:11. ஆகவே, அங்கு பேசிக்கொண்டது தேவத்துவத்தில் இருந்த வர்கள் தாம், சிருஷ்டி களுடன் பேசவில்லை. மூன்று நபர்களும் அவரவருக்குரிய தனிச்சிறப்புடைய பங்கை செய்த போதிலும், ஒரே தேவனாக அவர்கள் இசைந்து பணியாற்றுவதை குறிப்பிடும் அநேக பழைய ஏற்பாட்டு பத்திகள் உண்டு. வேதத்தின் துவக்க வசனங்களே தேவத்துவத்தின் மூன்று நபர்களை நமக்கு காண்பிக்கின்றன. மோசே பின்வருமாறு எழுதினார்:

''ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின் மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார். தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று.'' – ஆதியாகமம் 1:13. இந்த பத்தியில் தேவன் தம்முடைய வார்த்தையினாலும் தம்முடைய ஆவியினாலும் சகலத்தையும் சிருஷ்டித்தார் என்று பார்க்கிறோம்.

இதையொத்த மற்றுமொரு வசனத்தை சங்கீதங்களின் புத்தகத்தில் சங்கீதக்காரன் எழுதியிருக்கிறார்: **''கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது.''** – சங்கீதம் 33:6.

சிருஷ்டிப்பில் முனைப்பான பங்கு வகித்த "வார்த்தை" இயேசு கிறிஸ்துவே என்று புதிய ஏற்பாடு தெளிவாகக் குறிப்பிடுகிறது. அப்போஸ்தலனாகிய யோவான் ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் உபயோகிக்கப்பட்டுள்ள அதே எழுத்து வடிவத்தை உபயோகித்து, சிருஷ்டிப்பின் பதிவில் இருந்த "வார்த்தை" இயேசுவே என்று

குறிப்பிடுகிறார்: ''**ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தி லிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டா யிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாக வில்லை.**'' – யோவான் 1:13.

ஏசாயா புத்தகத்திலும், வேதத்தின் மற்ற பகுதிகளிலும் தேவத் துவத்தின் மூன்று நபர்களும் ஒரே பத்தியில் குறிப்பிடப் பட்டிருக்கும் அநேக வசனங்கள் உள்ளன. தேவன் தம் குமாரனு டைய வருகை மற்றும் அவருடைய பணியை குறித்து கொடுத்த செய்தியை ஏசாயா பதிவு செய்திருக்கிறார்: ''**இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்து கொண்டவரும், என் ஆத்துமாவுக்கு பிரியமானவரும் இவரே; என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன்; அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார்.**'' – ஏசாயா 42:1.

வேதத்தின் இந்தப் பத்தியில் பிதாவானவர் பேசுகிறார். "என் தாசன்'' என்பது இயேசுவைக் குறிக்கிறது, ''என் ஆவி'' என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது. திரித்துவத்தைப் பற்றிய மற்றுமொரு தெளிவான பத்தி பழைய ஏற்பாட்டின் ஒரு வசனத்தில் காணப்படுகிறது: ''**நீங்கள் என் சமீபத்தில் வந்து நான் சொல்வதைக் கேளுங்கள்; நான் ஆதி முதற்கொண்டு அந்தரங்கத்தில் பேசவில்லை; அது உண்டான காலந்துவக்கி அங்கே நான் இருந்தேன்; இப்பொழுதோ கர்த்தராகிய ஆண்டவரும், அவருடைய ஆவியும் என்னை அனுப்புகிறார்.**'' – ஏசாயா 48:16.

ஒரு தெய்வீக ஜீவன் இங்கு பேசுகிறது. அவர், "**ஆதி முதற் கொண்டு அந்தரங்கத்தில் பேசவில்லை. அது உண்டான காலந் துவங்கி அங்கே இருந்தேன்**'' என்று குறிப்பிடுகிறார். தேவன் ஒருவர் தாமே ஆதியிலிருந்து இருக்கிறார், சிருஷ்டிகள் அல்ல. இந்த வசனத்தில் பேசுபவர் தேவகுமாரன், ஏனெனில் அவர், "**என்னை அனுப்பினார் என்று சொல்லுகிறார்.**'' தேவகுமாரனாகிய இயேசுவே அப்படி வந்தவர் என்று புதிய ஏற்பாட்டிலிருந்து அறிந்து கொள்ளுகிறோம்.

ஏசாயா 61 ஆம் அதிகாரத்தில் திருத்துவத்தை ஒன்றாகக் காணும் ஓர் அழகான பத்தி உள்ளது: ''**கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்கு**

சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நொறுங் குண்டவர்களுக்கு காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலையும் கூறவும்...'' – ஏசாயா 61:1. இந்த வசனத்தை இயேசு லூக்கா 4:18 21–இல் தாம் நிறைவேற்ற வந்த தீர்க்க தரிசனமாகக் குறிப்பிட்டார். மீண்டும் அந்த ஒரு வாக்கியத்தில் திரித்துவத்தை காண்கிறோம். ''கர்த்தருடைய (பிதா) ஆவியானவர் (பரிசுத்த ஆவி) என் (குமாரன்) மேலிருக்கிறார் ''

தேவத்துவத்தின் இரண்டாம் நபரைக் குறிக்கும் ''குமாரன்'' என்னும் சொல்லும் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இயேசு துன்மார்க்கர் மீது நியாயத்தீர்ப்பு கொடுக்க வருவதான அவருடைய இரண்டாம் வருகையைக் குறித்துப் பேசும்போது, இரண்டாம் சங்கீதத்தில் ''குமாரன்'' என்னும் சொல் இயேசுவைக் குறிக்கும் விதத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது.

''**குமாரன் கோபங் கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ் செய்யுங்கள்; கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும்; அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்.**'' – சங்கீதம் 2:12. நீதிமொழிகளின் புத்தகத்திலும் தேவகுமாரனின் பெயரை அறிந்தவர் உண்டோ? என்ற கேள்வி கேட்கப்பட்டுள்ளது!

''**வானத்துக்கு ஏறியிறங்கினவர் யார்? காற்றைத் தமது கைப்பிடிகளில் அடக்கினவர் யார்? தண்ணீர்களை வஸ்திரத்தில் கட்டினவர் யார்? பூமியின் எல்லைகளையெல்லாம் ஸ்தாபித்தவர் யார்? அவருடைய நாமம் என்ன? அவர் குமாரனுடைய நாமம் என்ன? அதை அறிவாயோ?**'' – நீதிமொழிகள் 30:4. பழைய ஏற்பாட்டில் தேவனுடைய ஆவியைப் பற்றி குறிப்பிடும் மேலும் பல பத்திகளும் உள்ளன.

ஆகவே, திரித்துவத்தைப் பற்றிய சத்தியம் புதிய ஏற்பாட்டில் காணப்படுவது மட்டுமல்ல, புதிய ஏற்பாட்டைப் போல குறிப்பாக இல்லையெனினும், பழைய ஏற்பாட்டிலும் தெளிவாகக் கொடுக்கப் பட்டுள்ளது.

10. தேவத்துவத்தின் ஒவ்வொரு நபரும் முழுமையாக தேவனாக இருக்கிறார்களா அல்லது மூன்று நபர்களும் ஒன்று சேரும்போதுதான் தேவன் முழுமையடைகிறாரா?

‘‘**பி**தாவானவர் தேவனாக இருக்கிறார்’’ – (எபேசியர் 1:2), ‘‘குமாரனும் தேவனாக இருக்கிறார்’’ – (மத்தேயு 1:23), மற்றும் ‘‘பரிசுத்த ஆவியானவரும் தேவனாக இருக்கிறார்’’ – (அப்போஸ்தலர் 5:3, 4) என்று வேதம் வெளிப்படுத்துகிறது. மேலும், கேள்வி எண் 5 இல் மூன்று தேவர்கள் அல்ல, ஒரே தேவன் மட்டுமே நமக்குண்டு என்றும் பார்த்தோம். ஒரே என்பது அவர்களுடைய ஒற்றுமையின் ஒருமனப்பாட்டைப் பற்றியது.

தேவத்துவத்தில் உள்ள நபர்கள் ஒவ்வொருவரும் தெய்வீக பண்புகளில் முழுமையாக இருக்கிறார்கள் என்றும் தேவவசனம் வெளிப்படுத்துகிறது. உதாரணமாக, தேவத்துவத்தின் இரண்டாம் நபராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து பேசும்போது, அப்போஸ் தலனாகிய பவுல் பின்வருமாறு எழுதுகிறார்: ‘‘**ஏனென்றால், தேவத் துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகார மாக, அவருக்குள் வாசமாயிருக்கிறது.**’’ – கொலோசெயர் 2:9.

இயேசு தேவத்துவத்தின் பரிபூரணத்தை தம்மில் கொண்டிருந்தது போல, பிதாவும் பரிசுத்த ஆவியானவரும் கொண்டிருக்கிறார்கள். மூவரும் ஒன்று சேர்ந்து ஒரே முழுமையாகத் திகழ்கிறார்கள். அவர்கள் தனித்தனியாகவும், ஒன்று சேர்ந்தும் முழுமையாக இருக்கிறார்கள். தேவனுடைய இந்த மாபெரும் ஒருமனப்பாட்டின் இரகசியத்தை விளங்கிக் கொள்ளுவது சற்று கடினமாக இருக்கலாம், ஆனால் இயற்கையாக தேவன் சிருஷ்டித்திருக்கும் சில காரியங்களிலிருந்து தேவத்துவம் எவ்வாறு இருக்கும் என்பதை கண்டுகொள்ளலாம்.

இயற்கையின் கூறுகளாகிய தண்ணீர், நெருப்பு, மற்றும் காற்று ஆகியவை தேவத்துவத்தில் உள்ள நபர்களின் தனித்தன்மைக்கும் ஒருமைக்கும் உதாரணங்களாக கொடுக்கப்படலாம்.

உதாரணத்திற்கு தண்ணீரை எடுத்துக் கொள்ளுங்கள்: ஒரு துளி தண்ணீரும் தண்ணீர்தான், ஏனெனில் அது தண்ணீரின்

எல்லாக் கூறுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. மூன்று துளி தண்ணீரை சேர்த்து ஒரே துளியாக்கினால், அதே தண்ணீர் அமைப்பாக இருக்கும். மூன்று துளிகளை தனித்தனியே பிரித்துப் பார்க்க முடியாது. அவை தண்ணீரின் ஒரே தொகுதியாக மாறி விட்டன. நெருப்பு மற்றும் காற்றுக்கும் இது பொருந்தும்.

இதே விதமாக, பிதாவும், குமாரனும், பரிசுத்த ஆவியும் தண்ணீரின் மூன்று துளிகள் போல தமக்குத் தாமே முழுமையாகவும், ஒன்றாகச் சேரும்போதும் முழுமையாகவும் காணப்படுகிறார்கள். அவர்கள் தனிப்பட்ட விதத்தில் முழுமையான தேவனாகவும், ஒன்று சேர்ந்து ஒரே தேவனாகவும் விளங்குகிறார்கள்.

11. இயேசு சத்தியமாகவும் முழுமையாகவும் தேவனாக இருப்பின் தம்முடைய இரண்டாம் வருகையின் நாளையும் நேரத்தையும் பற்றி தமக்கே தெரியாது எனச் சொல்லியது ஏன்?

இதை விளங்கிக் கொள்ள இயேசு மனித மற்றும் தெய்வீக சுபாவங்களை கொண்டிருந்தார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். தேவகுமாரன் மனுஷகுமாரனுமாயிருந்தார். மனுக் குலத்தை இரட்சிக்க அவர் நம்முடைய நிலைக்கு இறங்கி வந்து, நம் ஸ்தானத்தில், நம்முடைய பாவங்களுக்காக மரிக்க வேண்டியதாயிருந்தது. தேவன் மனிதனின் நிலைக்கு தம்மைத் தாழ்த்தி இறங்கினார் இதுதான் நடந்தது என்று வேதம் வெளிப்படுத்துகிறது. அப்போஸ்தலனும் பின்வருமாறு எழுதுகிறார்:

''**அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.**'' – பிலிப்பியர் 2:6, 7. இயேசு "**தம்மைத்தாம் வெறுமையாக்கி**" மனித குடும்பத்தில் வந்து பிறந்தார். மனுக்குலத்தை இரட்சிக்க தேவதூதர்களைக் காட்டிலும் கீழானவரானார். அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வாறு எழுதுகிறார்: ''**மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம்...**'' – எபிரேயர் 2:9

பிதா அனுமதித்தாலொழிய மனுஷனாகிய இயேசு கிறிஸ்து தம் தெய்வீகத்தை ஒருபோதும் உபயோகிக்கவில்லை. ஒருமுறை

மறுரூப மலையில் இயேசு சீஷரில் மூன்று பேருக்கு தம் தெய்வீகத்தையும் மகிமையையும் காண்பித்தார் (மத்தேயு 17:16 பார்க்கவும்). மற்றுமொரு முறை தம்முடைய உயிர்த்தெழுதலில், தம்மில் தாமே உயிரோடு எழுந்தபோது, மீண்டும் நாம் இயேசுவின் தெய்வீகத்தை முழு அளவில் காண்கிறோம். மற்றும் இயேசு பிதா தமக்கு விசேஷித்த கட்டளையை கொடுத்திருப்பதாகவும் பின்வரும் வசனத்தில் குறிப்பிடுகிறார். ‘‘**நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு. இந்த கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார்.**’’ –யோவான் 10:18.

அவர் செய்த வல்லமையான கிரியைகளும் அற்புதங்களும் அவருடைய தெய்வீகத்தினால் செய்யப்படாமல், பரிசுத்த ஆவியின் வல்லமையால் செய்யப்பட்டன. அவர் கூறுகிறார்: ‘‘**கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களை குணமாக்கவும், சிறைப்பட்டவர் களுக்கு விடுதலையையும், குருடருக்கு பார்வையையும் பிரசித்தப் படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்...**’’ – லூக்கா 4:18

அவர் பூமிக்கு வந்தபோது மனித வளர்ச்சி மற்றும் மேம் பாட்டின் வழியாக கடந்து சென்றார். வேதம் பின்வருமாறு அதை வெளிப்படுத்துகிறது: ‘‘**இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தி யிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்.**’’ – லூக்கா 2:52. இயேசு தேவனாக ஞானத்தில் வளரவில்லை, ஏனெனில் தெய்வீக இயேசு சர்வஞானியாக இருக்கிறார். ஆனால் இயேசுவோ சரீரத்திலும் மனோரீதியாகவும் தம் அம்சங்களில் வளர்ந்து வந்தார். எல்லாவற்றிற்கும் தம் பிதாவையும், பரிசுத்த ஆவியையையும் முற்றிலும் சார்ந்திருந்தார். அதனால்தான் பின்வருமாறு கூறினார்: ‘‘**நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை.**’’ – யோவான் 5:30.

இயேசுவின் போதனைகளும் கூட அவருடைய தெய்வீகத்தினி மித்தம் வரவில்லை, மாறாக பிதா கற்பிக்கிறபடி அவர் பேசவும் போதிக்கவும் செய்வார்.

‘‘**என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ள மாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது.**’’ – யோவான் 14:24. ‘‘**ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.**’’ – யோவான் 15:15. இயேசு பூமியில் இருந்தபோது பிதாவானவர் அவருடைய இரண்டாம் வருகையின் காலத்தை இயேசுவுக்கு வெளிப்படுத்தியிருக்கவில்லை. பிதா வெளிப்படுத்திய அனைத்தையும் இயேசு சொல்லிவிட்டார்.

அவர் மனுஷனாவதற்கு “**தம்மைத்தாமே வெறுமையாக்கினார்**” (பிலிப்பியர் 2:6), மற்றும் “**ஞானத்தில் விருத்தியடைந்தார்**” (லூக்கா 2:52). மனுஷனாக இருந்த இயேசு தம்முடைய இரண்டாம் வருகையைப் பற்றி அறிந்திருக்கவில்லை, ஏனெனில் பிதா அந்த சமயத்தில் தம் குமாரனுக்கு அதை வெளிப்படுத்தியிருக்கவில்லை. அதனால்தான் அவர் பின்வருமாறு சொன்னார்: ‘‘**அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்.**’’ – மாற்கு 13:32.

ஆனால் அவருடைய உயிர்த்தெழுதலுக்கு பின்னர் பிதா சகல பரலோக வல்லமைகளையும் தம் குமாரனுக்கு மீண்டும் கொடுத்துவிட்டார். இயேசு இதற்கு சாட்சியாக பின்வருமாறு கூறுகிறார்: உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் பேதுரு இயேசுவிடம், ‘‘**ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர்.**’’ – யோவான் 21:17 என்று சொன்னார். இதைக் கேட்டு இயேசு பேதுருவை கடிந்து கொள்ளவோ, திருத்தவோ இல்லை, ஏனெனில் உயிர்த்தெழுந்த கர்த்தர் “**சகலத்தையும் அறிந்த**” “**சர்வ வல்லமையுள்ளவராக**” இருக்கிறார்.

12. பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் என்றோ தேவன் என்றோ குறிப்பிட்டுச் சொல்லும் ஒரு வசனம் கூட வேதத்தில் இல்லை. எனவே, பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு தேவத்துவத்தில் இடம் பெற முடியும்?

பரிசுத்த ஆவியானவர் ஒரு நபரா அல்லது ஓர் சக்தியா அல்லது தேவ வல்லமையா என்பதைப் பற்றிய முக்கியமான விவாதங்கள்

கிறிஸ்தவ உலகத்தில் இருந்திருக்கின்றன. அவர் தெய்வீகமானவரா அல்லது தேவனுடைய மகத்துவத்தின் வெளிப்பாடு மட்டுமா என்றும் விவாதிக்கப்பட்டிருக்கிறது.

வேதத்தில் கூர்ந்து தேடி, படிக்கும்போது பிதா மற்றும் குமாரனைப் போல பரிசுத்த ஆவியானவரும் ஒரு நபர்தான் என்பது தெள்ளத் தெளிவாக விளங்கும். சிருஷ்டிப்பானாலும், மீட்பானாலும், தேவனுடைய கரத்தின் கிரியைகளை காப்பதானாலும் பரிசுத்த ஆவியானவர் பிதாவுடனும் குமாரனுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார்.

ஞானஸ்நான வழிமுறையிலும் பிதா குமாரனோடு பரிசுத்த ஆவியின் நாமத்தையும் காண்கிறோம். ‘‘**ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து...**’’ – மத்தேயு 28:19.

பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் இல்லையென்றால், பிதாவுக்கும் குமாரனுக்கும் சமமானவர் இல்லையென்றால், ஞானஸ்நான உரிமையில் மற்ற இரு தெய்வீக ஜீவன்களுடன் அவருடைய நாமமும் இணைக்கப்பட்டிருப்பதில் அர்த்தம் ஏதும் இல்லையே. விசுவாசி அந்த மூவரின் “நாமத்திலும்” ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று இயேசு கூறினார். மூவரும் தேவன் என்னும் ஒரே நாமத்தைப் பகிர்ந்து கொள்ளுவதால் நாமம் என ஒருமையில் கொடுக்கப்பட்டுள்ளது!

சபையை ஆசீர்வதிப்பதிலும் பரிசுத்த ஆவியானவர் மற்ற இரு தெய்வீக ஜீவன்களுடன் இருப்பதை காண்கிறோம். அப்போஸ்தலர் பின்வருமாறு எழுதினார்: ‘‘**கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவ ரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.**’’ – 2 கொரிந்தியர் 13:14. பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் அல்லாமல் ஓர் வல்லமையாக மட்டும் இருப்பாரென்றால் ஓர் வல்லமையுடன் எப்படி நாம் “ஐக்கியம்” கொள்ள முடியும்? நாம் ஐக்கியம் கொள்ள அவர் ஒரு நபராக இருக்க வேண்டுமே!

பரிசுத்த ஆவியானவரும் தேவனே என்பதை பேதுரு மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார். அவர் அனனியாவிடம் பரிசுத்த ஆவியிடம் பொய் சொல்லுதல் தேவனிடம் பொய் சொல்லுதல் ஆகும் என்று கூறினார். ''**பேதுரு அவனை நோக்கி: ...பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?... நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான்.**'' – அப்போஸ்தலர் 5:3, 4.

பரிசுத்த ஆவியிடம் பொய் சொல்லுதல் தேவனிடத்தில் பொய் சொல்லுகிறதாக வேண்டுமானால் பரிசுத்த ஆவியானவர் தேவனாக இருந்தால் மட்டுமே முடியும்! நாம் ஓர் வல்லமையிடம் பொய் சொல்ல முடியாது, நபரிடம் மட்டுமே பொய் சொல்ல முடியும். இயேசு பின்வருமாறு சொன்னபோது பரிசுத்த ஆவியை தேவனுக்கு சமமாக்கினார்: ''**ஆதலால், நான் உங்களுக்கு சொல்லுகிறேன்: எந்தப்பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக் கப்படுவதில்லை.**'' – மத்தேயு 12:31. தூஷணம் என்பது தேவனைப் பற்றி பரிசுத்த குறைவாகப் பேசும் ஒரு செயல் அல்லது குற்றமாகும். பரிசுத்த ஆவி தேவனாக இல்லையென்றால் பரிசுத்த ஆவிக்கு விரோதமாக எப்படி ஒருவர் தூஷணம் சொல்ல முடியும்?

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது நம்முடைய சரீரம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறது என்று கூறினார். ''**நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியா திருக்கிறீர்களா?**'' – கொரிந்தியர் 3:16. தேவனுடைய ஆலயத்தில் தேவன் இருக்க வேண்டும், இல்லையென்றால் அது தேவனுடைய ஆலயம் எனப்பட முடியாது. மேலே குறிப்பிட்ட வேதப்பகுதியின்படி, தேவனுடைய ஆலயத்தில் வாசம் பண்ணுபவர் யார்? பரிசுத்த ஆவியானவரே! எனவே பரிசுத்த ஆவியானவர் தேவனே என்பது தெளிவாகிறது.

பவுல் அதே நிருபத்தில் பின்பகுதியில் நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயமாக இருக்கிறது என்றும் எழுதினார். ''**உங்கள் சரீரமானது – பரிசுத்த ஆவியினுடைய ஆலயமா யிருக்கிறதென்றும் – அறியீர்களா?**'' – 1 கொரிந்தியர் 6:19. 3 ஆம் அதிகாரத்தில்

அப்போஸ்தலர், நாமே **"தேவனுடைய ஆலயம்"** என்றும், 6 ஆம் அதிகாரத்தில் நாம் **"பரிசுத்த ஆலயம்"** என்றும் கூறுகிறார். எனவே பரிசுத்த ஆவியானவர் தேவனாகத்தான் இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் பவுல் பரிசுத்த ஆவியை "கர்த்தர்" என்கிறார்: ''**கர்த்தரே ஆவியானவர்.**'' – 2 கொரிந்தியர் 3:17. ஒரு வல்லமையையோ சக்தியையோ தேவனாகிய கர்த்தர் என்று ஒருபோதும் சொல்ல முடியாது.

அப்போஸ்தலனாகிய யோவான் பிதாவுடனும் குமாரனுடனும் நமக்கிருக்கும் ஐக்கியத்தைப் பற்றிப் பேசினார். அவர் எழுதியது பின்வருமாறு: ''**எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது.**'' – 1 யோவான் 1:3. மற்றும் அப்போஸ்தலனாகிய பவுல் ஆவியின் ஐக்கியத்தைப் பற்றியும் பின்வருமாறு எழுதினார்:

''**ஆவியின் யாதொரு ஐக்கியமும்.**'' – பிலிப்பியர் 2:1. பரிசுத்த ஆவி ஓர் வல்லமையோ அல்லது சக்தியோ என்றால் எப்படி நாம் அவருடன் ஐக்கியம் கொள்ள முடியும்?

யோவான் 14 ஆம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியை "வேறொரு தேற்றரவாளன்" என்று குறிப்பிடுவதன் மூலம் கர்த்தராகிய இயேசு பரிசுத்த ஆவியை தமக்கு சமமாக்குகிறார். ''**நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்கு தந்தருளுவார்... அந்த சத்திய ஆவியானவரை...**'' – யோவான் 14:16, 17. இயேசு "தேற்றரவாளனாகவும்", பரிசுத்த ஆவி "வேறொரு" தேற்றரவாளனாகவும் இருக்கிறார்கள்.

வேதம் பரிசுத்த ஆவியின் ஏராளமான பண்புகளை வெளிப்படுத்துகிறது, இந்த பண்புகளை ஒரு பொருளுக்கோ அல்லது வல்லமைக்கோ யாரும் கொடுக்க முடியாது. அவர் நிச்சயமாக ஒரு நபராக, தெய்வீக நபராகத்தான் இருக்க வேண்டும். வேதம் தெளிவாக வெளிப்படுத்தும் இந்த பண்புகளை கவனியுங்கள்.

அவர் காரியங்களை அறிந்திருக்கிறார் (1 கொரிந்தியர் 2:1011); அவர் காரியங்களை வெளிப்படுத்துகிறார் (1 கொரிந்தியர் 2:10); அவருக்கு ஒரு சித்தமுண்டு (1 கொரிந்தியர் 12:11); அவருக்கு ஒரு சிந்தையுண்டு (ரோமர் 8:2); அவர் நேசிக்கிறார் (ரோமர் 15:30); அவர் மனுஷரோடு போராடுகிறார் (ஆதியாகமம் 6:3); அவர் மனுஷருக்கு போதித்து அவர்களை நடத்துகிறார் (லூக்கா12:12); அவர் பாவிகளை கடிந்து கொள்ளுகிறார் (யோவான் 16:8); புத்தியுள்ளவர்கள் தாங்கள் பேச கற்றுக் கொள்ளாத பாஷைகளை பேசச் செய்கிறார் (அப்போஸ்தலர் 2:4); குறிப்பான விளங்கக் கூடிய வார்த்தைகளால் ஜனங்களுடன் பேசுகிறார் (அப்போஸ்தலர் 8:29);

ஜனங்கள் குறிப்பிட்ட காரியங்களை செய்யாமல் தடை செய்யும் அவர் அவர்களை தடுத்து நிறுத்துகிறார் (அப்போஸ்தலர் 16:6 7); அவர் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினார் (ரோமர் 8:11); நமக்கு உதவி நமக்காக பரிந்து பேசுகிறார் (ரோமர் 8:26,27); வல்லமையான அடையாளங்களையும் அதிசயங்களையும் செய்கிறார் (ரோமர் 15:19); தேவனுடைய சகல ஆழங்களையும் அறிந்திருக்கிறார் (1 கொரிந்தியர் 2:11); மனுஷருக்கு வரங்களைக் கொடுக்கிறார் (1 கொரிந்தியர் 12:811); நம்மை பரிசுத்தமாக்குகிறார் (1 பேதுரு 1:2). வேதம் வெளிப்படுத்தும் பரிசுத்த ஆவியின் இந்த பண்புகளும் இன்னும் பல பண்புகளும் சந்தேகமேயின்றி பரிசுத்த ஆவி ஒரு நபராகவும், தெய்வீக நபராகவும், தேவத்துவத்தின் அங்கமாகவும் இருக்கிறார் என்பதை நிரூபிக்கின்றன.

13. வேதம் பரிசுத்த ஆவியை "தேவனுடைய வல்லமை" என்று சொல்லவில்லையா? "தேவனுடைய வல்லமை" ஓர் "நபராக" இருக்க முடியுமா?

பரிசுத்த ஆவியை பற்றிய இந்த குழப்பங்கள் எல்லாம் ஜனங்கள் அவர் செய்யும் காரியங்களையும் அவர் யாராக இருக்கிறார் என்பதையும் ஒன்றாக்கி விடுவதால்தான் வருகின்றன. வல்லமை, ஆற்றல், தாக்கம், மற்றும் சக்தி ஆகியவை பரிசுத்த ஆவியானவர் செயல்படுத்துகிறவையும் வெளிப்படுத்துகிறவையுமாகும். அவர் தாம் செய்யும் காரியங்களிலிருந்து எப்போதும் வேறுபடுத்திக் காணப்படுகிறார்.

உதாரணமாக, நீங்கள் சிம்சோனைப் போல பலவானாயிருந்தால், உங்களையும் உங்கள் பெலனையும் குழப்பிக் கொள்ள மாட்டேன். வேதம் சிம்சோனின் பலத்தை குறிப்பாக சொல்லுவதால் சிம்சோன் ஒரு நபரல்ல என்று சொல்ல முடியுமா?

\நீங்கள் எஸ்தரைப் போல அழகானவராக இருந்தால், உங்களையும் உங்கள் அழகையும் ஒருபோதும் குழப்பிக் கொள்ளமாட்டேன். வேதம் எஸ்தரின் அழகை குறிப்பாக சொல்லுவதால் எஸ்தர் ஒரு நபரல்ல என்று சொல்ல முடியுமா?

நீங்கள் சாலமோனைப் போல ஞானமுள்ளவராக இருப்பதால், நீங்கள் ஒரு நபரல்ல, வெறும் புத்தியும் ஞானமும்தான் என்று நான் சொன்னால் முட்டாளாகி விடமாட்டேனா? வேதம் சாலமோனின் ஞானத்தை குறிப்பாகச் சொல்லுவதால் சாலமோன் ஒரு நபரல்ல, ஞானம் மட்டுமே என்று சொல்ல முடியுமா?

ஒரு நபரின் திறமைகள், செயல்கள் அல்லது பண்புகளை அந்த நபருடனே குழப்பிக் கொள்ளுவதில்லை. அதை மக்களுக்கு செய்யாதது போலவே தேவைக்கும் செய்யாதிருக்கிறீர்கள்! பரிசுத்த ஆவியானவர் புறாவாகவும் (மத்தேயு 3:16), அக்கினி நாவுகளாகவும் (அப்போஸ்தலர் 2:3, 4), எண்ணெயாகவும் (1 சாமுவேல் 16:3), மழையாகவும் (யோவேல் 2:23), காற்றாகவும் (யோவான் 3:8) உருவகப்படுத்தப்படுவதால், அவர் ஒரு நபரல்ல என்றாகி விடுமா? இந்த அடையாளங்கள் நாம் அந்த தெய்வீக நபரை மேலும் சிறப்பாக விளங்கிக் கொள்ள தேவன் உபயோகிப்பவையாகும்.

வேதத்தில் கர்த்தராகிய இயேசுவும் பல உருவங்களைக் கொண்டு உருவகப்படுத்தப்படுகிறார். அவர் சிங்கம் (வெளிப் படுத்தின விசேஷம் 5:5) எனவும், ஆட்டுக்குட்டி (யோவான் 1:29) எனவும், ஜீவத்தண்ணீர் (யோவான் 4:10) எனவும், ஜீவஅப்பம் (யோவான் 6:38) எனவும், திராட்சசெடி (யோவான் 15:1) எனவும் அழைக்கப்படுகிறார். இந்த அடையாளங்கள் அனைத்தும் இயேசு யார் என்பதை விவரிக்க உபயோகிக்கப்பட்டிருப்பதால் இயேசு தெய்வீக நபராக இருக்க முடியாது என்ற சந்தேகத்தை உண்டாக்கி விட முடியுமா? நிச்சயமாக இல்லை! தேவனுடைய பண்புகளின் பல்வேறு பரிமாணங்களை நமக்கு பரிச்சயமான

பாஷையில் நாம் விளங்கிக் கொள்ளும்படி செய்யவே தேவன் இந்த அடையாளங்களை உபயோகிக்கிறார்.

இயேசு தம் சீஷரிடம் பின்வருமாறு கூறினார்: ''**பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து...**'' – அப்போஸ்தலர் 1:8. வேதம் பலமுறை வல்லமை என்பதை பரிசுத்த ஆவியுடன் தொடர்புபடுத்துவதால், பரிசுத்த ஆவி தேவனுடைய வல்லமை மட்டுமே, அவர் ஒரு நபரல்ல என்ற முடிவுக்கு வந்து விட முடியாது.

இயேசுவும் வல்லமையுடன் ஒப்பிடப்படவில்லையா? அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியிருப்பதைக் கவனியுங்கள்: ''**கிறிஸ்து தேவ பெலனும் தேவ ஞானமுமாயிருக்கிறார்.**'' – 1 கொரிந்தியர் 1:24. கிறிஸ்து தேவனுடைய "வல்லமை" என்றும், தேவனுடைய "ஞானம்" என்றும் அழைக்கப்படுவதால் கிறிஸ்து ஒரு நபரல்ல என்று முடிவு செய்துவிட முடியுமா? இல்லவே இல்லை! பரிசுத்த ஆவியின் வெளிப்பாடுகளை பரிசுத்த ஆவி என்னும் நபருடன் குழப்பிக் கொள்ளுவது வேதத்தை தவறாக விளக்குவதாகும்.

14. பரிசுத்த ஆவியானவரை குறிப்பிட வேதம் "அது" அல்லது "அதனுடைய" என்னும் பொதுப்பாலை உபயோகிக்கிறது. ஆகவே பரிசுத்த ஆவி ஒரு நபரல்ல என்பதற்கு அது ஒரு சான்றாகிவிடாதா?

பெரும்பாலான இடங்களில் வேதம் பரிசுத்த ஆவியானவர் என்னும் நபரைக் குறிக்க "அவர்" அல்லது "அவருடைய" என்னும் ஆண்பாலையே உபயோகிக்கிறது. ஆனால் சில இடங்களில் வேதம் பொதுப்பாலான "அது" அல்லது "அதனுடைய" என்பவற்றை உபயோகிக்கிறது.

பரிசுத்த ஆவி "அவர்" மற்றும் "அவருடைய" என குறிப்பிடப்படும் ஓர் பகுதியை உதாரணமாக காண்போம். கர்த்தராகிய இயேசு கூறியது பின்வருமாறு: ''**சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர்**

என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.'' – யோவான் 16:13, 14

இந்தப் பத்தியில், ''அவர்'' ''அவருடைய'' என்னும் ஆண்பால் சொற்கள் பரிசுத்த ஆவியைக் குறிக்கும் விதத்தில் ஒன்பது முறை உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. பெரும்பாலான நேரங்களில் இப்படித்தான் குறிப்பிடப்படுகிறார். ஆனால் சில சமயங்களில் வேதம் ''அது'' அல்லது ''அதனுடைய'' என்னும் பொதுப்பாலையும் உபயோகிக்கிறது. உதாரணமாக:

''**தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டா கும் பாடுகளையும், அவைகளுக்கு பின்வரும் மகிமை களையும் முன்னறிவித்தபோது, இன்ன காலத்தைக் குறித்தா ரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்.**'' – 1 பேதுரு 1:11.

''**அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டிய தின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.**'' – ரோமர் 8:26. பேதுரு, ''குறித்தாரென்பதையும்...'' என்றும், பவுல், ''ஆவியான வர்தாமே...'' என்றும் எழுதினார்கள். மேலேயுள்ள இரு வசனங் களிலும் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்க ஆண்பால் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆம், சில சமயங்களில் வேதம் பரிசுத்த ஆவியைக் குறிப்பிட பொதுப்பாலை உபயோகிக்கிறது. ஆனால் பெரும்பாலான சமயங்களில் ஆண்பாலையே உபயோகிக்கிறது.

''ஆவி'' என்னும் சொல் கிரேக்கத்தில் ''சுவாசம்'', ''காற்று'' அல்லது ''தென்றல்'' என்னும் பொருள்படும் நியூமா எனப்படுகிறது. எனவே அது பொதுப்பாலாக இருக்கிறது. ''ஆவி'' என்பதற்கான எபிரேய பதம் பெண்பாலாகிய ரூவா என்பதாகும். சில சமயங்களில் ஆண்பாலும் உபயோகிக்கப்படுகிறது. கிரேக்கம் மற்றும் எபிரேயத்தின் பால்வகைகளுக்கு மெய்யாகவே பால்களின் அடையாளத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை. தேவன் ஆண்பாலும் அல்ல, பெண்பாலும் அல்ல, பொதுப்பாலும் அல்ல என்பதை அறிந்து கொள்ள வேண்டும். தேவன் இந்த எல்லா விபரங்களுக்கும் மேற்பட்டவர். ஆனால்

வேதம் பல்வேறு அடையாளங்களை உபயோகிக்கிறது, ஏனெனில் தேவன் மனிதருடன் தொடர்பு கொள்ளுகிறார், மற்றும் நாம் அவரையும் அவருடைய கிரியைகளையும் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமென்றும் விரும்புகிறார்.

ஸ்பானியம், இத்தாலியம், பிரெஞ்சு போன்ற உலக பாஷைகளைப் போலவே கிரேக்கமும் ஒவ்வொரு பெயர்ச்சொல்லுக்கும் ஒரு குறிப்பிட்ட பாலை உபயோகிக்கிறது. அப்படி உபயோகிக்கும் பால் பெரும்பாலும் அந்த விஷயம் ஆண்பாலா அல்லது பெண்பாலா என்பதுடன் தொடர்பில்லாமல் இருக்கும். உதாரணமாக, ஜெர்மானிய பாஷையில் பணிப்பெண் அல்லது சிறு பெண்ணைக் குறிக்க மாட்ச்சன் என்ற பதம் உபயோகிக்கப்படுகிறது. ஆனால் அவள் என்பதை "அது" என்ற பொதுப்பாலால்தான் குறிப்பிடுகிறார்கள். இத்தகைய உதாரணங்களை உலகத்தின் பல்வேறு பாஷைகளில் காணலாம்.

யோவான் 4 ஆம் அதிகாரத்தில், இயேசு சமாரியப் பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்தபோது, பிதாவைத் தொழுது கொள்ளுவதைப் பற்றிக் குறிப்பிட்டார். இங்கு பிதாவைக் குறிக்க பொதுப்பால் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இயேசு பின்வருமாறு கூறினார்: ''**நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்...**'' – யோவான் 4:22

இயேசு, நாங்கள் "**அறிந்திருக்கிறதை**" தொழுது கொள்ளுகிறோம் என்று கூறினார். "**அறிந்திருக்கிறதை**" என்பது பிதாவைக் குறிக்கிறது. ஏனெனில் அடுத்த வசனத்தில் அவர், "**பிதாவைத் தொழுது கொள்ளும்...**" (யோவான் 4:23) என்று அதைத் தெளிவாக்குகிறார்.

"**அறிந்திருக்கிறதை (அதை)**" என்பது கிரேக்கத்தில் பொதுப் பாலான ஹோஸ் எனப்படுகிறது. இதன் அடிப்படையில் பிதா பொதுப்பாலினால் குறிப்பிடப்படுவதால் அவர் ஒரு நபரல்ல என்று யாராவது மறுப்புத் தெரிவிக்க முடியுமா? நிச்சயமாக இல்லை! அதே விதமாக, பரிசுத்த ஆவி சில சமயங்களில் பொதுப்பாலால் குறிப்பிடப்படுவதால் பரிசுத்த ஆவியானவர் ஒரு பொருள்தான் என்றும், ஒரு நபரல்ல என்றும் கூறுவதற்கில்லை. கேள்வி 12இல் பரிசுத்த ஆவியின் அனைத்து பண்புகளும் அவர்

தேவன் தாம் என்பதை தெளிவாக எடுத்துக் காண்பிப்பதாகவும் பார்த்திருக்கிறோம்.

15. வெளிப்படுத்தின விசேஷத்தில் ''தேவனுடைய ஏழு ஆவிகள்'' என்பதன் பொருள் என்ன?

ஏழு என்கிற எண் வெளிப்படுத்தின விசேஷத்தில் பலமுறை குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏழு என்ற எண் உருவக மொழியில் இயேசுவையும் குறிக்கிறது. ''**அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத் திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர் களுக்கும் மத்தியிலே நிற்கக்கண்டேன்; அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது; அந்த கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம்.**'' – வெளிப்படுத்தின விசேஷம் 5:6.

ஆட்டுக்குட்டியானவருக்கு மெய்யாகவே ஏழு கண்களும் ஏழு கொம்புகளும் இல்லை. கண்களும் கொம்புகளும் அடையாளமாக இருப்பதை போலவே ஏழு என்ற எண்ணும் அடையாளமாக இருக்கிறது. வேதத்தில் ஏழு என்ற எண் முழுமை அல்லது பரிபூரணத்தைக் குறிக்கிறது. “**ஏழு ஆவிகள்**” என்பது பரிசுத்த ஆவியின் முழுமையான அல்லது பூரணமான பிரசன்னத்தைக் குறிக்கிறது.

“**தேவனுடைய ஏழு ஆவிகள்**” என்பது வெளிப்படுத்தின விசேஷத்தில் நான்கு முறை குறிப்பிடப்பட்டுள்ளது. “**அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற ஏழு ஆவிகள்**” என்று வெளிப்படுத்தல் 1:4 குறிப்பிடுகிறது. இயேசு “**தேவனுடைய ஏழு ஆவிகளையுடையவர்**” என்று வெளிப்படுத்தல் 3:1 குறிப்பிடுகிறது. “**தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்துகொண்டிருந்தன**” என்று வெளிப்படுத்தல் 4:5 கூறுகிறது. “**அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி ... அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது; அந்த கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம்**” என்று குறிப்பிடுகிறது. – வெளிப்படுத்தல் 5:6.

வேதத்தின் இந்த நான்கு வசனங்களிலிருந்து தேவனுடைய பரிசுத்த ஆவியைப் பற்றிய சில காரியங்களை கற்றுக் கொள்ளுகிறோம். ஏழு ஆவிகளும் **“சிங்காசனத்திற்கு முன்பாக இருப்பதால்”** சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பிதாவாகிய தேவனுடைய பிரசன்னத்திற்கு ஆவியானவர் முழுமையாகச் செல்ல முடியும் என்று விளங்குகிறது. இது தேவனுடைய சிங்காசனத்துடனுள்ள தொடர்பில் பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகளையும் அவருடைய கிரியைகளையும் பற்றி பேசுகிறது. இயேசு **“ஏழு ஆவிகளை உடையவராயிருக்கிறார்”** என்றும் இது கூறுகிறது, அதனால் பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் கிரியையுடன் எவ்வளவு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறார் என்று அறிந்து கொள்ளலாம். ஆம், பரிசுத்த ஆவியானவர் பிதா மற்றும் குமாரனின் பிரசன்னத்தில் இருப்பவராக சித்தரிக்கப்படுகிறார். அதனால்தான் அவர் “தேவனுடைய ஆவி” (ரோமர் 8:9) என்றும், **“கிறிஸ்துவின் ஆவி”** (ரோமர் 8:9) என்றும் அழைக்கப்படுகிறார். அவர் பிதா மற்றும் குமாரனின் சேவையை செய்கிறார். அதனால்தான் இயேசு பரிசுத்த ஆவியானவர் பிதா மற்றும் குமாரனிடமிருந்து வருகிறார் என்று கூறினார்.

‘‘**என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவி யாகிய தேற்றரவாளனே...**’’ – யோவான் 14:26. ‘‘**அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.**’’ – யோவான் 16:7. இயேசு இந்த உலகத்துக்கு மனுஷனாக வந்தபோது பரிசுத்த ஆவியின் முழுமையினால் நிரம்பியவராக இருந்தார். தேவனின் ஏழு ஆவிகளும் அவர் மீது இருந்தன என்று சொல்லலாம் அதாவது, பரிசுத்த ஆவியானவருடைய கிரியையின் முழுமையும் பூரணமும் அவருடைய வாழ்க்கையில் காணப்பட்டன. அதனால்தான் ஏசாயா புத்தகத்தில் இயேசு கிறிஸ்து ஒரு கிளையாகவும், ஈசாயின் அடிமரத்திலிருந்து வரும் துளிராகவும் சித்தரிக்கப்பட்டு ஆவியின் ஏழு வெளிப்படுத்தல்களை கொண்டவராக இருக்கிறார். ஏசாயா இதைக் குறித்து பின்வருமாறு எழுதுகிறார்:

‘‘**ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பி செழிக்கும். ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும்**

அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர் மேல் தங்கியிருப்பார். கர்த்தருக்கு பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்; அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச்செய்யாமலும்...'' – ஏசாயா 11:13

ஆகவே, இயேசுவின் வாழ்வில் இருந்த தேவனுடைய ஏழு ஆவிகள் இவையே: (1) கர்த்தருடைய ஆவி, (2) ஞானத்தின் ஆவி, (3) உணர்வின் ஆவி, (4) ஆலோசனையின் ஆவி, (5) வல்லமையின் ஆவி, (6) அறிவின் ஆவி, (7) கர்த்தருக்கு பயப்படும் பயத்தின் ஆவி. ''ஏழு ஆவிகளும்'' இரட்சிப்பின் திட்டத்தில் பரிசுத்த ஆவி செய்யும் கிரியையில் அவருடைய எங்கும் வியாபித்திருக்கும் நிலை, பரிபூரணம், மற்றும் முழுமையின் அடையாளமாக இருக்கின்றன.

16. மன்னிக்க முடியாத, பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம் மற்றும் தூஷணம் எவை?

பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான தூஷணத்தைப் பற்றி கர்த்தராகிய இயேசு கூறியதை வாசிப்போம்: ''**ஆதலால், நான் உங்களுக்கு சொல்லுகிறேன்: எந்தப்பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை...**'' – மத்தேயு 12:31, 32.

முதலில் நாம் கவனிக்க வேண்டியதெல்லாம் "**எந்தப்பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்**" என்று இயேசு சொன்னதைத்தான். யோவானும் பின்வருமாறு எழுதியபோது இதையே வலியுறுத்தினார்: ''**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.**'' – 1 யோவான் 1:9. ஆம், "**எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும்**" மற்றும் "**எந்த அநீதியும்**" மன்னிக்கப்படும்.

தூஷணம் என்பது பரிசுத்தக் குறைச்சலான செயல் அல்லது பேச்சு மூலம் தேவனுக்கு விரோதமாக செய்யப்படும் பாவம் ஆகும். ஆகவே தேவனுக்கு விரோதமான எந்தவித பாவமும் மன்னிக் கப்படும். பவுல் கிறிஸ்தவர் ஆவதற்கு முன்பாக தூஷிக்கிறவராக இருந்தார். அவர் கூறியது பின்வருமாறு:

‘‘முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்; அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படி செய்தபடியினால் இரக்கம் பெற்றேன்.’’ – 1 தீமோத்தேயு 1:13.

இயேசு சொன்ன சூழலில் பரிசுத்த ஆவிக்கு விரோதமான தூஷணப் பேச்சைப் பற்றியது. ஏனெனில் அவர், “**எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை**” என்று கூறியிருக்கிறார்.

இந்தப் புனிதமான கூற்றை இயேசு ஏன் சொன்னார்? அசுத்த ஆவி பிடித்திருந்ததால் குருடனும் ஊமையனுமாயிருந்த ஒருவனை இயேசு அப்போதுதான் அற்புதமாக குணமாக்கியிருந்தார். அங்கிருந்த சாதாரண மக்கள் வியப்படைந்து, தேவனைத் துதித்து, இயேசுவை மேசியா என்று ஏற்றுக் கொண்டு, அவரை “**தாவீதின் குமாரன்**” என்று அழைத்தார்கள். ஆனால் பரிசேயரோ அதை கடுமையாக விமர்சனம் செய்தார்கள். இந்த சூழலை மத்தேயு பின்வருமாறு பதிவிடுகிறார்:

‘‘அப்பொழுது, பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டுவரப்பட்டான்; குருடும் ஊமையுமானவன் பேசவுங் காணவுந்தக்கதாக அவனை சொஸ்தமாக்கினார். ஜனங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு: தாவீதின் குமாரன் இவர் தானோ? என்றார்கள். பரிசேயர் அதைக்கேட்டு: இவன் பிசாசு களின் தலைவனாகிய பெயல்செபூலினாலே பிசாசுகளை துரத்து கிறானேயல்லாமல் மற்றப்படியல்ல என்றார்கள்.’’ – மத்தேயு 12:22 24.

அவர்கள் இயேசுவை பிசாசு பிடித்தவர் என்றும், பிசாசின் வல்லமையாலேயே அவர் அற்புதங்களை செய்வதாகவும் குற்றப் படுத்தினார்கள். அவர்கள் அறியாத மனுஷரல்ல. இயேசுவின்

ஞானஸ்நானத்தின்போது பிதாவானவர் அவரை தேவகுமாரன் என்று அறிவித்ததையும், பரிசுத்த ஆவியானவர் அவர் மீது புறா வடிவில் இறங்கினதை ஜனங்கள் கண்டதையும் (மத்தேயு 3:16, 17) அவர்கள் நன்றாக அறிந்திருந்தார்கள். இயேசுவே தேவ ஆட்டுக்குட்டி என்று யோவான் ஸ்நானனும் முழு தேசத்திற்கும் அறிவித்திருந்தார் (யோவான் 1:29). அவர் குஷ்டரோகிகளை சொஸ்தமாக்குவதையும், சகல விதமான நோய்களையும் குணமாக்கு வதையும், மரித்தோரை உயிரோடு எழுப்பியதையும் கூட அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதுவே அவர் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்ட மேசியா என்பதற்கான தெளிவான சான்றாக இருந்தது. நல்ல வெளிச்சமான பகல் நேரத்தில் அவர்கள் இந்த துடுக்கான வார்த்தைகளை சொன்னார்கள்!

பவுல் தூஷித்தபோது, “**அறியாமல் அவிசுவாசத்தில் செய்தேன்**” (1 தீமோத்தேயு 1:13) என்றார். ஆனால் இவர்களோ அறியாதவர்கள் அல்ல. வேண்டுமென்றே தெய்வீக வெளிச்சத்திற்கும் வார்த்தைக்கும் கண்களையும் செவிகளையும் அடைத்துக் கொண்டார்கள். அது மட்டுமல்ல, மற்றவர்களையும் வஞ்சிக்க துணிந்து, மெய்யான மேசியாவாகிய இயேசுவை பிசாசின் தூதுவனாக அறிவித்தார்கள். இது நிச்சயமாக பாவத்தின் உச்சம்! இயேசுவின் வாழ்வில் அவர் கருவுருவானதிலிருந்து, அவருடைய ஊழியம் முழுவதிலும் கிரியை செய்து கொண்டிருந்த பரிசுத்த ஆவியானவர் இங்கு தெளிவான சான்றுடன் அவமதிக்கப்பட்டு, துக்கப்படுத்தப்பட்டார்.

இப்படிப்பட்ட கூட்டத்தாரைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் பின்வருமாறு எழுதினார்: ‘‘**ஏனெனில், ஒருதரம் பிரகாசிப் பிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தை யையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப் போனவர்கள், தேவ னுடைய குமாரனை தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புகிறதற்கேதுவாய் அவர் களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்.**’’ – எபிரேயர் 6:46.

அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துவது ஆபத்தானது என எச்சரிக்கிறார்: ‘‘**அன்றியும், நீங்கள் மீட்கப்படும்**

நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.'' – எபேசியர் 4:30

\இந்த விஷயத்தில் பரிசுத்த ஆவிக்கு விரோதமாக துக்கப் படுத்துதல் அல்லது பாவம் செய்தல் குறிப்பாக பாவமாகாது. அது மீண்டும் மீண்டும் பரிசுத்த ஆவியின் உணர்த்துதலையும் சத்தத்தையும் புறக்கணிப்பதாகும். ஒரு நபர் ஒவ்வொரு முறையும் பாவம் செய்யும்போது அல்லது இருதயம் கடினப்படும்போது பரிசுத்த ஆவியானவர் துக்கப்படுகிறார். ''**ஆகையால், பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்திலே கோபமூட்டினபோதும், சோதனை நாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயங்களை கடினப்படுத் தாதிருங்கள்.**'' – எபிரேயர் 3:7, 8.

''**அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப் படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனை களினாலே வீணரானார்கள், உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.**'' – ரோமர் 1:2124

ஆம், மேற்கொள்ளப்படாத எந்த பாவமும் இறுதியில் நம்மை மேற்கொண்டு விடும். பரிசுத்த ஆவியானவர் பாவிகளுக்கு அவர்களுடைய பாவத்தை குறித்து உணர்த்துகிறார். இறுதியில் அவர் துக்கப்பட்டு, அந்த நபருடைய இருதயம் பாவத்தினால் முற்றிலும் கடினப்பட்டு போகும் போது, தேவன் கைவிட்டு விடுகிறார் (ரோமர் 1:24). அந்நபரின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்வதை நிறுத்தி விட்டதால், மன்னிக்கப்பட முடியாத பாவம் செய்தவனாகி விடுகிறான்.

சில சமயங்களில் சிலர் தாங்கள் ஏற்கனவே செய்த மன்னிக்கப்பட முடியாத பாவங்களால் மனசாட்சி குத்தப்பட்டு

கஷ்டப்படுகிறார்கள். தங்களுக்கு அது சிரமமாக இருக்கிறது என்று உணருவதே பரிசுத்த ஆவியானவர் அவர்களை இன்னும் கைவிட்டு விடவில்லை என்பதற்கு அடையாளமாக இருக்கிறது. ஏனெனில் தேவன் கைவிட்ட ஒருவருடைய மனசாட்சி செத்ததாக இருக்கும்!

17. ஏறக்குறைய எல்லா நிருபங்களின் துவக்கத்தில் உள்ள அப்போஸ்தல வாழ்த்துதல்களிலும் பிதா மற்றும் குமாரனிட மிருந்து வாழ்த்துதல் கொடுக்கப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவி யானவரின் பெயர் அங்கு காணப்படாதது ஏன்?

நிருபங்களின் துவக்கத்தில் வரும் சில அப்போஸ்தல வாழ்த்து தல்களை பார்ப்போம்: ''**பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.**'' – கலாத்தியர் 1:3. ''**தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது.**'' – 2 பேதுரு 1:2. ''**பிதாவாகிய தேவனாலும் பிதாவின் குமாரனாயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும், சத்தியத்தோடும் அன்போடுங்கூட உங்களோடி ருப்பதாக.**'' – 2 யோவான் 1:3

ஆம், பெரும்பாலான அப்போஸ்தல வாழ்த்துதல்கள் பிதா மற்றும் குமாரனின் பெயர்களை மட்டும் கொண்டுள்ளன. பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராகவும் திருத்துவத்தில் ஓர் அங்கமாகவும் இருக்கிறார் என்றால் ஏன் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து எந்தவொரு வாழ்த்துதலும் இல்லை? இந்த வாழ்த்துதல் மீண்டும் மீண்டும் வருவதால் அநேகர் குழப்பமடைகிறார்கள்.

வேதத்தின் மெய்யான ஆசிரியர் தேவத்துவத்தின் மூன்றாம் நபராகிய பரிசுத்த ஆவியானவரே என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவரே தீர்க்கதரிசிகளையும் அப்போஸ்தலரையும் ஏவி, தூண்டுதல் கொடுத்து, செயல்படச் செய்து இந்த புத்தகத்தை எழுதச் செய்தார். இதைக் குறித்து பேதுரு பின்வருமாறு எழுதினார்: ''**தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்**

தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்.'' – 2 பேதுரு 1:21. பவுலும் இதையே எழுதியிருக்கிறார்:

''**இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது போல...**'' – எபேசியர் 3:5.

ஆகவே வேதத்தின் வெளிப்பாடும், அதிலுள்ள சத்தியங்களும் பரிசுத்த ஆவியானவர் தேவனைப் பற்றி வெளிப்படுத்தியவை ஆகும். எனவே பரிசுத்த ஆவியானவர் தாம் சபைகளுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார், பவுலோ பேதுருவோ அல்லது யோவானோ அல்ல. அவர்கள் அவருடைய எழுத்தாளர்களாகவும், வாயாகவும் மட்டுமே செயல்பட்டனர்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசு 7 சபைகளுக்கு ஒரு செய்தியை சொல்லுவதை பார்க்கிறோம். சபைகளுக்கு இந்த செய்தியை கொண்டு செல்லுபவர் யார்? 7 சபைகளிலும் இதே மாதிரிதான் காணப்படுகிறது: ''**ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது என்றார்.**'' – வெளிப்படுத்தின விசேஷம் 3:22

ஆகவே, பரிசுத்த ஆவியானவர் தாமே சபைகளுக்கு பேசி, தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலரும் பிதாவிடமும் குமாரனிடமும் இருந்து வந்த செய்தியை எழுதி வைக்கும்படி செய்தார். எனவே, பரிசுத்த ஆவியானவர்தாம் இவ்வாறு சொல்லியிருக்கிறார்: ''**பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.**'' – கலாத்தியர் 1:3. அவரே செய்தியை கொண்டு செல்பவராக இருந்ததால் பிதாவிடமும் குமாரனிடமும் இருந்து வாழ்த்துதலை தெரிவிக்கிறார்.

அநேக சமயங்களில் தீர்க்கதரிசிகள் தங்கள் தரிசனத்தில் பிதாவையும் குமாரனையும் கண்டார்கள்; அப்போதெல்லாம் பரிசுத்த ஆவியானவர் எங்கு இருந்தார் என்று யோசிக்கிறோம்? ஒருசமயம் தாவீது ராஜா பிதாவையும் குமாரனையும் சிங்காசனத்தில் வீற்றிருக் கிறவர்களாக கண்டார். அப்போது பின்வருமாறு எழுதினார்: கர்த்தர்

என் ஆண்டவரை நோக்கி: ''**...நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்றார்.**'' – சங்கீதம் 110:1.

இங்கும் பிதாவையும் குமாரனையும் மட்டும் பார்க்கிறோம், பரிசுத்த ஆவியானவர் எங்கே? பரிசுத்த ஆவியானவரே பிதாவையும் குமாரனையும் தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்துகிறவராக இருந்தார்! இயேசு சொல்லுவதை கவனியுங்கள்: ''**நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று தாவீது பரிசுத்த ஆவியினாலே சொல்லியிருக்கிறானே.**'' – மாற்கு 12:36

பரிசுத்த ஆவியின் கிரியை திரைக்கு பின்னால் செய்யப்படுவது. நாம் பிதா மற்றும் குமாரனை பார்க்கவும், அவர்கள் மீது நம் கவனத்தை செலுத்தவும் அவர் உதவுகிறார். அவருடைய உதவியின்றி பிதாவையும் குமாரனையும் குறித்து நாம் எதையும் விளங்கிக் கொள்ள முடியாது. வேதம் கூறும் தேவனின் ஓர் அங்கமாக பரிசுத்த ஆவியானவர் மெய்யாக இல்லை என்று யாரும் நினைக்காதபடிக்கு வேதத்தின் கடைசி புத்தகத்தில் அவர் ஒன்றை நமக்கு வலுவாக நினைவுறுத்துகிறார். இங்கு தெய்வீக வணக்கமும் வாழ்த்துதலும் அவர்கள் மூவரிடமிருந்தும் வருகிறது!

''**இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமானவராலும், அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற ஏழு ஆவிகளாலும், உண்மையுள்ள சாட்சியும், ... இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.**'' – வெளிப்படுத்தின விசேஷம் 1:4, 5.

18. எல்லாவற்றிற்கும் ஓர் துவக்கம் இருக்க வேண்டும் என்பதால், தேவனை சிருஷ்டித்தவர் யார்?

தேவன் ஒருவரால் சிருஷ்டிக்கப்பட்டிருப்பாரென்றால் அந்த நபர் தேவனாகத்தான் இருக்க வேண்டும்! அப்போது தேவனை சிருஷ்டித்த அந்த ஜீவனை சிருஷ்டித்தவர் யார் என்று கேட்கத் தோன்றும். இது தொடர்ச்சியாக அப்படியே போய்க்கொண்டிருக்கிறது!

இதற்கான பதில் – யாரும் தேவனை சிருஷ்டிக்கவில்லை. அவர் நித்திய ஜீவனாயும், தம்மில் தாமே பிழைத்திருக்கிறவராயும்,

அழியாமையுள்ள ஜீவனாயும் இருக்கிறார். அவர் தம்மில் தாமே ஜீவனுள்ளவர். ''**பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறதுபோல...**'' – யோவான் 5:26. அவர் அதை யாரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளவில்லை. அவரே ஜீவனாக இருப்பதால் அது எப்போதும் அவருடையதாகவே இருந் திருக்கிறது!

இயேசு தம் ஜீவனைப் பற்றி குறிப்பிடுகையில் இவ்வாறு அறிவித்தார்: ''**நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்.**'' – யோவான் 14:6. ''**ஜீவனுடைய ஆவியின்...**'' – ரோமர் 8:2. பின்வரும் வார்த்தைகளில் சங்கீதக்காரன் தேவனுடைய நித்திய வாசத்தை அறிவிக்கிறார்:

''**நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்.**'' – சங்கீதம் 90:2. தேவன் கடந்து போன நித்தியத்திலிருந்து வருங்கால நித்தியம் வரை தேவனாகவே இருந்து வருகிறார்.

நாத்திகர்கள் மற்றும் சந்தேகப்படுகிறவர்கள் மத்தியில் பொதுவாக காணப்படும் ஓர் விவாதம் எல்லாவற்றிற்கும் ஓர் ஆதிமூலம் இருக்க வேண்டும், ஓர் துவக்கம் இருக்க வேண்டும் என்பதே. ஆகவே, தேவனுக்கும் ஒரு ஆதிமூலம் இருக்க வேண்டும்; தேவனுக்கும் ஓர் துவக்கம் இருக்க வேண்டும் என்பதே அவர்கள் முடிவாகச் சொல்லுவது. அதற்கு மாறான முடிவு, ''**தேவனுக்கு ஒரு துவக்கம் இருக்குமானால் அவர் தேவனே அல்ல என்பதாக இருக்கும்!**''

தேவன் எங்கிருந்தோ வந்தார் என்றும் அந்த இடம் எது என்றும் கேள்வியெழுப்பும் உண்மையற்ற ஒரு யூகத்தைக் கொண்டிருப்பதால் இந்த கேள்வியே தவறானது. முதலாவது இந்த கேள்வியே பிழையுள்ளதாக இருக்கிறது. அது "சுவைத்துப் பார்த்தால் வானம் எப்படி இருக்கும்?" என்று கேட்பதை போன்றது. ருசியுள்ள காரியங்களின் வகையில் வானம் இல்லாததால் இக்கேள்வி தவறானது. அதே போல, தேவனும் சிருஷ்டிக்கப்படக் கூடிய பொருட்களின் வகையில் அடங்குவதில்லை. தேவன் தம்மில் தாமே ஜீவன் கொண்டிருக்கும் சிருஷ்டிக்கபடாத ஜீவனாக இருக்கிறார்! இதுவே தேவனைப் பற்றிய சத்தியம். அவர் தனித்தன்மையுள்ளவர், அவரைப் போல வேறு யாரும் இல்லை. தேவனை புரிந்து கொள்ளுவதற்கான ஒரே வழி தாம் யாராக இருக்கிறார் என்று அவரே விளக்கும்படி விட்டுக் கொடுப்பதாகும். அவர் சொல்வதை கவனியுங்கள்:

‘‘**இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஓமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார்.**’’ – வெளிப் படுத்தல் 1:8.

தேவனே அல்பாவும் ஒமேகாவுமாக இருக்கிறார். அவர் காலத்தின் இரு முனைகளையும் நிரப்புகிறார். மற்ற அனைத்துமே தேவனுடைய சட்டக அமைப்பிற்குள் இருக்கின்றன. ஆனால் அவரோ எல்லா சட்டக அமைப்பிற்கும், கால அமைப்பிற்கும் அப்பாற்பட்டவர். எந்தவொரு வரம்பிற்கும் மேற்பட்டவர், எந்தவொரு காலக்கட்டத்திற்கும் மேற்பட்டவர், நாம் கிரகிக்கக்கூடிய எதற்கும் மேலானவரும், அதற்கும் அப்பாற்பட்டவராகவும் இருக்கிறார்.

எபிரேயத்தில் தேவனுக்கு கொடுக்கப்பட்ட நாமங்களில் ஒன்று யேகோவா என்பதாகும். ஏசாயா பின்வருமாறு எழுதினர்: ‘‘**கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்; கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்.**’’ – ஏசாயா 26:4.

யேகோவா என்பதற்கு தாமாகவே பிழைத்திருக்கும், நித்திய மானவர் என்பது பொருள். அதுவே தேவனைப் பற்றிய சத்தியமாக இருக்கிறது அவர் தம்மில் தாமே பிழைத்திருக்கிறார், அவர் நித்தியமானவர், அவர் அழியாமையுள்ளவர். அவரிடமிருந்துதான் அனைத்தும் உருவாயின. அவர் தம் வார்த்தையால் சகலத்தையும் உண்டாக்கினார் என்று வேதம் வெளிப்படுத்துகிறது. ஆனால் அவரோ சிருஷ்டிப்பு என்னும் கருத்திற்கு மேற்பட்டவரும் முந்தினவருமாக இருக்கிறார்!

19. சிருஷ்டிக்கப்படாத மூன்று நபர்கள் எவ்வாறு நித்தியத் திலிருந்து ஒன்றாக பிழைத்திருக்க முடியும்?

கேள்வி எண் 18இல் தேவனுடைய ஆதிமூலம் பற்றி பார்த்தோம். கிறிஸ்தவர்களை போல ஒரே தேவன் கொள்கையை விசுவாசிக்கும் ஒரு சில மதங்கள் உலகத்தில் உண்டு. ஆனால் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் விசுவாசிப்பது போல் அவை தேவன் மூன்று நபர்களாக இருக்கிறார் என்று விசுவாசிப்பதில்லை. ஒரு தேவன் ஒரே நபராக இருக்கிறார் என்று மட்டும் விசுவாசிக்கிறார்கள்.

இஸ்லாமியர்களும், யூதர்களும், யேகோவா சாட்சியினரும், மற்றும் சிலரும் தேவனை பற்றிய இந்த விளக்கத்தை விசுவாசிக்கிறார்கள்.

ஒருநாள் நான், ஒரு தேவன் ஒரே நபராக இருக்கிறார் என்னும் கொள்கையாகிய ஒரே தேவன் கொள்கையை விசுவாசிக்கும் மேதை ஒருவருடன் நட்புறவின் அடிப்படையில் நல்ல விதத்தில் பேசிக்கொண்டிருந்தேன். அவர் என்னிடம் தேவத்துவத்தின் மூன்று நபர்களும் எங்கிருந்து வந்தார்கள் என்று விளக்குமாறு மரியாதையுடன் கேட்டார். அதற்கு நான் மற்றுமொரு கேள்வியை பதிலாகக் கொடுத்தேன். ‘‘நீங்கள் தேவனை விசுவாசிக்கிறீர்களா?’’ என்ற போது, அவர், ஆம், நான் விசுவாசிக்கிறேன், ஆனால் மூன்று தேவர்களை அல்ல, ஒரே தேவனை விசுவாசிக்கிறேன்’’ என்றார்.

மீண்டும் நான் அவரிடம், ‘‘தேவன் என அழைக்கப்படும் அந்த ஒரு நபர் எங்கிருந்து வந்தார் என்று விளக்க முடியுமா?’’ என்று கேட்டபோது உடனடியாக அவர், ‘‘தேவன் எப்போதுமே இருக்கிறார்; யாரும் அவரை சிருஷ்டிக்கவில்லை’’ என்று பதிலளித்தார். அதற்கு நான், ‘‘இது விளக்கமல்ல, விசுவாசக் கூற்று. மனித அறிவு பூர்வத்தின்படி எல்லாவற்றிற்கும் ஒரு துவக்கம் இருக்க வேண்டும். எனவே அந்த ஒரு நபர் எங்கிருந்து வந்தார் என்று தயவு செய்து விளக்க முடியுமா?’’ என்று கேட்டேன். சற்று யோசித்துவிட்டு, ‘‘தேவனுடைய துவக்கத்தைப் பற்றி எந்தவொரு விளக்கத்தையும் என்னால் கொடுக்க முடியாது, ஆனால் அவர் எப்போதுமே இருக்கிறவர் என்று மட்டும் நிச்சயமாக சொல்ல முடியும். அவருக்கு துவக்கமும் இல்லை, முடிவும் இல்லை’’ என்று கூறினார். அதற்கு நான், ‘‘அந்த ஒரு நபர் எங்கிருந்து வந்தார் என்று உங்களால் விளக்க முடியவில்லை என்றால் பின்னர் ஏன் என்னிடம் மூன்று நபர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்று கேட்கிறீர்கள். உங்களுடைய காரியந்தான் எளிமையானதாக இருக்க வேண்டும்! நீங்கள் சொன்னது போலவே நானும் சொல்லுகிறேன் தேவத்துவத்தின் மூன்று நபர்களும் ஆதியிலிருந்தே ஒன்றாக ஒரே சமயத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு துவக்கமும் இல்லை, முடிவும் இல்லை’’ என்றேன். தன் முகத்தில் பெரிய புன்னகையுடன் அவர் ‘‘எனக்கு புரிந்துவிட்டது. திரித்துவத்தைப் பற்றி இனி எதுவும் கேட்க மாட்டேன்’’ என்று கூறிச் சென்றார்.

தேவன் பிழைத்திருக்கிறதை குறித்து வேதம் கூறுவது என்ன? அது பின்வருமாறு அறிவிக்கிறது: ''**நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்.**'' – சங்கீதம் 90:2. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூன்று நபர்களும் நித்தியத்திலிருந்து இருக்கிறார்கள். இதைப் பற்றி ஏசாயா பின்வருமாறு எழுதினார்: ''**நித்திய பிதா...**'' – ஏசாயா 9:6. தேவகுமாரனைப் பற்றி பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசியான மீகா எழுதியது: ''**அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது.**'' – மீகா 5:2.

பரிசுத்த ஆவியானவரும் நித்தியமானவர் என்பதில் வேதம் தெளிவாக இருக்கிறது. ''**நித்திய ஆவியினாலே...**'' – எபிரேயர் 9:14. யாரேனும் ஒரு நபர் அநாதியாய் பிழைத்திருக்கிறார் என்று ஏற்றுக் கொள்ளக் கூடுமாயின், அதே புரிந்துணர்வுடன் நாமும் மூன்று நபர்கள் அநாதியாய் ஒன்றுசேர்ந்து பிழைத்திருக்கிறார்கள் என்று ஏற்றுக் கொள்ளுகிறோம், ஏனெனில் வேதம் அவ்வாறு சொல்லுகிறது!

20. தேவனுக்கு சரீரமும், வடிவமும், அமைப்பும் உண்டா?

நூற்றாண்டுகளாக கிறிஸ்தவ மேதைகள் இந்த காரியத்தை குறித்து விவாதித்து வந்திருக்கிறார்கள். பல வியாக்கியானங்களையும் உண்டாக்கியிருக்கிறார்கள். அது இரட்சிப்பை பற்றிய காரியமாக இல்லாதபடியினால் அதைக் குறித்து நாம் பிடிவாதமாக இருக்கத் தேவையில்லை. இதைப் பற்றி வேதம் கூறுவதன் முழு சாராம்சத்தை மட்டும் பகுத்தறிய வேண்டியதாயிருக்கிறது. இயேசு பின்வருமாறு கூறினார்: ''**தேவன் ஆவியாயிருக்கிறார்.**'' – யோவான் 4:24.

ஆகவே தேவன் ஆவியாயிருக்கிற ஜீவன். தேவதூதர்களும் ஆவியாயிருக்கிற ஜீவன்கள் தான் என்று வேதம் கூறுகிறது. சங்கீதக்காரன் எழுதியிருப்பதை கவனியுங்கள்:

''**தம்முடைய தூதர்களை காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார்.**'' – சங்கீதம் 104:4

''**உடன்படிக்கை பெட்டியின் இருபுறமும் இரு கேரூபீன்களை (தேவதூதர்களை) செதுக்குமாறு தேவன் மோசேயிடம் சொல்லி**

யிருந்தார். ஒரு புறத்து ஓரத்தில் ஒரு கேருபீனையும் மறுபுறத்து ஓரத்தில் மற்ற கேருபீனையும் பண்ணிவை; அந்த கேருபீன்கள் கிருபா சனத்தின் இரண்டு ஓரங்களிலும் அதனோடே ஏகவேலையா யிருக்கும்படி, அவைகளை பண்ணக்கடவாய். அந்த கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரித்து, தங்கள் செட்டைகளால் கிருபாசனத்தை மூடுகிறவைகளும் ஒன்றுக்கொன்று எதிர்முகமுள்ள வைகளுமாய் இருக்கக்கடவது; கேருபீன்களின் முகங்கள் கிருபாசனத்தை நோக்குகிறவைகளாயிருப்பதாக.'' – யாத்திராகமம் 25:19, 20.

இந்த தேவதூதர்கள் மனிதர்களை போலவே இருக்கிறார்கள், ஆனால் அவர்களுக்கு செட்டைகள் உண்டு "இரு செட்டைகள்" (1 இராஜாக்கள் 8:7). ஆகவே அவை "ஆவிகளாக" இருந்தாலும் மெய்யான சரீரம் கொண்ட மெய் ஜீவன்களாக இருக்கின்றன. அவர்களுடைய சரீரம் நம்முடைய சரீரத்திலிருந்து மிகவும் மாறுபட்டது. அவை புவி ஈர்ப்பு சக்தியை எதிர்த்து மிகுந்த வேகத்தில் பறக்கக் கூடியவை. அவை தங்களை மறைத்து பல்வேறு அளவிலான வடிவங்களையும் உருவங்களையும் தரித்துக் கொள்ள முடியும். அவை தங்களை மனித கண்களுக்கு காண்பிக்கவோ மறைக்கவோ செய்யலாம். ஆபிரகாமின் நாட்களில் பரலோக தூதர்கள் இருவர் "மனித" உருவத்தில் கர்த்தரோடு வந்தார்கள்.

''பின்பு கர்த்தர் மம்ரேயின் சம பூமியிலே அவனுக்கு தரிசன மானார். அவன் பகலின் உஷ்ணவேளையில் கூடாரவாசலிலே உட்கார்ந்திருந்து, தன் கண்களை ஏறெடுத்து பார்க்கும்போது, இதோ, மூன்று புருஷர் அவனுக்கு எதிரே நின்றார்கள்...'' – ஆதியாகமம் 18:1, 2.

இப்போது பிசாசுகளாக இருக்கும் லூசிபரும் அவனுடைய தூதரும் ஜனங்களை ஆட்கொள்ளுகின்றன. ஒரு நாள் கிறிஸ்து "லேகியோன்" எனப்படும் ஒரு சேனை பிசாசுகள் பிடித்திருந்த ஒருவனை விடுதலையாக்கினார் (மாற்கு 5:8,9 பார்க்கவும்). அதில் இருந்த பிசாசுகள் மூன்று முதல் ஆறு ஆயிரங்கள் வரையிருக்குமாம்! இது ஆவிக்குரிய ஜீவன்கள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்ற அளவில் குறையவோ கூடவோ செய்யலாம் என்பதை காண்பிக்கிறது.

தேவனும் ஆவிக்குரிய ஜீவனாயிருக்கிறார். அதனால் தேவனுக்கு நிச்சயமான ஓர் சரீரமும் வடிவமும் இல்லை என்று அர்த்தமா? இல்லை என்று நினைக்கிறேன். ஆம், தேவன் முடிவானவரும், முடிவற்றவரும், சிருஷ்டிக்கப்படாத ஆவிக்குரிய ஜீவனுமாக இருப்பதால் தேவன் என்னவாக இருக்கிறார் அல்லது என்ன செய்கிறார் என்பதற்கு ஒரு எல்லையே இல்லை. அவர் விரும்பினால், அண்டசராசரத்தை விட பெரியவராகவும், சிறு அணுவைக் காட்டிலும் சிறியவராகவும் இருக்க முடியும். ஏசாயாவில் அவர் இவ்வாறு சொல்லுகிறார்:

கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், ''**வானம் எனக்கு சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி; நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது? நான் தங்கியிருக்கும் ஸ்தலம் எப்படிப் பட்டது?**'' – ஏசாயா 66:1. அதே சமயம் இந்த பெரிய தேவன் மனித இருதயத்திற்குள் வாசம் பண்ணும் அளவிற்கு சிறியவராகவும் இருக்க முடியும்! அதனால் தேவனுக்கு சரீரமும் அமைப்பும் இல்லையென்றாகி விடுமா? மனிதன் தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்டான் என்று வேதம் கூறுகிறது.

''**பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக...**'' – ஆதியாகமம் 1:26. தேவனுடைய "ரூபம்" என்பது எதைக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி நிபுணர்கள் பல நூற்றாண்டுகளாக விவாதித்து வருகிறார்கள். அநேகர் அந்த உருவம் மனிதனுடைய ஆவிக் குரிய அம்சத்தை குறிப்பதாக உள்ளது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் மனிதன் வெறும் ஆவிக்குரிய ஜீவன் மட்டுமல்ல, அவனுக்கு சரீரமும் உண்டு, நன்னெறி திறன்களும் உண்டு என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

''**நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனு டைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக் கிறீர்களா?**'' – 1 கொரிந்தியர் 3:16

''**உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிற தென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர் களா? கிரயத்துக்கு கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு**

உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.'' – 1 கொரிந்தியர் 6:19, 20.

நாம் "**தேவனுடைய ஆலயமாக**" இருக்கிறோம்; நம்முடைய "**சரீரம் தேவனுடைய ஆலயமாக இருக்கிறது.**" ஆகவே மனிதனின் ஆவிக்குரிய அம்சங்களுடன் சரீர மற்றும் நன்னெறி அம்சங்களையும் விட்டுவிடாதிருக்க வேண்டும். சரீர அம்சத்திற்கும் தேவனுடைய ரூபத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்றால் நம்முடைய ''சரீரம்'' ஏன் ''தேவனுடைய ஆலயம்'' எனப்பட வேண்டும்?

தேவன் நம்மை முற்றிலுமாக, அதாவது சரீர, நன்னெறி, மற்றும் ஆவிக்குரிய காரியங்களை பரிசுத்தமாக்க வேண்டுமென்று விரும்புவதாக அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினார்: ''**சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்த மாக்குவாராக, உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப் படுவதாக.**'' – 1 தெசலோனிக்கேயர் 5:23.

சுவிசேஷத்தின் இலக்கு மீட்டெடுப்பதாகும். மனிதன் தேவனுடைய ரூபத்தில் உருவாக்கப்பட்டான், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலமாக தேவன் அந்த ரூபத்தை மீண்டும் அவனுக்கு கொடுக்க விரும்புகிறார். இதனால்தான் நாம் ''ஆவி, ஆத்துமா, சரீரத்தில்'' கவனம் செலுத்த வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அதுவே நம் ஜீவனின் மனோரீதியான, ஆவிக்குரிய, சரீர அம்சங்களாகும்.

தீர்க்கதரிசியாகிய எசேக்கியேல் தேவன் தம் சிங்காசனத்தில் வீற்றிருக்கக் கண்டார். அவர் சிங்காசனத்தில் தாம் கண்டவரை ''மனுஷ சாயலில்'' இருந்ததாக விவரிக்கிறார். ''**அவைகளின் தலைகளுக்கு மேலுள்ள மண்டலத்தின்மீதில் நீல ரத்தினம் போல விளங்கும் ஒரு சிங்காசனத்தின் சாயலும், அந்த சிங்காசனத்தின் சாயலின் மேல் மனுஷசாயலுக்கு ஒத்த ஒரு சாயலும் இருந்தது.**''
– எசேக்கியேல் 1:26

மனோரீதியான, ஆவிக்குரிய, மற்றும் சரீர அம்சங்களில் தேவன் என்னவாக இருக்கிறார் என்பதன் மங்கலான பிரதிபலிப்பே மனிதன். இந்த மூன்று அம்சங்களிலும் தேவன் மனிதனைக்

காட்டிலும் எல்லையில்லா மேன்மையுள்ளவராக இருக்கிறார். ஆனால் தேவனுடைய சாயலிலும் ரூபத்திலும் உண்டாக்கப்பட்டிருப்பது மனிதனுக்கு என்னவொரு மேன்மை இல்லையா...?

21. நாம் கொண்டிருப்பது போன்ற பாலினம் தேவனுக்கு உண்டா? அவர் ஆணா, பெண்ணா?

வேதம் இவ்வாறு கூறுகிறது: ''**தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை...**'' – யோவான் 1:18. எனவே, தேவன் ஆணா, பெண்ணா என்று யாராலும் சொல்ல முடியாது. தேவன் தம் பரிசுத்த வேதத்தில் வெளிப்படுத்தியிருப்பதன் மூலம் மட்டுமே நாம் தேவனை அறிந்து கொள்ளலாம். வேதத்தின் முதல் புத்தகத்தின் முதல் அதிகாரம் தேவன் யார் மற்றும் அவருடைய தோற்றம் எப்படி இருக்கும் என்பதை சிறிதளவு கண்டு கொள்ள உதவுகிறது. வேதம் பின்வருமாறு பதிவு செய்கிறது:

''**தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.**'' – ஆதியாகமம் 1:27. "**ஆணும் பெண்ணுமாகிய**" ஆதாமும் ஏவாளும் தேவனுடைய ரூபத்தின் படி உண்டாக்கப்பட்டார்கள் என்று மேலேயுள்ள வேதப்பகுதி குறிப்பிடுகிறது. எனவே, தேவன் ஆணா, பெண்ணா? தேவன் சீனாய் மலை மீது இறங்கி வந்தபோது தமக்கு ஒரு உருவத்தையும் உண்டாக்க வேண்டாமென்றும், தமக்கு எவ்வித பாலினப் பிரிவுகளும் கொடுக்க வேண்டாமென்றும் கூறினார்.

''**கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசின நாளில், நீங்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை. ஆகையால் நீங்கள் உங்களை கெடுத்துக்கொண்டு, ஆண் உருவும், பெண் உருவும், இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்கும்...**'' – உபாகமம் 4:15–18.

தேவன் பாலினத்திற்கு மேற்பட்டவர் என்பதையும், நாமறிந்த அனைத்திற்கும் அப்பாற்பட்டவர் என்றும் நாம் முக்கியமாக விளங்கிக் கொள்ள வேண்டும். இயேசு கூறியது: ''**தேவன் ஆவியாயிருக்கிறார்.**'' – யோவான் 4:24. ஆவிக்குரிய ஜீவன்கள்

சுபாவத்தில் மனுஷரைப் போல இருப்பதில்லை. வேறொரு இடத்தில் ஆவிகளைப் பற்றி பொதுவாக பேசும் போது இயேசு இவ்வாறு குறிப்பிட்டார்:

''**எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே...**''– லூக்கா 24:39. (சங்கீதம் 104:4 பார்க்கவும்). உயிர்த்தெழுதலின் காலை வேளையில் இயேசு வரும்போது தேவனுடைய பரிசுத்தவான்கள் அனைவருக்கும் ஓர் ஆவிக்குரிய சரீரம் கொடுக்கப்படும். இதைக் குறித்து பவுல் பின்வருமாறு எழுதினார்: ''**ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்...**'' – 1 கொரிந்தியர் 15:44. "**ஆவிக்குரிய சரீரத்தில்**" இப்போதிருக்கும் "**இயற்கை சரீரத்தை**" போல பாலின வித்தியாசங்கள் இருப்பதில்லை. கர்த்தராகிய இயேசு பின்வருமாறு கூறினார்: ''**உயிர்த்தெழுதலில், கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை; அவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப் போல் இருப் பார்கள்.**'' – மத்தேயு 22:30.

தேவதூதர்களுக்கு பாலின வேறுபாடுகள் இல்லை. ஆகவே அவர்கள் திருமணம் செய்து கொள்ளுவதோ சந்ததிகளை உருவாக்குவதோ இல்லை. நாமும் ஆவிக்குரிய சரீரத்தைப் பெற்றுக் கொள்ளப் போவதால் பாலினத்தைப் பொறுத்த வரை தேவதூதர்களைப் போல இருப்போம். "ஆவியாயிருக்கிற" தேவனும் ஆண், பெண் என்னும் இந்த அடைப்புக்குறிக்குள் வருவதில்லை.

தேவனையும் அவருடைய கிரியைகளையும் விவரிக்க வேதம் பெரும்பாலான சமயங்களில் ஆண்பாலை உபயோகிக்கிறது என்பது உண்மைதான். வேதம் முழுவதிலும் தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும், பரிசுத்த ஆவிக்கும் ஆண் பெயர்கள் உபயோகிக்கப்படுகின்றன. தேவனுக்கான நாமங்களான யாவே, ஏலோஹீம், ஷடாய், சாபோத். அடோனை, கியூரியஸ், மற்றும் தியோஸ் ஆகியவை ஆண்பால் பெயர்களாக இருக்கின்றன. ஆண்பால் உருவகங்களும் வழக்கமாக தேவனுக்காக பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும், சில இடங் களில் தேவன் பெண்பால் ரூபம் அல்லது உருவகத்தினால் சித்தரிக்கப்படுகிறார் என்பதும் உண்மையே. உதாரணமாக, ''**இப்பொழுது பிள்ளை பெறுகிறவளைப் போலச் சத்தமிட்டு...** '' – ஏசாயா 42:14. யாக்கோபின் சந்ததியாரே இஸ்ரவேல் சந்ததியில்

மீதியாகிய சகல ஜனங்களே, எனக்கு செவிகொடுங்கள்; தாயின் வயிற்றில் தோன்றினது முதல் உங்களை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல் உங்களைத் தாங்கினேன் – ஏசாயா 46:3.

ஆனால் வேதத்தில் எப்போதுமே தேவன் ''அவர்'', ''அவருடைய'', அல்லது ''அவர்தாமே'' என்ற பிரதி பெயர்ச்சொற்களால்தான் குறிப்பிடப்படுகிறார், ஒருபோதும் ''அவள்'', ''அவளுடைய'' அல்லது ''அவள்தாமே'' என்று குறிப்பிடப்படுவதில்லை. கர்த்தருடைய ஜெபத்தில் தேவனை எப்படி அழைப்பது என்றும் இயேசு காண்பித்தார். **''பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக...''** – மத்தேயு 6:9. இயேசு என்ற நபர் மூலம் பிதா தம்மை உலகத்துக்கு வெளிப் படுத்தத் தெரிந்து கொண்டதால், தேவத்துவத்தின் இரண்டாம் நபர் மனித உருவெடுத்த போது ஆண்பாலைத் தெரிந்து கொண்டார். தேவன் தம்மை வெளிப்படுத்த ஆண்பாலைத் தெரிந்து கொண்டா ரென்றால், தேவன் பாலின வரம்புகளுக்கு அப்பாற்பட்டவர் என்று நாம் அறிந்திருந்தாலும், அதை மாற்ற நமக்கு எந்த உரிமையும் இல்லை!

22. யோவான் 1:1இன் அர்த்தம் என்ன? எவ்வாறு ''வார்த்தை'' ஒரே சமயத்தில் ''தேவனோடு'' இருக்கவும், ''தேவனாக'' இருக்கவும் முடியும்?

யோவான் தம் சுவிசேஷத்தை எழுதியதன் நோக்கத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அவர் தம் சுவிசேஷத்தின் இறுதியில் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''**இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.**'' – யோவான் 20:31.

அவர் இயேசு யார் என்று காண்பிக்க விரும்பினார்; தம் வாசகர் களுக்கு இயேசு அண்டசராசரத்தின் தேவனுடன் கொண்டிருந்த உறவை வெளிப்படுத்த விரும்பினார். இந்த இலக்கை மனதில் வைத்துதான் யோவான் தம் சுவிசேஷத்தைத் தொடங்கினார்: ''**ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தி லிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே**

தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.'' – யோவான் 1:13. அதே அதிகாரத்தின் பிற்பகுதியில் ''வார்த்தை'' என்பவர் யார் என்று தம் வாசகர்களுக்கு வெளிப்படுத்துகிறார். ''**அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.''** – யோவான் 1:14. அவர் இயேசுவை **"வார்த்தையாக"** அறிமுகப்படுத்துகிறார். வார்த்தை எண்ணத்தின் வெளிப்பாடாக இருக்கிறது. இயேசு கேட்கும்படி வெளியே வந்த தேவனின் எண்ணமாக இருக்கிறார். அவருடைய வார்த்தையினால் சிருஷ்டிப்பு உண்டானதால் அவர் **"வார்த்தை"** எனப்படுகிறார். தேவனுடைய வார்த்தையை அதன் முழுமையாகவும், அதன் மெய்யான அர்த்தத்துடனும் நிறைவேற்றவும் அதன்படி வாழவும் வந்ததால் அவர் **"வார்த்தை"** எனப்படுகிறார்.

ஆகவே, இயேசு "வார்த்தையாகவும்", பிதா "தேவனாகவும்" இருக்கிறார்கள். இவ்விரு வார்த்தைகளின் அர்த்தத்தை இந்த பத்தியில் பொருத்தினால், அதில் எவ்வித குழப்பமும் இல்லாதது தெளிவாகும். ''**ஆதியிலே வார்த்தை (இயேசு) இருந்தது, அந்த வார்த்தை (இயேசு) தேவனிடத்திலிருந்தது (பிதா), அந்த வார்த்தை (இயேசு) தேவனாயிருந்தது இயேசுவும் தேவனாயிருந்தார்). அவர் (இயேசு) ஆதியிலே தேவனோடிருந்தார் (பிதா).''** – யோவான் 1:12. இயேசு ஆதி முதற்கொண்டே அநாதியாக பிதாவாகிய தேவனுடன் இருந்தார் என்று கூறுகிறார் யோவான். பிதாவாகிய தேவனோடு இணைந்து ஒரே சமயத்தில் இருந்த அவர் தம் பிதாவை போலவே இயல்பில் தேவனாக இருக்கிறார்! பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் எப்போதும் அமர்ந்த இயேசு அவருடைய ஸ்தானத்தை பகிர்ந்து கொண்டார். அநாதி காலமாக அவருடைய மகிமையிலும் கனத்திலும் பங்கு கொண்டிருந்தார்.

17 ஆம் அதிகாரத்தில், கெத்சமனேயில் ஜெபிக்கும் போது, ஆதி முதல் தாம் பிதாவுடன் கொண்டிருந்த மகிமையைப் பற்றி தம் பிதாவிடம் பேசினார். அவர் சொன்னது பின்வருமாறு: ''**பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில்**

எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்.'' – யோவான் 17:5. ஆம், இயேசு ஆதிமுதலே தம் பிதாவுடன் இருந்தார். பிதா தேவனாயிருப்பதால், இயேசுவும் தேவனாகவே இருக்கிறார். இதைத்தான் யோவான் சுவிசேஷத்தின் முதல் மூன்று வசனங்கள் எடுத்தியம்புகின்றன!

23. தேவன் "அழியாமையுள்ளவர்" (1 தீமோத்தேயு 6:16), அதாவது தேவன் ஒருபோதும் மரிக்க முடியாது என்று வேதம் எடுத்துக் காண்பிக்கிறது. சிலுவையில் அழியாமையுள்ள தேவன் மரித்ததுண்டா?

தேவனுக்கு நேரிடவே செய்யாத சில காரியங்கள் உண்டு. அவற்றுள் சில ''**தேவன் அழியாமையுள்ளவர் என்பதால் அவர் ஒருபோதும் மரிக்க முடியாது**'' (1 தீமோத்தேயு 6:16); ''**தேவன் சத்தியபரராக இருப்பதால் அவர் ஒருபோதும் பொய் சொல்ல முடியாது**'' (யோவான் 14:6); ''**தேவன் வழியாக இருப்பதால் அவரால் ஒருபோதும் தவறு செய்யவே முடியாது**'' (யோவான் 14:6); ''**தேவன் முற்றிலும் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்**" (வெளிப்படுத்தல் 4:8) என்பதால் அவரால் ஒருபோதும் பாவம் செய்ய முடியாது. மற்றும் இது தேவத்துவத்தில் இருக்கும் மூன்று நபர்களுக்கும் பொருந்தும்.

தேவத்துவத்தின் இரண்டாம் நபராகிய இயேசு "**உலகத்தின் பாவத்தைப் போக்க**" "**தேவ ஆட்டுக்குட்டியாக**" வந்தார் (யோவான் 1:29). மனுக்குலத்தின் சார்பாக பாவத்திற்கான பரிகாரத்தை செலுத்த வந்தார். "**பாவத்தின் சம்பளம் மரணம்**" (ரோமர் 6:23) என்று வேதம் வெளிப்படுத்துகிறது. கடைசி நாளில் பாவிகள் ருசித்திருக்க வேண்டிய நித்திய மரணமாகிய "**இரண்டாம் மரணத்தை**" (வெளிப்படுத்தல் 21:8) ருசித்தார். அதேசமயம் உலகத்தில் உள்ள ஒவ்வொருவருக்காகவும் மரித்ததின் நிமித்தம் எல்லோருக்கும் அந்த அருளைப் பொழிகிறார். வேதம் பின்வருமாறு கூறுகிறது:

''**தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு...**'' – எபிரேயர் 2:9. இது நடப்பதற்கு தெய்வீகமும் அழியாமையும் கொண்ட தேவகுமாரன் தம்மீது மனித சாயலை ஏற்றுக் கொண்டு, தம் தெய்வீகத்தின் மீது

மனுஷீகத்தைத் தரித்துக் கொண்டார். தேவனைத் தவிர வேறு யாரும் காணாமல் போனவர்களை தேடி இரட்சித்திருக்க முடியாது. ஜீவனை உருவாக்கக் கூடிய தேவனுடைய சர்வ வல்லமை மட்டுமே ஜீவனை மீட்க முடியும். பூமியின் தூளிலிருந்து மனுஷனை உருவாக்கிய தேவன் மட்டுமே (ஆதியாகமம் 2:7) பூமியின் தூளிலிருந்து அவனை மீட்கவும் முடியும். ஆகவே, மரித்துக் கொண்டிருக்கும் மனுக்குலம் மீண்டும் வாழ்வு பெறுவதற்கான வழிவகுக்க தேவன் இறங்கி வரவேண்டியதாயிற்று.

அவருடைய மனித சுபாவம் சோதனைக்கு ஆளானது. ஆனால் அவர் அதற்கு ஒருபோதும் அடிபணியவில்லை, ஏனெனில் அவர் தம் பிதாவை முற்றிலுமாக சார்ந்து கொண்டு, எப்போதும் ஜெபம் பண்ணி விழித்திருந்தார். ''**இயேசு எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவ மில்லாதவராயிருக்கிற...**'' எபிரேயர் 4:15 என்பதை வேதம் வெளிப் படுத்துகிறது.

அவர் பாவமே செய்யாதபடியால், மனித ரூபமெடுத்திருந்தாலும், மரிக்க முடியவில்லை. ஆனால் அவர் நாம் தப்பிக் கொள்ள வழி செய்வதற்காக சிலுவையில் தாமாகவே உலகத்தின் பாவங்களை தம்மீது ஏற்றுக் கொண்டார். அவர் கூறியது பின்வருமாறு: ''**நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு. இந்த கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார்.**'' – யோவான் 10:17, 18.

சிலுவையில் இயேசுவின் மனுஷீகம் மரித்தது, ஆனால் அவருடைய தெய்வீகம் மரிக்கவில்லை, ஏனெனில் அது ஒருபோதும் மரிக்க முடியாது. அவருடைய தெய்வீகத்துக்கு துவக்கமும் முடிவும் இல்லை. பெத்லகேம் முன்னணையில் பிறந்த அவருடைய மனுஷீகம் கல்வாரி சிலுவையில் மரித்தது. சிலுவையில் மரித்தது அவருடைய தெய்வீகமாக இருந்தால் (ஏனெனில் அது ஒருபோதும் மரிக்க முடியாது), பின்னர் எப்படி அவர், "**எனக்கு அதைத் (ஜீவனை) திரும்ப எடுக்கும் அதிகாரம் உண்டு**" என்று சொல்லியிருக்க

முடியும்**?** அந்த உயிர்த்தெழுதலின் காலை வேளையில் அவருடைய தெய்வீகம் மனுஷீகத்தை எழுப்பியது**.** அதனால்தான் அவரால் பின்வருமாறு சொல்ல முடிந்தது: ''**நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்**'' – யோவான் 11:25.

அழியாமையுள்ள தேவன் அழிவைத் தம்மீது ஏற்றுக் கொண்டு, இயேசு செய்த இந்த காரியத்தினால் அழிவுள்ள மனுஷர்களாகிய நாம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அழியாமை என்னும் வரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அப்போஸ்தலர் பின்வருமாறு எழுதுகிறார்:

''**அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.**'' – 1 கொரிந்தியர் 15:5357.

---

24. பிதா தமக்கும் தேவனாயிருக்கிறார் என்று இயேசு கூறினார். "நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்'' – (யோவான் 20:17) என்றார். தேவன் எவ்வாறு தமக்கு மேலாக ஒரு தேவனை கொண்டிருக்க முடியும்?

இயேசு ஒரு மாபெரும் பரிமாற்றத்திற்காக உலகத்திற்கு வந்தார். நாம் அவருடைய தெய்வீக சுபாவத்திற்கு பங்குள்ளவர்கள் ஆகும் பொருட்டு அவர் நம்முடைய மனுஷ சுபாவத்தை ஏற்றுக் கொள்ள வந்தார். கிறிஸ்து நம் மனுஷ சுபாவத்தை ஏற்றுக் கொண்டதைப் பற்றி அப்போஸ்தலர் பின்வருமாறு எழுதுகிறார்:

''**ஆதலால், அவர் தேவதூதருக்கு உதவியாக கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாக கைகொடுத்தார். அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக,**

தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியாராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது.'' – எபிரேயர் 2:16, 17.

நாம் அவருடைய தெய்வீக சுபாவத்தில் பங்குள்ளவர்கள் ஆகும் பொருட்டு அவர் இவ்வாறு செய்தார் என்று எழுதினார் பேதுரு: ''**திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.**'' – 2 பேதுரு 1:4. மனுஷருடைய குமாரரும் குமாரத்திகளுமாகிய நாம் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளும் ஆகுமாறு தேவகுமாரன் மனுஷகுமாரன் ஆனார்!

''**அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.**'' – யோவான் 1:12.

இயேசு உலகத்திலிருந்தபோது எப்போதும் சர்வ வல்லவரை தனிப்பட்ட விதத்தில் ''பிதா'' என்று அழைத்தார். இயேசு மனிதனாக வருவதற்கு முன்னர் பழைய ஏற்பாட்டில் தேவபிள்ளைகள் சர்வ வல்லமையுள்ள தேவனை ''பிதா'' என்று அழைத்ததே இல்லை. இயேசு செய்ய வந்த இந்த மாபெரும் பரிமாற்றம் மனுக்குலம் சர்வ வல்லவரை ''பிதா'' என அழைக்கும் சுதந்திரத்தை கொடுத்தது. அவர் கர்த்தருடைய ஜெபத்தை கற்பித்தபோது பின்வருமாறு கூறினார்: ''**நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது; பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே...**'' – மத்தேயு 6:9

கெத்சமனேயில் இயேசு சர்வ வல்லவரிடம் ஜெபித்த போது, அவரை பிதாவே என்று அழைத்தார். அவர் ஜெபித்தது பின் வருமாறு: ''**என் பிதாவே...**'' – மத்தேயு 26:39. ஆனால் ஒருமுறை, கல்வாரியில் அந்த மூன்று மணிநேர இருள் கடந்து போன பின்னர் இயேசு சர்வ வல்லவரை தேவன் என்று அழைக்கிறார். ''**என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?**'' – மத்தேயு 27:46.

பிரிவை உணர்ந்த அவருக்கு அது தாங்கிக் கொள்ள முடியாததாக இருந்தது. மீண்டும் அங்கு ஒரு மாபெரும் பரிமாற்றம்

நடந்தது. நாம் ஏற்றுக் கொள்ளப்படும்படி அவர் கைவிடப்பட்டார்! கல்வாரியில் நமக்காக இயேசு செய்த காரியத்தினால் வானமும் பூமியும் ஒன்றுக்கொன்று மிகவும் நெருங்கி வந்தன. மூன்று தெய்வீக ஜீவன்களுக்கும் இடையிலிருந்த ஒருமனம் குறிப்பிட்ட அளவிற்கு நமக்கும் கொடுக்கப்பட்டது. இயேசு இவ்வாறு ஜெபித்தார்:

‘‘**அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.**’’ – யோவான் 17:21, 23. மனித சுபாவத்தை எடுத்துக் கொண்டு அதைத் தரித்துக் கொண்டதால் இயேசு மெய்யாக நம் சகோதரரானார். வேதம் இதை பின்வருமாறு வெளிப்படுத்துகிறது: ‘‘**எப்படியெனில், பரிசுத்தஞ் செய்கிறவரும் பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவரால் உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களை சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்...**’’ – எபிரேயர் 2:11.

அவர் உலகத்தில் இருந்த போது நம்முடைய மூத்த சகோதரராய் எல்லாவற்றிலும் நமக்கு மாதிரியாக இருந்தார். நம் தேவன் அவருடைய தேவனும், அவருடைய பிதா நம் பிதாவுமானார். அதனால் தான் அவர் பின்வருமாறு சொன்னார்: ‘‘**நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்**’’ – யோவான் 20:17. சர்வ வல்லமையுள்ள தேவன் முதலாவது அவருக்குத்தான் பிதாவாக இருந்தார், நமக்கல்ல. அவர் முதலாவது நமக்குத்தான் தேவனாக இருந்தார், அவருக்கல்ல! சர்வ வல்லவர் நம்முடைய தொடர்பில் அவருக்கு தேவனாகவும், அவருடைய தொடர்பில் நமக்கு பிதாவாகவும் ஆனார்!

இயேசு வேறு விதத்தில் தம் பிதாவை தேவன் என்று அழைத் திருந்தாலும் அதில் ஒன்றும் தவறில்லை, ஏனெனில் பிதாவும் வேதத்தில் இயேசுவை தேவன் என்று குறிப்பிடுகிறார்! ‘‘**குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.**’’ – எபிரேயர் 1:8.

25. "திரித்துவம்" என்பது வேதத்தில் காணப்படாத போதும் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அதனை விசுவாசிப்பது ஏன்?

முதலில் நாம் திரித்துவத்தை வரையறுப்போமாக. திரித்துவம் என்னும் பதம் மூவரும் ஒருவரே என பொருள்படும் இலத்தீன் பெயர்ச் சொல்லான ட்ரினிடஸ் என்பதிலிருந்து வருகிறது. தேவன் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூன்று நபர்களாக இருக்கிறார் என்னும் விசுவாசத்தை உறுதிப்படுத்தும் பதம் தான் திரித்துவம். ஒவ்வொரு நபரும் முழுமையாக தேவனாக இருப்பதோடு, அவர்கள் ஒருசேர ஒரே தேவனுமாக இருக்கிறார்கள்.

திரித்துவம் என்ற பதம் பரிசுத்த வேதத்தில் காணப்படவில்லை என்பது உண்மைதான். திரித்துவத்தின் கருத்தை தெளிவாகக் கற்பித்தால், இந்தப் பதம் வேதத்தில் இல்லாதது அதை நம்பாதிருக்கச் செய்ய நல்லதொரு காரணமாகி விடுமா?

கிறிஸ்தவர்கள் சத்தியமாக நம்பும் மற்றும் அநேக வார்த்தைகள் வேதத்தில் காணப்படவில்லை. உதாரணமாக, "வேதாகமம்" என்னும் வார்த்தை வேதத்தில் இல்லை! இருப்பினும் எல்லோரும் இந்த பரிசுத்த புத்தகத்தை பரிசுத்த வேதாகமம் என்றே அழைக்கிறார்கள்! வேதாகமம் (Bible-பைபிள்) என்னும் சொல் புத்தகம் என்னும் பொருள்படும் கிரேக்கச் சொல்லான பிபிளோஸ் (Biblos) என்பதிலிருந்து எடுக்கப்பட்டது. (இந்த கிரேக்கப் பதத்திலிருந்து எடுக்கப்பட்ட மற்றும் சில ஆங்கில வார்த்தைகள் பட்டியல் அல்லது புத்தகம் எனப் பொருள்படும் bibliography (பிப்ளியோக்ராஃபி), மற்றும் புத்தக விரும்பி எனப் பொருள்படும் biblophile (பிப்ளோஃபைல்) ஆகியவையாகும்). வேதாகமம் என்னும் சொல் அந்த புத்தகம் முழுவதிலும் இல்லாததினால் வேதாகமம் என்னும் சொல்லையும், இந்த புத்தகத்தில் இருக்கும் காரியங்களையும் யாரேனும் புறக்கணிக்க முடியுமா?

திரித்துவம் என்ற சொல் வேதாகமத்தில் இல்லாத காரணத்தினால் திரித்துவத்தின் உபதேசத்தை புறக்கணிப்பவர்கள் இதையே ஆதாரமாகக் கொண்டு ஒரே தேவக் கொள்கை என்ற பதம் வேதத்தில் இல்லாததால் ஒரே தேவக் கொள்கை

உபதேசத்தையும் புறக்கணிக்க வேண்டும்! ஒரே தேவக் கொள்கை என்பது தேவன் ஒருவரே என்று சொல்லுவது. ஒரே தேவக் கொள்கையின் போதனைகள் வேதத்தில் காணப்படுகிறது என்பது நாம் அறிந்ததே. ஆகவே, இதை விவரிக்கும் வார்த்தை அந்த புத்தகத்தில் இல்லாதிருப்பினும் அது சத்தியமானதே.

வேதத்தில் குறிப்பிடப்படாதிருந்தும் வேதாகமத்தில் தெளிவாக விவரிக்கப்படுகிற மற்றுமொரு வார்த்தையைக் கவனிப்போம். அது நாத்திகம் என்னும் வார்த்தையாகும். நாத்திகம் என்பது தேவன் இல்லை என்பதான போதகம் ஆகும். நாத்திகம் அல்லது நாத்திகன் என்ற பதங்கள் வேதத்தில் இல்லை என்றாலும் அந்த கருத்து வேதத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. நாத்திகம் என்ற வார்த்தை வேதாகமத்தில் இல்லையென்பதால் இதைப் பற்றி வேதாகமம் ஒன்றுமே சொல்லவில்லை என்று யாராவது விவாதிக்க முடியுமா? இல்லவே இல்லை!

திரித்துவம் என்ற பதம் வேதத்தில் காணப்படவில்லை என்றாலும் அதன் அர்த்தம் பரிசுத்த வேதத்தில் தெளிவாக கொடுக்கப் பட்டுள்ளது. இந்தப் புத்தகத்தில் விளக்கியிருக்கும் திரித்துவத்தைப் பற்றிய கருத்தை வெளிப்படுத்தும் சில வசனங்கள் பின்வருமாறு: **''ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து''** – மத்தேயு 28:19. **''கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவ ரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.''** – 2 கொரிந்தியர் 13:14. **''நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது என்றென் றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்கு தந்தருளுவார். உலகம் அந்த சத்திய ஆவியானவரை''** – யோவான் 14:16, 17

''பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்'' – 1 யோவான் 5:7